விலை : 20.00
பக்கங்கள் : இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com, valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 ஆடி 08 சனிக்கிழமை (23.07.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 217

# பல்லின கலாசாரத்தை தெற்கு ஏற்றுக் கொள்ளுமா?



## பல்கலை மோதல் குறித்து மனோ பேச்சு

(கொழும்பு) தென்னிலங்கையில் உள்ள பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் பேராசிரியர்கள் சமூகத்தினால் அவர்களுடைய பீடங்களில் நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து அதிலே நாதஸ்வரம், மேள தாளம் என்ற தமிழ் கலாசார அடையாளங்களை உள்வாங்கி நாங்கள் பல்லின, பன்மொழி பன்மைத்தன்மை கலாசாரத்துக்கு தயார் என எடுத்துக் காட்டுங்கள் என தேசிய சகவாழ்வு கலந்துரையாடல் மற்றும் அரசகரும மொழிகள் அமைச்சருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார். (23ஆம் பக்கம் பார்க்க)

## அனைத்து பீடங்களும் விரைவில் இயங்கும்

### யாழ்.பல்கலை மோதல் நிலைமை சீர்செய்யப்பட்டதாக அறிவிப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழகத்தில் தமிழ்-சிங்கள மாணவர்களிடையே நடைபெற்ற மோதல் சம்பவம், அதற்கு பின்னராக காணப்பட்ட அசாதாரண நிலைமை ஆகியன சுமுகமான முறையில் முடிவுக்கு கொணடு வரப்பட்டுள்ளது 23ஆம் பக்கம் பார்க்க....

க.பொ.த (உ/த)
பரீட்சை
மாதிரி வினாத்தாள்
கணக்கீடு பகுதி II
தமிழ் பகுதி I,II



உள்ளே...

## “முகாம்களை மூடினால் மட்டும் மீள்குடியேற்றம் முழுமையாகாது”

(யாழ்ப்பாணம்)

முகாம்களை மட்டும் மூடுவதை நோக்கமாகக்கொண்டு மீள்குடியேற்றம் நடைபெற்றால் வலி.வடக்கில் இருந்து இடம்பெயர்ந்து வெளி இடங்களில் வசிப்பவர்கள் புதிய நலன்புரி நிலையங்களை உருவாக்க தொடங்குவார்கள் எனவே சமகாலத்தில் அனைத்து மக்களும மீள்குடியேற்றப்படவேண்டும் என வலி. வடக்கு மீள்குடியேற்றப் புனர்வாழ்வுச் சங்க தலைவர் அ.குணபாலசிங்கம் தெரிவித்துள்ளார்.

இவ் விடயம் தொடர்பாக வலி வடக்கு மீள்குடியேற்றப் புனர்வாழ்வுச் சங்கத் 24ஆம் பக்கம் பார்க்க....

## சங்குப்பிட்டி பாலம் அருகே விபத்து!

# பொலிஸ் உட்பட இருவர் பலி




(பரந்தன்)

கிளிநொச்சி பூநகரி சங்குப்பிட்டி பாலத்திற்கு அருகில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் பொலிஸ் உத்தியோகத்தர் உட்பட இருவர் உயிரிழந்துள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு இடம் பெற்ற இவ்விபத்தில் யாழ்ப்பாணம் திருநெல்வேலி மாரியம்மன் வீதியைச் சேர்ந்த கதிரவேலு கபிராஜ் (வயது 26) என்ற ஒரு பிள்ளையின் தந்தையும் 23ஆம் பக்கம் பார்க்க....

## மக்களது காணிகளை விடுவியுங்கள் வடக்கு இளைஞர்கள் போராட்டம்




(யாழ்ப்பாணம்)

இலங்கை இராணுவம் வசமுள்ள தமிழ் மக்களது காணிகளை விடுவிக்குமாறு கோரி காங்கேசன் துறை இராணுவ முகாம் முன்பாக வடக்கு இளைஞர்களால் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. 24ஆம் பக்கம் பார்க்க....

## யாழ்.நகரின் அபிவிருத்திக்காக

# 55 மில்லியன் டொலர்களை உலக வங்கி வழங்க முடிவு

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகரின் அபிவிருத்திக்கென 55 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்க உலக வங்கி முன்வந்துள்ளது.

நேற்றையதினம் யாழ்ப்பாணம் வருகை தந்த உலக வங்கி பிரதிநிதிகள், வடக்கு மாகாண முதலமைச்சரினை அவரது அலுவலகத்தில் 24ஆம் பக்கம் பார்க்க....

# வெறுமனே மத்தியின் கையாட்களாக வேலைசெய்து கொண்டிருக்க முடியாது

## அதிகாரப் பகிர்வுக்கு காத்திருக்கிறோம் – சி.வி

(யாழ்ப்பாணம்)

தமிழ் தரப்பு அதிகாரப்பகிர்வை நோக்கி காத்திருப்பதாக உலக வங்கி பிரதிநிதிகளிடம் தெரிவித்துள்ள வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், வெறுமனே நாங்கள் மத்தியின் கையாட்களாக வேலை செய்துகொண்டிருக்க முடியாது எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

பல்வேறு வெளிநாட்டு நிறுவனங்களை உள்ளடக்கிய பிரதிநிதிகளை கொண்ட உலக வங்கி பிரதிநிதிகளான பீற்றர் டி எலிஸ், சீனித்தம்பி மனோகரன், ரெசிக்கா சமல்மித், சென் ஆகியோர் நேற்றைய தினம் யாழ்ப்பாணம் வருகை தந்து முற்பகல் பதினொரு மணியளவில் வடக்கு மாகாண முதலமைச்சரை அவரது வாசல் 24ஆம் பக்கம் பார்க்க....

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## வைரஸ் காய்ச்சலே மரணத்திற்கு காரணம்

(கரணவாய்)

வடமராட்சி கிழக்கு குடத்தனைப் பகுதியில் வீடு ஒன்றில் இருந்து சடலமாக மீட்கப்பட்டவர் வைரஸ் காய்ச்சல் காரண மாகவே மரணமடைந்ததாக மருத்துவ அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 20ஆம் திகதி புதன்கிழமை நண்பகல் வேளையில் சதாசிவம் சிவகுமார் (வயது - 45) என்ற ஆணின் சடலம் பருத்தித்துறைப் பொலிஸாரினால் மீட்கப்பட்டது.

இது தொடர்பில் பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி திருமதி அன்ரலா வின்சன் தயாள் மரண விசாரணைகளை மேற்கொண்டு பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டார்.

பிரேத பரிசோதனை அறிக்கையில் வைரஸ் காய்ச்சலினால் இவர் மரண மடைந்தாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-60)

# நல்லிணக்க கலந்துரையாடல்



தேசிய ஒருங்கிணைப்பு, நல்லிணக்க அமைச்சின் எதிர்காலத் திட்டங்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு தெரியப்படுத்தும் ஒரு கலந்துரையாடல் நேற்று முற்பகல் ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நடைபெற்றது. தேசிய ஒருங்கிணைப்பு, நல்லிணக்க இராஜாங்க அமைச்சர் ஏ.எச். எம் பௌசி, அமைச்சின் செயலாளர் கலாநிதி எம் கணேசமூர்த்தி, இராஜாங்க அமைச்சின் செயலாளர் எம்.எம் சுஹைர் ஆகியோரும் இந் நிகழ்வில் கலந்துகொண்டனர். (செ-11)


## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரி விஞ்ஞான பாட ஆசிரியர்
திரு.பா.கோபிரமணா அவர்களின்
அன்புத் தாயார் திருமதி
**கமலாதேவி பாலகிருஸ்ணன்**
அவர்களின் மறைவால் துயருற்று
இருக்கும் குடும்பத்தினருக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின்
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்

ஆசிரியர் கழகம்,
யா/மகாஜனக் கல்லூரி.
தெல்லிப்பழை.


## தீயணைப்பு, அம்புலன்ஸ் வண்டிகள் 5 மாவட்டங்களுக்கு பகிர்ந்தளிப்பு



மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சினால் மாத்தளை, வவுனியா, கொழும்பு, யாழ்ப்பாணம் மற்றும் அம்பாறை மாவட்டங்களில் தீயணைப்பு பிரிவிற்காக தீயணைப்பு வாகனங்கள் மற்றும் அம்புலன்ஸ் வண்டிகளை வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றதோடு அவ்வாகனங்களுக்கான திறப்புக்களை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உத்தியோகபூர்வமாக வழங்கி வைத்தார்.

34 மில்லியன் ரூபா பெறுமதியான இரண்டு தீயணைப்பு வண்டிகளும் 9 மில்லியன் ரூபா பெறுமதியான 5 அம்புலன்ஸ் வண்டிகளும் இம் மாவட்டங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டது.

மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சர் பைசர் முஸ்தபா, இராஜாங்க அமைச்சர் பிரியங்க ஜயரட்ன, மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் கமல் பத்மசிறி ஆகியோரும் இந் நிகழ்வில் கலந்துகொண்டனர். (செ-11)

## பெறுகை அறிவித்தல்
## வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்
## கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டம்-2016

01.தவிசாளர், பெறுகைக்குழு, வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம் அவர்களினால் தகுதிவாய்ந்த ஒப்பந்த காரர்களிடமிருந்து கீழ்க்குறிப்பிடப்பட்ட அட்டவணையில் காட்டப்பட்டுள்ள வேலைகளுக்காக பொறியிடப்பட்ட பெறுகை மனுப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

02.தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.

03.பெறுகைக்கு தகுதியுடையவராவதற்கு, வெற்றி பெறும் பெறுகைதாரர் கறுப்புப் பட்டியலில் (Black List) சேர்த்துக் கொள்ளப்படாதவராகவும், அட்டவணையிற் காட்டியபடி பொருத்தமான தரத்தில் வீதி அமைப்புக்கான இக்ராட் (ICTAD) பதிவுள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.

04.பெறுகைதாரர்கள் வலிகாமம் தெற்கு பிரதேச சபை, தலைமை அலுவலகத்தில மேலதிக தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் அலுவலக நாட்களில் காலை 09.00 மணி முதல் மாலை 15.00 மணிவரை, 25.07.2016 ஆம் திகதி தொடக்கம் 15.08.2016 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.

05.ஆர்வமுள்ள பெறுகைதாரர்கள் ஆங்கிலமொழியில் மட்டும் உள்ள பெறுகை ஆவணங்களை கே.கே.வீதி சுன்னாகத்தில் அமைந்துள்ள வலிகாமம் தெற்கு பிரதேச சபையில் 25.07.2016 தொடக்கம் 15.08.2016 ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் மு.ப 9.00 மணி முதல் 15.00 மணி வரையான மீளளிக்கப்படாத பணமாக ரூபா.2000/- செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.

06.பெறுகை ஆவணங்களின் மூலப்பிரதி, இணைப்பிரதி என்பனவற்றை 16.08.2016ஆம் திகதி பி.ப 2.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியவாறு தவிசாளர், பிரதேசசபை பெறுகைக் குழு, வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம் எனும் முகவரிக்கு பதிவுத்தபாலிலோ அல்லது அலுவலகத்திலுள்ள பெறுகைப்பெட்டியினுள் நேரடியாகவோ இடப்படல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட பெறுகைகள் நிராகரிக்கப்படும். பெறுகைதாரர்கள் வேலைக்கான பெறுகை விபரத்தினை தபாலுறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். பெறுகைப் பத்திரங்கள் அனைத்தும் பெறுகைநேர முடிவில் உடனடியாகத் திறக்கப்படும். இதில் பெறுகைதாரரோ அல்லது அவரால் எழுத்துமூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி ஒருவரோ கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவர்.

07.பெறுகை தொடர்பான முதற் கூட்டம் வலிகாமம் தெற்கு பிரதேச சபை, தலைமை அலுவலகத்தில் 03.08. 2016 ஆம் திகதியன்று மு.ப 10.00 மணிக்கு நடைபெறும்.

08.கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமைவதுடன் குறித்த தொகை அலுவலகத்தில் பணமாகச் செலுத்தப்பட வேண்டும்.

09.கிடைக்கப்பெற்ற பெறுகைகளை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ நிராகரிப்பதற்கும் மீள் பெறுகை கோரலைக் கோருவதற்கும் பெறுகைக் குழு தலைவருக்கு அதிகாரம் உள்ளது.

| இல | வேலை விபரம் | மதிப்பீட்டு தொகை மில்லியனில் (Vat நீங்கலாக) | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | கேள்வி பிணை வைப்பு (ரூபா) |
|---|---|---|---|---|---|
| 1 | வீதிப்புனரமைப்பு (தொகுதி 01) -உடுவில் | 5.84 | 03 மாதம் | M7/C8 | 60,000.00 |
| 2 | வீதிப்புனரமைப்பு (தொகுதி 02) -சுன்னாகம் | 6.44 | 03 மாதம் | M7/C8 | 65,000.00 |
| 3 | வீதிப்புனரமைப்பு (தொகுதி 03) -ஏழாலை | 4.16 | 03 மாதம் | M7/C8 | 42,000.00 |

தவிசாளர்
பிரதேச சபை பெறுகைக்குழு
வலிகாமம் தெற்கு பிரதேச சபை, சுன்னாகம். (சி-5272)

## கிளிநொச்சியில் தந்தை, மகன் மீது இராணுவச் சிப்பாய் தாக்குதல்!

கிளிநொச்சி முழங்காவில் பிரதேசத்தில் விடுமுறையில் வந்த இராணுவ சிப்பாய் ஒருவரின் தாக்குதலுக்குள்ளான நிலையில் அதே இடத்தைச் சேர்ந்த தந்தையும், மகனும் கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது.

முழங்காவில் விஜி வீதியைச்சேர்ந்த செல்லத்துரை துரைசிங்கம் என்பவரும், அவரின் மகன் கௌதமன் (வயது 23) என்பவருமே முழங்காவில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்று வருகின்றனர்.

மேற்படி தாக்குதல் சம்பவம் கடந்த 20ஆம் திகதி புதன்கிழமை இரவு 8 மணிக்கு அவர்களது வீட்டிலேயே இடம்பெற்றுள்ளது.

குறித்த இராணுவச் சிப்பாய் தமிழ் இளைஞன் எனவும் அண்மையில் இராணுவத்தில் இணைந்துக்கொண்ட நிலையில் விடுமுறையில் வீடு சென்ற போதே அயல் வீட்டாரான மேற்படி தந்தையையும், மகனையும் கடந்த கால கொடுக்கல் வாங்கல் பிணக்கு ஒன்று காரணமாக தான் யார் என்று தெரியுமோ என்ற கடும் தொனியில் கேள்வி எழுப்பியவாறு தாக்கியுள்ளதாக பாதிக்கப்பட்டு கிகிச்சைப் பெற்று வருகின்றவர்கள் குறிப்பிடுகின்றனர். மேலும் சம்பவம் தொடர்பில் குறித்த இராணுவ சிப்பாய் முழங்காவில பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு பின்னர் பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார். (செ-312)


### வேலையாட்கள் தேவை

முல்லைத்தீவு பகுதியில்
தோட்டவேலைக்கு ஆட்கள்
தேவை.
தொடர்புக்கு : 0771681697
0772105322


## ஒட்டுசுட்டான் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் வருடாந்த பொதுக்கூட்டம்-2016


மேற்படி கூட்டமானது எதிர்வரும் 2016.07.25 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு ஒட்டுசுட்டான் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் தலைவர் மு.இராசலிங்கம் தலைமையில் நடைபெற இருப்பதால் அனைத்து அங்கத்தவர்களும் தவறாது கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

**ஒட்டுசுட்டான் கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம்** (சி-5274)

# கனவு ஒருபோதும் பலிக்காது! ஆட்சி ஐந்தாண்டுகள் தொடரும்

பிரதமர் ரணில் தெரிவிப்பு

19 ஆம் பக்கம் பார்க்கவும்...




## வடக்கில் யுத்தத்தால் பாதிப்புக்குள்ளான வாகனங்களுக்கு காப்புறுதி கொடுப்பனவு

2006 முதல் 2009 வரையிலான யுத்தகாலத்தின்போது வட பகுதியில் பாதிப்புக்குள்ளான வாகனங்கள் மற்றும் உடைமைகள் யுத்தம், வேலை நிறுத்தம் மற்றும் கலவரம் போன்ற காரணங்களை உள்ளடக்கிய முழுக்காப்புறுதி செய்யப்பட்டிருந்ததுடன் பாதிப்புக்குள்ளான காலத்தில் செல்லுபடியாகக் கூடியதாக இருந்தும் இதுவரை காப்புறுதி நிறுவனங்களிடம் இருந்து எவ்வித காப்புறுதி நிவாரணமும் பெற்றுக் கொள்ளாதவர்கள் காப்புறுதி சம்பந்தப்பட்ட அனைத்து விபரங்களையும் யாழ். வணிகர் கழகத்தில் நேரடியாகவோ அல்லது இல. 165, மானிப்பாய் வீதியில் அமைந்துள்ள அதன் அலுவலகத்திற்கு தபால் மூலமாகவோ அறிவிக்கலாம்.

மேலதிக விபரங்களை 021 222 8593 இலக்க தொலைபேசி மூலமாகவும் அறிந்து கொள்ள முடியும். இது தொடர்பாக ஒருங்கிணைந்த முயற்சியை முன்னெடுப்பதனூடாக காப்புறுதி நட்டஈட்டை பெற வணிகர் கழகம் பொருத்தமானநடவடிக்கையை மேற்கொள்ளும் என வணிகர் கழகத்தின் செயலாளர் இ.ஜனக்குமார் அறிவித்துள்ளார். (இ)

# வறுமையை ஒழிப்பது தான் நல்லிணக்கத்துக்கான வழி

ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு



(கொழும்பு)

**நாட்டிலிருந்து வறுமையை ஒழிப்பதும் அபிவிருத்தியை அடைந்துகொள்வதுமே இலங்கையின் கொளகை எனவும் அதுவே நாட்டில் நல்லிணக்கத்தை உறுதி செய்வதற்கான வழி என்றும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.**

போர்த்துக்கல், அயர்லாந்து, மெக்சிக்கோ மற்றும் கிரீஸ் ஆகிய நாடுகளுக்கான புதிய தூதுவர்களிடமிருந்து நியமனக் கடிதங்களைப் பெற்றுக் கொண்டதன் பின்னர் அவர்கள் மத்தியில் உரையாற்றிய போதே ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேற்கண்டவாறு தெரிவித்தார். இநநிகழ்வு நேற்றுமுன்தினம பிற்பகல் கொழும்பு கோட்டையிலுள்ள ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்றது. (இ-10)

## ஏழு அரச நிறுவனங்களை விற்கத் தயாராகும் அரசு!

(கொழும்பு)

ஏழு அரச நிறுவனங்களை விற்பதற்கு அரசு தயாராகி வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மத்தள ராஜபக்ஷ விமான நிலையம் உள்ளிட்ட 7 நிறுவனங்களை ஒன்றாக விற்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மத்தள விமான நிலையம்,ஹில்டன் ஹோட்டல், லங்கா ஹொஸ்பிட்டல், ஹயிட் ரிஜின்சி ஹோட்டல் போன்ற நட்டத்தில் இயங்கிவரும் அரச நிறுவனங்களே விற்கப்படவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, மத்தள விமான நிலையத்தை விற்பதற்கான விண்ணப்பங்கள் அடுத்த மாதம் 12ஆம் திகதி முதல் விநியோகிக்கப்படவுள்ளதாகவும் அரசு தெரிவித்துள்ளது.

அத்துடன் மத்தள விமான நிலையத்தை வருடத்திற்கு 10 இலட்சம் பயணிகள் பயன்படுத்துவதற்கான வசதிகள் காணப்பட்டும், நாளொன்றுக்கு இரண்டு விமானங்களே இங்கு தரையிறங்குவதாகவும் அரசு சுட்டிக்காட்டியுள்ளது. (இ-5-7)

## இந்திய உயர்மட்ட குழுவினர் ஓகஸ்டில் இலங்கை வருகை

இந்திய மத்திய அரசின் உயர் மட்ட குழுவினர் ஓகஸ்ட் மாதம் 10 ஆம் திகதி இலங்கைக்கு வரவுள்ளனர்.

அரசாங்கத்தின் அழைப்பின் பேரில் வரும் இந்த உயர் மட்டக்குழுவினர் மூனறு நாட்கள் இலங்கையில் தங்கியிருப்பதுடன் ஜனாதிபதி மற்றும் பிரதமர் உள்ளிட்ட முக்கியஸ்தர்களை சந்தித்து கலந்துரையாடவுள்ளனர்.

ஒகஸ்ட் மாதம் 11 மற்றும் 12 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ள மனித வள உச்சி மாநாட்டில் கலந்து கொள்ளும் நோக்கிலேயே தகவல் தொழில்நுட்ப, உள்ளூராட்சி நிர்வாகம் மற்றும் நகர அபிவிருத்தி மத்திய மைச்சர் கே.டி. ராமாராஹோ தலைமையிலான குழுவினர் இலங்கைக்கு வரவுள்ளனர்.

உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் சர்வதேச தொழிலாளர் அமைப்புடன் இணைந்து அரசாங்கம் மனித வள உச்சி மாநாட்டினை ஏற்பாடு செய்துள்ளது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் உலக வங்கியின் பணிப்பாளர் கலாநிதி அமிட் றோர் ஆகியோர் விசேட உரை நிகழ்த்தவுள்ளனர்.

இலங்கை - இந்திய கூட்டு ஆணைக்குழுவில் தீர்மானிக்கப்பட்ட உத்தேச பொருளாதாரம் மற்றும் தொழில்நுட்ப கூட்டு ஒப்பந்தம் குறித்து இந்திய மத்தியரசின் உயர் மட்ட குழுவினர் அவதானம் செலுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (இ-10)

# மின்சார நாற்காலி பீதியை மகிந்ததான் ஏற்படுத்தினார்

## அமைச்சர் ஹாசிம் தெரிவிப்பு



முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவே மின்சார நாற்காலி பீதியை ஏற்படுத்தியிருந்தார் என அமைச்சர் கபிர் ஹாசிம் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற வளாகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.அவர் மேலும் தெரிவிக்கையில்,

மகிந்த மின்சார நாற்காலி பீதியை ஏற்படுத்தியிருந்தார். இன்று மின்சார நாற்காலி பற்றிய கதைகள் இல்லை.

இந்த அரசாங்கத்திற்கு தற்போது 11 மாதங்கள் கடந்துள்ளன, பிரதான அரசியல் கட்சிகள் இணைந்து இந்த அரசாங்கத்தை நடத்துகின்றன.

**ஐக்கிய தேசியக் கட்சியினதும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினதும் கொள்கைகள் ஒன்றுக்கு ஒன்று முரணாக அமையலாம்.** எனினும் நாம் பொதுவான ஓர் இணக்கப்பாட்டின் அடிப்படையில் செயற்படுகின்றோம்.

மகிந்த ராஜபக்ஷ சுமார் பத்து ஆண்டுகள் ஜனாதிபதியாக கடமையாற்றினார், எதிர்க்கட்சித்தலைவர், பிரதமர், நாடாளுமன்ற உறுப்பினர் என பதவி வகித்துள்ளார்.

அந்தக் காலங்களில் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்காத மகிந்த தற்போது மக்களின் பிரச்சினைகள் என குரல் கொடுத்து வருகின்றார்.

அந்தக் காலத்தில் மகிந்த பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்க முயற்சிக்கவில்லை. தேவை என்றால் அந்தக் காலத்தில் மக்களுக்கு சிறந்த சேவை ஆற்றியிருக்க முடியும்.

**தற்போது கூட்டு எதிர்க்கட்சி என்ற ஒன்றை அமைத்து சுதந்திரக் கட்சியின் அதிகாரத்தை கைப்பற்ற முயற்சிக்கின்றார்.**

குற்றச் செயல்களில் ஈடுபட்ட, களவு மோசடிகளில் ஈடுபட்டதாக குற்றம் சுமத்தப்பட்டவர்கள் இணைந்தே கூட்டு எதிர்க்கட்சியை உருவாக்கியுள்ளனர். குற்றச்சாட்டுக்களிலிருந்து தப்பித்துக் கொள்ள அவர்கள் இவ்வாறு செய்கின்றார்கள்.

இன்று மின்சார நாற்காலி கிடையாது, சர்வதேசத்திடம் நாம் மண்டியிடவில்லை, பொருளாதாரத் தடைகள் கிடையாது.மகிந்தவால் பத்து ஆண்டுகளில் செய்ய முடியாதவற்றை நாம் ஒரு ஆண்டில் செய்துள்ளோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-10)

## எரிபொருளின் விலை உயர்த்தப்படமாட்டாது

அரசு அறிவிப்பு

(கொழும்பு)

எரிபொருளின் விலை உயர்த்தப்படமாட்டாது என அரசாங்கம் அறிவித்துளளது.

அரசாங்கத்தின் வருமானத்தை அதிகரித்துக்கொள்ள எரிபொருள் விலை உயர்த்தப்படவுள்ளதாக செய்யப்படும் பிரசாரங்களில் உண்மையில்லை என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

வற்வரி உயர்விற்கு எதிராக விதிக்கப்பட்டுள்ள நீதிமன்ற இடைக்கால தடை காரணமாக அரசாங்கம் எரிபொருள் விலையை உயர்த்த உள்ளதாக சில தரப்பினர் தெரிவித்திருந்தனர்.

**எனினும் அரசாங்கம் வேறும் வழிகளில் வருமானத்தை ஈட்டிக்கொள்ளும் எனவும்எரிபொருள் விலை யை உயர்த்தாது எனவும் அரசாங்கத் தகவல்கள் தெரிவிப்பதாக கொழும்பு ஊடகமொன்று செய்தி வெளியிட்டுளளது. (இ-10)**

## இலங்கை அகதிகள் இந்தியாவில் கைது

தமிழகத்தில் உள்ள இலங்கை அகதிகள் சிலர் சட்ட விரோதமாக அவுஸ்திரேலியாவிற்கு செல்ல முற்பட்ட போது கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவர்கள் சென்ற படகும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

குமரி மாவட்டம் முட்டம் பகுதியிலிருந்து படகு மூலம் அவுஸ்திரேலியாவுக்கு தப்பிக்க முயன்றபோது, குற்றப் பிரிவு பொலிஸார் 14 இலங்கை அகதிகளை கைது செய்துள்ளனர்.

இதன்போது பிடிக்கப்பட்ட குறித்த படகு, சின்னமுட்டம் துறைமுகத்தில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக இந்திய செய்திகள் தெரிவிக்கின்றன.

இதனிடையே, அந்தப் படகில் பல ஆயிரம் லீற்றர் டீசல் இருப்பது தெரியவந்ததால், பாதுகாப்பு கருதி, கன்னியாகுமரியை அடுத்த சின்ன முட்டம் மீன்பிடித் துறைமுகத்தில் அந்தப் படகு நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. (இ-10)

## பாகிஸ்தானுக்கு நான்கு விமானங்களை குத்தகைக்கு வழங்குகின்றது இலங்கை


இலங்கையின் ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ்'க்கு சொந்தமான 4 விமானங்களைகுத்தகைக்குபெற்றுக்கொளவது தொடர்பான பேச்சுக்கள் இடம்பெறுவதை பாகிஸ்தானின் தேசிய விமான நிறுவனம் உறுதிப்படுத்தியுள்ளது.

**ஏற்கனவே இந்த செய்தி இலங்கை தரப்பால் மாத்திரம் கூறப்பட்ட செய்தியாக வெளியாகியிருந்தது.**

**இந்த நிலையில், குத்தகையின் அடிப்படையில்கொழும்பு - லண்டன் ஆகிய இடங்களுக்கு இடையில் சேவைகளை எதிர்வரும் ஓகஸ்ட் 14 ஆம் திகதி முதல் நடத்துவதற்கு எதிர்பார்ப்பதாக பாகிஸ்தான் எயாரை கோடிட்டு எக்ஸ்பிரஸ் ட்பியூன் தெரிவித்துள்ளது.**

**குறித்த விமானங்கள், விமானிகள் மற்றும் சேவைகளுடனேயே குத்தகைக்கு பெறப்படவுள்ளதாகவும் அந்த எயார் நிறுவனம் குறிப்பிட்டுள்ளது. (இ-10)**

# விராட் ஹோலி இரட்டை சதம் வலுவான நிலையில் இந்தியா



மேற்கிந்திய தீவுகள் அணிக்கெதிரான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் விராட் ஹோலி பெற்ற இரட்டை சதத்தின உதவியுடன இந்திய அணி கணிசமான ஓட்டங்களைப் பெற்றுள்ளது.

இந்தியா- மேற்கிந்திய தீவுகள் அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் அன்டிகுவா மைதானத்தில் நேற்று முன்தினம் தொடங்கியது. முதல் நாள் ஆட்டநேர முடிவில் இந்தியா 4 விக்கெட் இழப்பிற்கு 302 ரன்கள் குவித்திருந்தது. விராட் ஹோலி 143 ரன்னுடனும், அஸ்வின் 22 ரன்னுடனும் களத்தில் இருந்தனர்.

நேற்று 2-வது நாள் ஆட்டம் தொடங்கியது. ஹோலியும், அஸ்வினும் நங்கூரம் போன்று நிலைத்து நின்று விளையாடினார்கள். விராட் ஹோலி 150 ரன்னைக் கடந்து வீறுநடை போட்டார். அவருடன் இணைந்து அஸ்வின் தனது 7-வது அரை சதத்தை பதிவு செய்தார்.

நேற்றைய 2-வது நாள் மதிய உணவு இடைவேளையின் கடைசி ஓவரில் விராட் ஹோலி இரட்டை சதத்தை தொட்டார். இதன் மூலம் தனது முதல் இரட்டை சதத்தை பதிவு செய்தார். இந்தியாவின் ஸ்கோரும் 400 ரன்னை தாண்டியது. மதிய உணவு இடைவேளை வரை இந்தியா 119 ஓவர்கள் முடிவில் 4 விக்கெட் இழப்பிற்கு 404 ரன்கள் குவித்துள்ளது.

இந்த இரட்டை சதம் மூலம் மேற்க்கிந்திய மண்ணில் இந்திய கப்டன் ஒரு இன்னிங்சில் அதிக ரன்கள் அடித்த வீரர் என்ற பெருமையை பெற்றார். இதற்கு முன் ராகுல் டிராவிட் 146 ரன்கள் எடுத்ததுதான் அதிகபட்ச ரன்னாக இருந்தது. (க)

( இச் செய்தி அச்சுக்கு போகும் போது இந்தியா- 06 விக்கெட் இழப்புக்கு - 512 ஓட்டங்கள் பெற்றுள்ளது)

# அலஸ்டர் குக், ஜோ ரூட் சதம் இங்கிலாந்து சிறப்பான ஆரம்பம்

இங்கிலாந்து- பாகிஸ்தான் கிரிக்கெட் அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் முடிவடைந்துள்ள நிலையில், 2-வது டெஸ்ட் நேற்று மாஞ்செஸ்டரில் உள்ள ஓல்டு டிராஃப்போர்டில் தொடங்கியது. லோர்ட்ஸ் மைதானத்தில் நடைபெற்ற முதல் போட்டியில் இங்கிலாந்து 75 ரன்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது. இதனால் முதல் போட்டியில் இடம்பெறாத பென் ஸ்டோக்ஸ், அண்டர்சன் ஆகியோர் இங்கிலாந்து அணியில் சேர்க்கப்பட்டனர். லோர்ட்ஸில் விளையாடிய அதே பாகிஸ்தான் அணிதான் இந்த போட்டியிலும் களம் இறங்கியது.



நாணய சுழற்சியில் வென்ற இங்கிலாந்து அணி கப்டன் அலைஸ்டர் குக் பட்டிங் தேர்வு செய்தார். அதன்படி குக்கும், ஹேல்சும் தொடக்க வீரர்களாக களம் இறங்கினார்கள.



7-வது ஓவரை மொகமட் அமிர் வீசினார். இந்த ஓவரின் கடைசி பந்தில் 10 ரன்கள் எடுத்திருந்த ஹேல்ஸ் கிளீன் போல்டாகி வெளியேறினார். அடுத்து ஜோ ரூட் களம் இறங்கினார்.

வேகப்பந்து வீச்சுக்கு பெரிய அளவில் ஒத்துழைக்காத வகையில் ஆடுகளம் இருந்ததால் குக், ரூட் சிரமமின்றி ரன்கள் சேர்த்தனர். இருவரும் நிலைத்து நின்று ஆட்டத்தை வெளிப்படுத்தினார்கள். இங்கிலாந்து அணி 15.2 ஓவரில் 50 ரன்னைத் தொட்டது. முதல் நாள் மதிய உணவு இடைவேளையின்போது அந்த அணி 27 ஓவரில் ஒர விக்கெட் இழப்பிற்கு 95 ரன்கள் எடுத்திருந்தது. ஜோ ரூட் 41 ரன்னுடனும், குக் 40 ரன்னுடனும் களத்தில் இருந்தனர்.

உணவு இடைவேளைக்குப்பிறகு இருவரும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார்கள். அமிர், ரஹத் அலி, ரியாஸ், யசீர் ஷா எவ்வளவோ முயற்சி செய்தும் விக்கெட்டை கைப்பற்ற முடியவில்லை.

இங்கிலாந்து அணி 89 ஓவர்கள் முடிவில் 4 விக்கெட் இழப்பிற்கு 314 ரன்கள் எடுத்துள்ளது. ரூட் 141 ரன்னுடனும்,வோக் 02 ரன்னுடனும் களத்தில் உள்ளனர் போட்டியின் இரண்டாம் நாள் ஆட்டம் இலங்கை நேரப்படி பிற்பகல் 3.30 மணிக்கு ஆரம்பமாகும் (க)

# டரன் சமியின் அதிரடியால் செயின்ட் லூசியா வெற்றி

கரீபியன் பிரீமியர் லீக் தொடரில் டரன் சமி 35 பந்தில் 59 ரன்கள் குவித்ததால் செயின்ட் லூசியா சௌக்ஸ் அணி 35 ரன்கள வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

கரீபியன் பிரீமியர் லீக் தொடரில் நேற்று நடைபெற்ற லீக் போட்டியில் டரன் சமியின் செயின்ட் லூசியா சௌக்ஸ் அணியும், டு பிளிசிஸ் தலைமையிலான செயின்ட் கிட்ஸ் அண்டு நெவிஸ் பேட்ரியாட்ஸ் அணியும் மோதின.

நாணய சுழற்சியில் வென்ற செயின்ட் கிட்ஸ் அண்டு நெவிஸ் பேட்ரியாட்ஸ் அணி களத்தடுப்பை தேர்வு செய்தது. அதன்படி செயின்ட் லூசியா சௌக்ஸ் அணி பட்டிங்கை தொடங்கியது. தொடக்க வீரர்களாக சார்லஸ், பிளெட்சர் ஆகியோர் களம் இறங்கினார்கள்.

சார்லஸ் 14 பந்தில் ஒரு பவுண்டரி, 2 சிக்சர்களுடன் 25 ரன்கள் சேர்த்தார். பிளெட்சர் 6 ரன்னில் அவுட் ஆகி ஏமாற்றம் அளித்தார். அதன்பின் வந்த வோட்சன் 15, மைக் ஹசி 26,மில்லர் 11 ரன்களில் அடுத்தடுத்து அவுட் ஆனார்கள்.

6-வது வீரராக களம் இறங்கிய டரன் சமி அதிரடியாக விளையாடினார். சிக்சர்களாக விளாசிய அவர் 35 பந்தில் 2 பவுண்டரி, 5 சிக்சர்களுடன் 59 ரன்கள் குவித்தார். இவரது அதிரடியால் செயின்ட் லூசியா சௌக்ஸ் 20 ஓவர்கள் முடிவில் 9 விக்கெட் இழப்பிற்கு 174 ரன்கள் குவித்தது. செயின்ட் அண்டு நெவிஸ் பேட்ரியாட்ஸ் அணியின் அல்சாரி ஜோசன் 4 விக்கெட்டுக்கள் வீழ்த்தினார்.

பின்னர் 175 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் செயின்ட் கிட்ஸ் அண்டு நெவிஸ் பேட்ரியாட்ஸ் அணி பேட்டிங்கை தொடங்கியது. சிம்மன்ஸ், லெவிஸ் ஆகியோர் தொடக்க வீரர்களாக களம் இறங்கினார்கள்.

சிம்மன்ஸ் 15 ரன்னிலும், லெவிஸ் 7 ரன்னிலும் ஆட்டம் இழந்தனர். அடுத்து வந்த ஸ்மட்ஸ் 18 பந்தில் 30 ரன்னும், டு பிளிசிஸ் 37 பந்தில் 48 ரன்னும் எடுத்து அணியை சரிவில் இருந்து மீட்டனர்.

அதன்பின வந்த வீரர்கள் பொறுப்பில்லாமல சொற்ப ரன்களில் அவுட் ஆக செயின்ட்ஸ் கிட்ஸ் அண்டு நெவிஸ் பேட்ரியாட்ஸ் அணியால் 20 ஓவர்கள் முடிவில் 9 விக்கெட் இழப்பிற்கு 139 ரன்கள் மட்டுமே எடுக்க



முடிந்தது. இதனால் டரன் சமியின் அணி 35 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

இந்த வெற்றியின் மூலம் செயின்ட் லூசியா சௌக்ஸ் அணி 5 போட்டிகளில் விளையாடி 2 வெற்றி, 3 தோல்விகளுடன 5-வது இடத்தில் உள்ளது. செயின்ட் கிட்ஸ் அண்டு நெவிஸ் பேட்ரயாட்ஸ் 8 போட்டிகளில் ஒன்றில் மட்டும வெற்றி பெற்று கடைசி இடத்தில் உள்ளது. (க)

## ரியோ ஒலிம்பிக் போட்டியில் சிறப்பாக செயல்படுவோம்

### சானியா நம்பிக்கை



ரியோ ஒலிம்பிக்கில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்துவோம் என்று நட்சத்திர டென்னிஸ் வீராங்கனை சானியா மிர்சா நம்பிக்கை தெரிவித்துள்ளார்.


இந்தியாவின் நட்சத்திர டென்னிஸ் வீராங்கனை சானியா மிர்சா ஐதராபாத்தில் நேற்று நடைபெற்ற பேஷன் ஷோ விழாவில் கலந்துகொண்டார். அப்போது நிருபர்களை சந்திதத அவர், (இன்று) 'நாளை கனடா வுக்கு செல்கிறேன். பின்னர் அங்கிருந்து ரியோ ஒலிம்பிக் தொடருக்காக பிரேசில் புறப்படுகிறேன். இந்த பயணத்தை நான் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். நாம் பெரிய அணியுடன் அங்கு செல்கிறோம். நான் மிகவும் உற்சாகமாக இருக்கிறேன். ரியோவில் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்துவோம் என்ற நம்பிக்கை உள்ளது" என்றார்.

ஒலிம்பிக் போட்டியில் சானியா மிர்சா பெண்கள் இரட்டையர் பிரிவில் பிரார்த்தனா தாம்பரேவுடனும், கலப்பு இரட்டையரில் ரோகன் போபண்ணாவுடனும் இணைந்து விளையாட இருக்கிறர் இந்த ஒலிம்பிக்கில்இந்தியா சார்பில் 100-க்கும்மேற்பட்ட வீர-வீராங்கனைகள் கலந்து கொள்ள இருக்கிறார்கள். (க)

## காணாமற் போனோர் அலுவலகத்தால்
# பாதுகாப்புக்கு குந்தகம் ஏற்பட்டால் உயர் நீதிமன்றம் உடன் தலையிடும்
## இராஜாங்க அமைச்சர் டிலான் கூறுகிறார்

(கொழும்பு)

**காணாமற்போனோர் தொடர்பில் விசாரணை செய்வதற்கான அலுவலகமொன்றை ஸ்தாபிப்பதானது வெறும் ஓர் அறிக்கை மாத்திரமே. அது சட்டமூலமாக்கப்படவில்லை. குறித்த அலுவலகத்தால் தேசிய பாதுகாப்புக்குக் குந்தகம் என அறியப்படுகின்ற பட்சத்தில் உயர் நீதிமன்றம் உடன் அதில் தலையிடும் என நெடுஞ்சாலைகள் இராஜாங்க அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்துள்ளார்.**



இதேவேளை "225ஆக இருக்கின்ற நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை 255ஆக அதிகரிப்பதற்கான தேவை ஒன்றுள்ளது.

பெரும்பான்மை ஆட்சி பலத்துடன் ஒரு கட்சி தனித்து ஆட்சியமைப்பதற்கு, தற்போதுள்ள முறைமை சிக்கலானதாகவுள்ளது. எனவே, இதனை மாற்றியமைப்பதற்கான ஏற்பாடு விரையில் முன்னெடுக்கப்படும் எனவும் அமைச்சர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

சுதந்திரக் கட்சியின் தலைமையகத்தில், நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

"அரசியலமைப்புச் சீர்திருத்தம் தொடர்பிலான ஆலோசனையைப் பெறுவதற்கு நோர்வே நாட்டைச் சேர்ந்த வல்லுநர் ஒருவர் வந்திருக்கின்றார். அவர் இந்த விடயம் தொடர்பிலான ஆய்வுகளை முன்னெடுத்து வருகின்றார். ஜேர்மனி, பிரான்ஸ் போன்ற பல நாட்டுச் சட்டங்கள் தொடர்பிலான அறிவினை அவர் பரந்தளவில் கொண்டுள்ளார். அவருடைய கருத்தும் இந்த அரசியலமைப்பினுள் உள்வாங்கப்படவுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

"தொகுதிவாரிப் பிரதிநிதித்துவம், விகிதாசாரப் பிரதிநிதித்துவத் தேர்வு ஆகிய இவ்விரண்டு தேர்வு முறைகளின் மூலமும் 50 சதவீதமான தெரிவு முறைகளை மேற்கொள்வதற்குத் தீர்மானித்துள்ளோம். விகிதாசாரமோ, தொகுதிவாரியோ தனித்து நடைமுறைப்படுத்தப்பட மாட்டாது.

"குழப்பகரமான அரசியலமைப்புச் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படுவதாகவும் தற்போதைய அரசாங்கம், டீலிங்... முறையில் அமைக்கப்பட்ட அரசாங்கம் எனவும் விமல் வீரவன்ச தெரிவித்திருந்தார். ஆனால், குறித்த சீர்திருத்தக் குழுவுக்குள், ஒன்றிணைந்த எதிர்க்கட்சியினரும் அங்கத்துவம் வகிக்கின்றனர்.

"ஐக்கிய தேசியக் கட்சியுடன் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி டீலிங்.. முறையான ஆட்சியை செய்யவில்லை. நாங்கள் வெளிப்படையான முறையில் ஒப்பந்தங்களை மேற்கொண்டே ஆட்சியமைத்தோம்" என்றும் அவர் தெரிவித்தார். (இ-10)

## போதையில் கைகளை அறுத்துக் கொண்ட மாணவர்கள்; பொலிஸார் தீவிர விசாரணை

செவனகல பிரதேசத்தில் அமைந்துள்ள மிகவும் பிரபலமான பாடசாலையைச் சேர்ந்த மாணவர்கள் பலர் போதை தலைக்கேறிய நிலையில் தமது கைகளை அறுத்துக் கொண்ட சம்பவம் ஒன்று கடந்த வாரம் இடம்பெற்றுள்ளது.

பாடசாலை மாணவ, மாணவிகளின் கைகளில் காணப்பட்ட காயங்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட பாடசாலை அதிபர் மாணவர்கள் கஞ்சா உள்ளிட்ட போதைப்பொருட்களை பயன்படுத்தி போதை தலைக்கேறியதால் போத்தல்களை உடைத்து அதன் மூலம் தமது கைகளில் காயங்களை ஏற்படுத்திக் கொண்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், இந்த விடயம் தொடர்பாக அதிபர் செவனகல பொலிஸாருக்கு அறிவித்ததும் குறித்த மாணவர்களை கைது செய்த பொலிஸார் அவர்களிடம் விசாரணைகளை மேற் கொண்ட போது பல அதிர்ச்சியடையும் தகவல்களை மாணவர்கள் தெரிவித்திருப்பதாக குறிப் பிடப்பட்டுள்ளது. தாம் கஞ்சா உள்ளிட்ட போதைப்பொருளை உட் கொண்டதோடு, வேறு சில போதை தரக் கூடிய பானங்களையும் அருந்தியுள்ளதாக மாணவர்கள் தெரிவித்துள்ளனர். (இ-10)


## கரைச்சி தெற்கு பலநோக்கு கூட்டுறவுச் சங்கம்- (வ-து)
## கிளிநொச்சி

**அங்கத்தவர்களின் கவனத்திற்கு!**

கிளைப் பொதுச்சபைக்கு சமூகமளித்து. வாக்களிக்கத் தகுதியுடைய அங்கத்தவர் பட்டியல்கள்.

30.06.2016 ஆம் திகதியுடன் அங்கத்தவர் பட்டியல் முடிவுறுத்தப்பட்டு அத்திகதியில் கிளைப் பொதுச் சபைக்கு வாக்களிக்கத் தகுதியுடைய அங்கத்தவர் பட்டியல்கள் தயாரிக்கப்பட்டு கிளை நிலையங்களிலும் தலைமை அலுவலகத்திலும் இயங்காத கிளை நிலையங்களின் பட்டியல்கள் கிராம அலுவலர் அலுவலகத்திலும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

இப்பட்டியல்களிலுள்ள பெயர், முகவரியில் வேறுபாடுகளிருப்பின் அல்லது பெயர் தவறவிடப்பட்டிருப்பின் சங்கத்தின் செயலாளருக்கு எழுத்துமூலம் 22.07.2016 ஆம் திகதியிலிருந்து 08.08.2016 இற்கு முன் தெரிவிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

**இயங்காத கிளை நிலையங்களின் பட்டியல்கள் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ள இடம்**

| | |
|---|---|
| 01. கணேசபுரம்- | கிராம அலுவலர் அலுவலகம், கணேசபுரம் |
| 02.கனகபுரம்- | கிராம அலுவலர் அலுவலகம், கனகபுரம் |
| 03.திருநகர்- | கிராம அலுவலர் அலுவலகம், திருநகர் தெற்கு |
| 04.கிளி.மேற்கு- | கிராம அலுவலர் அலுவலகம், பெரியபரந்தன் |
| 05.உருத்திரபுரம் கிழக்கு- | கிராம அலுவலர் அலுவலகம், உருத்திரபுரம் கிழக்கு |
| 06.சிவநகர்- | மினிகோப்சிற்றி உருத்திரபுரம் வடக்கு |
| 07. புதுமுறிப்பு- | கிராம அலுவலர் அலுவலகம், புதுமுறிப்பு |
| 08.இரணைமடு கிழக்கு, கிளி.கிழக்கு- | கிராம அலுவலர் அலுவலகம், மருதநகர் |
| 09. கனகாம்பிகைக்குளம்- | கிராம அலுவலர் அலுவலகம், கனகாம்பிகைக்குளம் |
| 10. ஆனந்தபுரம்- | கிராம அலுவலர் அலுவலகம், ஆனந்தபுரம் |
| 11. உதயநகர்- | கிராம அலுவலர் அலுவலகம், உதயநகர் மேற்கு |
| 12. அம்பாள்குளம்- | கிராம அலுவலர் அலுவலகம், அம்பாள்குளம் |

**குறிப்பு:- அங்கத்தவராக இணைந்து ஒருவருடத்தை பூர்த்தி செய்த அங்கத்தவர்கள் வாக்களிக்க தகுதியுடைய அங்கத்தவர்களாகும்.**

**செயலாளர்,**
**கரைச்சி தெற்கு ப.நோ.கூ.சங்கம்,**
**கிளிநொச்சி.**

(சி-5269)


## துளசிகனின் ரத்தசாசனம் குறும்பட வெளியீட்டு விழா

உ. துளசிகனின் ரத்தசாசனம் குறும்பட வெளியீட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப 4 மணியளவில் யாழ். குப்பிளான் விக்னேஸ்வரா மகாவித்தியாலயத்தில் இடம் பெறும். வலி. தெற்கு பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர் பொன். சந்திரவேல் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் யாழ். போதனா வைத்தியசாலை பிராந்திய இரத்த வங்கி வைத்திய அதிகாரி தி. விஸ்வேதிதன் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார். தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைவைத்திய அட்சகர் க.இளங்கோஞானியார், ம,பிரதீபன், கிருபா லேணர்ஸ் உரிமையாளர் அ. கிருபாகரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-7)

# இராசி பலன்

23.07.2016
(ஆடி 08, சனிக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.03 மணிக்கு
சதுர்த்தி பின்னிரவு 12.56 மணிவரை
சதயம் பிற்பகல் 4.26 மணிவரை
சுபநேரம் 3.02-4.32 மணிவரை
இராகுகாலம் 9.02-10.32 மணிவரை
சங்கடஹர சதுர்த்தி விரதம்
வளவன்

**கிரகநிலை**

| | | | |
|---|---|---|---|
| | | | |
| சந் கேது | கிரகநிலை | | சூரி சுக் புத |
| | சந்திராஷ்டமம் பூசம், ஆயிலியம் | | குரு ராகு |
| | சனி செவ் | | |

**மேடம்:** பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், பயணங்கள் கைகூடுவதற்கான வாய்ப்புண்டு, தொலைபேசி வழியில் சுப தகவல்கள் வந்து சேரலாம்.

**இடபம்:** இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புண்டு, வருமானம் திருப்திதரும் வகையில் அமையும், ஆரோக்கியமான நாள், போசன சுகமுண்டு.

**மிதுனம்:** வழிபாட்டால் வளர்ச்சி காண வேண்டிய நாள், எதிலும் அவசரத்தை தவிர்ப்பது நல்லது, பகையொன்று நட்பாகலாம், உங்களின் கடின உழைப்பை மற்றவர்கள் வியப்பாகப் பார்ப்பர்.

**கடகம்:** உதவுவதாகச் சொன்ன உறவினர்கள் உங்களை விட்டு விலகலாம், ஆரோக்கியத்தில் அச்சுறுத்தல்கள் தோன்றி மறையும், ஆழ்ந்த சிந்தனையுண்டு.

**சிம்மம்:** கனவு பலிதமுண்டு, மனதில் நினைத்த புதிய திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றுவீர்கள், புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், தொலைபேசி வழித் தகவல் மகிழ்ச்சி தரும்.

**கன்னி:** குடும்பத்தில் உங்களின் செல்வாக்கு மேலோங்கும், மருத்துவச் செலவுகள் குறையும், எதிர்பார்த்த சலுகைகள் இயல்பாகவே வந்து சேரலாம், பகைவர்கள் விலகுவர்.

**துலாம்:** எதிர்பார்ப்புகள் நிறைவேறலாம், சுபகாரியப் பேச்சுக்கள் முடிவாகி மனநிம்மதியைக் கொடுக்கும், நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும், பிள்ளைகளின் நலனில் அக்கறை காட்டுவீர்கள்.

**விருச்சிகம்:** இல்லம்தேடி இனிய செய்திகள் வந்து சேரலாம், பயணங்களால் பலனுண்டு, பாராட்டும் புகழும் கூடும் நாள், வளர்ச்சிப் பாதையை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள்.

**தனுசு:** குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், மனதில் புதிய சிந்தனைகள் தோன்றும், பொருளாதார நிலையில் முன்னேற்றமுண்டு.

**மகரம்:** முன்கோபமும் அலைச்சலும் ஏற்படலாம், பக்குவமாகப் பேசி காரியம் சாதிக்க வேண்டிய நாள், தேகநலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**கும்பம்:** புதிய பொறுப்புக்களால் வேலைச் சுமை அதிகரிக்கலாம், உடல் நலனில் கவனம் தேவை, ஆதாயம் தரும் வேலையொன்றில் அக்கறை காட்டுவீர்கள், பெரிய மனிதர்களின் தொடர்புகள் அதிகரிக்கும்.

**மீனம்:** உறவினர் சிலரின் அன்புக் கட்டளைக்கு ஆட்பட நேரிடலாம், பயணங்களால் தேகநலன்கள் பாதிக்கப்படலாம், தொழிலில் சில மாற்றங்களைச் செய்ய முற்படுவீர்கள்.

# பனை மரங்கள் எறிகணை வீச்சால் சிரச்சேதம்



## முதலமைச்சர் சி.வி. சுட்டிக்காட்டு

**(யாழ்ப்பாணம்)**

**வடமாகாணத்தில் இலட்சக்கணக்கான பனை மரங்கள் பதுங்கு குழிகள் அமைப்பதற்கும் காப்பரண்கள் அமைப்பதற்கும் என பெருமளவில் தறித்து வீழ்த்தப்பட்டுள்ளன. எஞ்சிய பனை மரங்கள் பல தொடர் எறிகணை வீச்சுக்களால் சிரச்சேதம் செய்யப்பட்டு அழிக்கப்பட்ட நிலையிலுள்ளன என வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் சுட்டிக்காட்டியுள்ளார்.**

வடமாகாண பனை அபிவிருத்தி வாரத் தொடக்க நிகழ்ச்சி நேற்று வெள்ளிக்கிழமை யாழ். பொது நூலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு இந்நிகழ்ச்சியை ஆரம்பித்து வைத்தார். இந்நிகழ்வில் அவர் மேலும் உரையாற்றுகையில்,

வடமாகாணத்தின் குறியீடாக விளங்கக்கூடிய கற்பக தருவாம் பனை மரங்களை புதிதாக நாட்டுவதற்கும் பனை வளங்களை பெருக்குவதற்குமான ஒரு யுக்தியாக வடமாகாணசபை ஒவ்வொரு வருடமும் ஜூலை 22 ஆம் திகதியில் இருந்து ஒரு வார காலப்பகுதிக்கு வடமாகாண பனை அபிவிருத்தி வாரமாக பிரகடனப்படுத்தி கடந்த ஆண்டில் இருந்து இது நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றமை நாம் அனைவரும் அறிந்ததே.




வடமாகாணத்திலே வகை தொகை இன்றி காணப்பட்ட பனை வளங்கள் இப் பகுதியில் ஏற்பட்ட தொடர்ச்சியான 30 ஆண்டுகால போரின்விளைவாக பாதிக்கப்பட்டுள்ளன. இலட்சக்கணக்கான பனை மரங்கள் பதுங்குகுழிகள் அமைப்பதற்கும் காப்பரண்கள் அமைப்பதற்கும் என பெருமளவில் தறித்து வீழ்த்தப்பட்டுள்ளன. எஞ்சியிருந்த பனை மரங்கள் பல தொடர் எறிகணை வீச்சுக்களால் சிரச்சேதம் செய்யப்பட்டு அழிக்கப்பட்ட நிலையில் இன்று வடமாகாணத்தில் அதுவும் குறிப்பாக யாழ். மாவட்டத்தில் பனை மரங்களுக்கு மிகுந்த தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

பனை மரத்தின் பயன்பாடு பற்றி நாம் சற்று சிந்தித்துப் பார்ப்போமேயானால் எமக்கு ஆச்சரியம் அளிக்கக் கூடிய பல விடயங்கள் தெளிவுக்கு வரும். எம்முள் பலர் வீடு கட்டுவதற்கு உபயோகப்படுத்தக்கூடிய ஒருமரமே பனை மரம் எனத்தான் தெரிந்து வைத்துள்ளோம். இதற்கும் மேலாக பனை மரத்தில் இருந்து கிடைக்கக்கூடிய பனை மர ஓலைக்குருத்தில் இருந்து அடி மூலவேர் வரை அனைத்துப் பகுதிகளும் எமக்கு உபயோகப்படுவன என்பதனை நாம் தெரிந்து வைத்திருக்க வேண்டும்.

1972ல் என். எம்.பெரேரா நிதி அமைச்சராக விளங்கிய காலத்திலேயே பனை தென்னை உற்பத்தி விற்பனைக் கூட்டுறவுச் சங்கம் என ஒரு கூட்டுறவு இயக்கம் அறிமுகப்படுத்தப்பட்டது. இச் சங்கத்தின் நடவடிக்கைகள் மூலம் தவறணை முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது மட்டுமல்லாமல் கள்ளுத் தவறணைகள் ஒதுக்குப்புறமான இடங்களுக்கு (Isolated places) மாற்றப்பட்டதுடன் கூட்டுறவு துறை படிப்படியாக வளர்ந்து இத்தொழிலாளர்களுக்கு பல புதிய திட்டங்களை அறிமுகப்படுத்தியது.





அவற்றுள் சில உற்பத்திக்கு நியாய விலை, இரண்டு கிழமைக்கு ஒரு தடவை சம்பளம், சேம நிதி, சேவை விஸ்தரிப்பு, விபத்துக்காப்புறுதி ஆகியனவாகும்.

அத்துடன் படித்த இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு வசதிகள் பெற்றுக்கொடுக்கப்பட்டது மட்டுமல்லாமல் இக் கூட்டுறவுச் சபைகளில் அங்கத்துவம் வகிப்பதன் மூலம் ஒவ்வொரு உறுப்பினரும், பணியாளரும் தமது தலைமைத்துவப் பண்பை விருத்தி செய்துகொண்டனர். மேலும் இச்சங்கங்கள் வளர வளர பனங்கட்டித் தொழிற்சாலை, சீனித் தொழிற்சாலை, கல்லாக்கார உற்பத்தி போன்ற உற்பத்தி நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டன.


1978ம் ஆண்டில் தமிழரசுக் கட்சியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமாய் இருந்த அ.அமிர்தலிங்கம் முயற்சியின் பயனாக பனை அபிவிருத்திச் சபை என்ற ஒரு சபை முதன்முதலாக வட பகுதியில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதுவே வட பகுதி மக்களின் அப்போதைய தமிழரின் ஒரே ஒரு கூட்டுத்தாபனம் அல்லது சபையாக விளங்கியது என்று கூறலாம். இச் சபையின் தலைமை அலுவலகம் யாழ்ப்பாணத்தில் அமைய வேண்டும் என்ற கோரிக்கையுடன் தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிபார்சின் பெயரில் பிரபல தொழிற்சங்கவாதி கே.சி. நித்தியானந்தா பனம் பொருள் அபிவிருத்தி சபையின் தலைவராக நியமிக்கப்பட்டார். பின்னர் இப் பகுதியில் இடம்பெற்ற யுத்த சூழ்நிலை காரணமாக இத் தலைமை அலுவலகம் கொழும்புக்கு மாற்றப்பட்ட போதும் அதன் பணிகள் யாழ்ப்பாணத்தில் தொடர்ந்து கிடைக்கப்பெற்று வந்தன. பனை அபிவிருத்தி சபை பற்றி நாம் சிந்திக்கும் போது க.நடராஜாவின் சேவை பற்றி பேசாமல் இருக்க முடியாது. அவருடைய காலத்திலேயே இச்சபை ஜனரஞ்சகமான ஒரு சபையாக விளங்கியது மட்டுமல்லாமல் பனை உற்பத்திப் பொருட்கள் மிகக் கூடியளவு ஏற்றுமதி செய்யப்பட்டன. பல மில்லியன் ரூபா பெறுமதியான பனங்களி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதிசெய்யப்பட்டது.

இவற்றை இனம்கண்டு கொண்ட எமது விவசாய அமைச்சர் தென்னை பனை வள அபிவிருத்தியில் அதிக அக்கறை காட்டி இயன்ற அளவு கூடுதலான தென்னை மரங்களையும் பனை மரங்களையும் நாட்டுவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு வருவது பாராட்டுக்குரியது.

இவரின் முயற்சி வெற்றியளிக்கவும், எதிர்காலத்தில் வட பகுதி பனை தென்னை வளம் மிகுந்த ஒரு பிரதேசமாகச் செல்வச் செழிப்புள்ள பிரதேசமாக உருவாவதற்கும் நாம் அனைவரும் ஒன்றிணைந்து பாடுபட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5)

# தமிழை வளர்த்த பனையை வளர்ப்பது தமிழரின் கடமை

## அமைச்சர் ஐங்கரநேசன் தெரிவிப்பு



தமிழுக்கு இலக்கணம் வகுத்த தொல்காப்பியம் ஓலைச் சுவடிகளிலேயே எழுதப்பட்டது. சங்க இலக்கியங்கள், பதினெண்கீழ் கணக்கு நூல்கள், தேவாரத் திருமுறைகள், சித்த மருத்துவ நூல்கள் என்று தமிழை வளப்படுத்திய அத்தனை நூல்களும் ஓலைச் சுவடிகள் வழியாகவே எங்களிடம் கையளிக்கப்பட்டன. தமிழை வளர்த்தது பனை. பனை இல்லாமல் இருந்திருந்தால் தமிழுக்கு இவ்வளவு வளங்களும் வந்து சேர்ந்திராது. தமிழை வளர்த்த பனையை வளர்ப்பது எமது கடமை என்று வடக்கு கூட்டுறவு அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தெரிவித்துள்ளார்.

வடமாகாண பனை அபிவிருத்தி வாரத் தொடக்க நிகழ்ச்சி நேற்று வெள்ளிக்கிழமை யாழ் பொது நூலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட இந்நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்துப் பேசிய போதே அமைச்சர் பொ.ஐங்கரநேசன் இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு, அவர் மேலும் உரையாற்றுகையில்,

பனையே எல்லாமுமான வாழ்வு தமிழருக்கு இருந்தது. பனையின் முடி முதல் அடி வரை எங்களுக்குப் பயன் தந்தது. வருடம்பூராகவும் பயன் தந்தது. மணற்காடாக இருந்த யாழ்ப்பாணத்தில் தமிழர்கள் குடியேறக் காரணமாக இருந்தது இந்தப் பனை வளம் தான். ஆனால், துரதிர்ஷ்டவசமாக பனைத்தொழில் செய்வோரை குறிப்பிட்ட ஒரு சமூகமாக நாம் ஒதுக்கியது போல பனை மரத்தையும் ஒதுக்கி விட்டோம்.

ஒரு காலத்தில் பருவத்துக்குப்பருவம் பசளைகளாகப் பயன்படுத்துவதற்காக ஓலைகள் வெட்டப்பட்டு தலைமுடி வெட்டப்பட்டதுபோல கம்பீரமாகக் காட்சியளித்த பனை மரங்கள் இன்று தீண்டுவாரற்று காவோலைகளுடன் தலைவிரிகோலமாகக் காணப்படுகின்றன. இந்நிலை மாறவேண்டும். வடக்கின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் தூண்களில் ஒன்றாக மீண்டும் பனை மரங்கள் நிமிர வேண்டும். இதற்கு, பனை உற்பத்திகளைப் பயன்படுத்தவும் நவீன காலத்துக்கு ஏற்பப் பனைசார் உற்பத்திகளை நுகர்வோரைக் கவரும் வகையில் அபிவிருத்தி செய்யவும் சகல தரப்பினரும் முன்வர வேண்டும் என்றும் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் வடமாகாண கல்வி அமைச்சர் த.குருகுலராஜா, வடமாகாணசபை உறுப்பினர்கள் திருமதி அனந்தி சசிதரன், வே. சிவயோகன், க.தர்மலிங்கம், பா.கஜதீபன், கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார், விவசாய அமைச்சின் உதவிச் செயலாளர் லாகினி நிருபராஜ், மக்கள் வங்கியின் பிராந்திய முகாமையாளர் க.சுசிந்திரன் ஆகியோருடன் பல்வேறு திணைக்களங்களைச் சார்ந்த அதிகாரிகளும் பனைதென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டிருந்தனர். (இ-5)

# காணிகள் பகிர்ந்தளிப்பு



(கரணவாய்)

உடுப்பிட்டி இமையாணன் பகுதியில் உள்ள அமரர் மு. சிவசிதம்பரத்திற்கு சொந்தமான காணிகளை அவரது மகள் காணியற்ற ஏழு குடும்பங்களுக்கு பகிர்ந்தளித்துள்ளார்.

இவ் வைபவம் கடந்த புதன்கிழமை இமையாணன் அறிவாலயத்தில் முற்பகல் 10 மணியளவில் இடம்பெற்றது.

அமரர் சிவசிதம்பரத்திற்கு சொந்தமான இமையாணன் பகுதியில் உள்ள காணிகளை அப்பகுதியைச்சேர்ந்த சி.பரஞ்சோதி, க.தேவன், மு.மகேந்திரன், மு.செல்வரத்தினம், மா. செல்வரத்தினம், த.அருளானந்தம், த.அப்புக்குட்டி ஆகிய ஏழு பேருக்கு தலா இரண்டு பரப்பு வீதம் அவருடைய மகள் திருமதி தேவராஜ் நிரஞ்சரியால் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் இமையாணன் அறிவாலயத்தின் இரண்டு பரப்புக் காணி வழங்கப்பட்டுள்ளது. (இ-60)

# எதிர்ப்புப் பேரணி வரலாறு படைக்கும்

## கூட்டு எதிர்க்கட்சி நம்பிக்கை

(கொழும்பு)

**நல்லாட்சி அரசாங்கத்திற்கு எதிரான கொழும்பு நோக்கிய எதிர்ப்புப் பேரணி வரலாறு படைக்கும். பொது மக்கள் பல இலட்சம் பேர் மகிந்த ராஜபக்ஷ தலைமையில் ஒன்றிணைந்து புதுயுகத்திற்கான சரித்திரம் படைப்பார்கள் என கூட்டு எதிர்க்கட்சி தெரிவித்துள்ளது.**

நாட்டை நேசிக்கும் அனைத்து மக்கள் பிரதிநிதிகளும் எதிர்ப்புப் பேரணியில் கலந்து கொள்ள வேண்டும். குறிப்பாக அரசாங்கத்திற்குள் இருந்துகொண்டு செய்வதறியாதுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உண்மையான பக்தர்கள் வெளியில் வர வேண்டும்.

அப்போது தான் மக்கள் வழங்கிய ஆணைக்கு கௌரவம் கிடைக்கும். எவ்வாறாயினும் அனைத்து அச்சுறுத்தல்கள் மற்றும் சவால்களை தாண்டி கூட்டு எதிர்க்கட்சி மிக விரைவில் வெற்றியிலக்கை அடையும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. கண்டியில் இருந்து கொழும்பை நோக்கிய எதிர்ப்புப் பேரணி குறித்து ஏற்பாட்டுக் குழு உறுப்பினரான பாராளுமன்ற உறுப்பினர் மகிந்தானந்த அளுத்கமகே தொடர்ந்தும் தெரிவிக்கையில்,

எதிர்வரும் 27 ஆம் திகதி புதன்கிழமை கண்டி தலதா மாளிகையில் விசேட வழிபாடுகள் ஒழுங்குசெய்யப்பட்டுள் ளன. இதில் மகிந்தராஜபக்ஷ உள்ளிட்ட கூட்டு எதிர்க் கட்சியின் அனைத்து உறுப்பினர்கள் மற்றும் கட்சித் தலைவர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். அன்றைய தினம் மல்வத்து பீடத்தின் மகாநாயக் கரை சந்தித்து ஆசீர்வாதம் பெற்றுக் கொண்டதன் பின்னர் சர்வமதத் தலைவர்களையும் சந்திக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மறுநாள் வியாழக்கிழமை காலை 9 மணிக்கு கண்டிதலதா மாளிகைக்கு முன்பாக கொழும்பை நோக்கிய பேரணி ஆரம்பிக்கப்படும். முதல் நாள் மாவனெல்லை வரை பேரணி செல்லும். 29 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாவனெல்லையில் இருந்து நெலுந்தெனியவை நோக்கி செல்லும். 30 ஆம் திகதி நெலுந்தெனியவில் இருந்து நிட்டம்புவ வரையில் பேரணி செல்லும். 31 ஆம் திகதி நிட்டம்புவவில் இருந்து கிரிபத்கொடை வரையில் செல்வதுடன் முதலாம் ஆம் திகதி கிரிபத்கொடையில் இருந்து கொழும்பை நோக்கி கூட்டு எதிர்க் கட்சியின் பேரணி செல்லும். என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7-10)

Darson இன நாய்க்குட்டி
விற்பனைக்கு உண்டு
தொடர்புக்கு
021 222 1285
இல. 44, வேம்படி வீதி,
யாழ்ப்பாணம்.
(அ-5261)

அருமையான அந்தண குருவுக்கு
பெருமை சேர்க்கும் பாராட்டு



சர்வதேச இந்துக் குருமார்
ஒன்றியம் ஆனைப்பந்தியில்
இன்று (23.07.2016) நடத்தும்
ஆண்டுப் பெருவிழா பாராட்டு
வைபவத்தில் எமது ஆலய
மஹா கும்பாபிஷேக
விழாவை நடத்தி வைத்த
"பிரதிஷ்டா கலாபூஷணம்"
"மதுரமந்திர மாமணி"
சிவஸ்ரீ குமாரசரவணபவ குருக்கள் J.P
அவர்களும் பாராட்டுப்
பெறுவதையிட்டு
மகிழ்ந்து ஐயாவின் சமய,
சமூகப் பணிகள் தொடர
வாழ்த்திப் பணிகின்றோம்.
நியமங்கள் தவறாது கைங்கரியம்
ஆற்றும் வியத்தகு
விப்ரஸ்ரேஷ்டர் தங்களுக்கு பயனுற
இந்துக்குருமார் ஒன்றியமெடுக்கும்
நயமிகு நல்லதோர் பாராட்டு
விழாவில் பெருமையோடு எங்களின்
வாழ்த்துக்களும் சேரட்டும்
அருமையாய் உங்கள் ஆன்மீகப்
பணிகள் தொடரட்டும்.
சுபம்

ஸ்ரீ சந்தன பைரவர் திருக்கோவில்,
சுன்னாகம்.
(5295)
பிரம்மஸ்ரீ சோ.ஜெயராம சர்மா
மாணிக்கவாசகர் குடும்பம்

உ
சுவாமியே சரணம்
ஐயப்பா

காரைநகர் வியாவில்பதி ஆதிஷேத்திரம்
திருவருள்மிகு பூரணா புஷ்கலா சமேத ஹரிஹரபுத்ர
ஐயப்ப சுவாமி தேவஸ்தானம்
திவ்ய மஹோற்சவ விஞ்ஞாபனம்-2016



ஐயனார் அடியார்களே!

சைவமும் தமிழும் திகழ்ந்து தானதருமமும் தவமும் விளங்கும் புண்ணிய பூமியாகிய காரைநகரிலே ஆதிஷேத்திரமாக விளங்கும் வியாவில் பதியிலே திருவருளாட்சி புரிகின்ற பூரணா புஷ்கலா சமேத ஹரிஹரபுத்ர ஐயப்ப சுவாமிக்கு நிகழும் துர்முகி வருஷம் ஆடி மாதம் 09 ஆம் நாள் 24.07.2016 ஞாயிற்றுக்கிழமை பஞ்சமித்திதியும் பூரட்டாதி நட்சத்திரமும் சித்தாமிர்த யோகமும் கூடிய பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் திவ்விய மஹோற்சவம் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 தினங்கள் உற்சவம் நிகழத் திருவருள் பாலித்துள்ளது. அத்தருணம் அடியார்கள் வருகை தந்து ஹரிஹரபுத்ர ஐயப்ப சுவாமியைத் தரிசித்து திருவருளைப் பெற்றுய்வீர்களாக.

கிரியாகால நிகழ்வுகள்

| | |
|---|---|
| ஆடி 8 ஆம் நாள் 23.07.2016 சனிக்கிழமை | மாலை 6 மணிக்கு கணபதி பூஜை, மாலை 7 மணிக்கு அனுக்ஞை, கிராமசாந்தி, வாஸ்துசாந்தி, மிருத்சங்கிரணம். |
| ஆடி 9 ஆம் நாள் 24.07.2016 ஞாயிற்றுக்கிழமை | காலை 7 மணிக்கு அபிஷேகம் , விசேட பூஜை 10 மணிக்கு வசந்தமண்டப பூஜை, 11 மணிக்கு கொடியேற்றம், நவசக்தி ஆவாகணம், மாலை 6 மணிக்கு மஹா சாஸ்தாயாகாரம்பம். |
| ஆடி 16 ஆம் நாள் 31.07.2016 ஞாயிற்றுக்கிழமை | மாலை 5 மணிக்கு வேட்டைத் திருவிழா, இரவு 8 மணிக்கு வசந்த மண்டப பூஜை சகோபுர உற்சவம். |
| ஆடி 17 ஆம் நாள் 01.08.2016 திங்கட்கிழமை | காலை 6 மணிக்கு அபிஷேகம், விசேட பூஜை, 8 மணிக்கு வசந்த மண்டப பூஜை, 10 மணிக்கு இரதோற்சவம், 12 மணிக்கு பச்சை சாற்றி இரத அவரோகணம், பிராயசித்த அபிஷேகம். |
| ஆடி 18 ஆம் நாள் 02.08.2016 செவ்வாய்க்கிழமை | ஆடி அமாவாசை விரதம், காலை 6 மணிக்கு அபிஷேகம், விசேட பூஜை, 8 மணிக்கு வசந்த மண்டபப் பூஜை, தீர்த்தோற்சவம், மகாயாக அபிஷேகம், பூஜை, மாலை கொடியிறக்கம் சந்தி விசர்சனம், மௌன உற்சவம், ஆச்சாரிய உற்சவம், அருளுரை. |
| ஆடி 19 நாள் 03.08.2016 புதன்கிழமை | மாலை 7 மணிக்கு ஊஞ்சல், உள்வீதி உற்சவம், திருக்கல்யாணம், வெளி வீதி உற்சவம். |
| ஆடி 20 ஆம் நாள் 04.08.2016 வியாழக்கிழமை | காலை 10 மணிக்கு பிராயச்சித்த அபிஷேகம், மாலை 5 மணிக்கு வைரவர் பொங்கல் பூஜை வழிபாடு. |

வியாவில்,
காரைநகர்.

விளம்பர அனுசரணை
கஜமுகன் ஹாட்வெயார்
147,149 ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

(C-5270)

இங்ஙனம்
ஆலய அறங்காவலர்.

கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1982 இந்து
நட்சத்திரம்: உத்தரட்டாதி
கி.பா:27 செவ் 1 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்:O/L/சொந்த தொழில்
தொ.இ: B/6113

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: பூசம்
கி.பா: 80 செவ் 8 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்:A/L/அரச தொழில்
தொ.இ: B/6115

பிறப்பு: 1987 NON RC
நட்சத்திரம்: அச்சுவினி
கி.பா: 24
உயரம்: 5'8"
தகைமை/தொழில்: Diploma/ பிரான்ஸ் PR
தொ.இ: B/6116

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: அவிட்டம்
கி.பா: 51 சூரிசெவ் 5 இல்
உயரம்: 5'6"
தகைமை/தொழில்:BA, ACCA/ கணக்காளர் லண்டன்
தொ.இ: B/6117

இவர்களுக்கு மணமகன் தேவை


பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: சித்திரை
கி.பா: 36
உயரம்: 5'1"
தகைமை/தொழில்: O/L
எதிர்பார்ப்பு: வெளிநாடு மட்டும்
தொ.இ: G/6120

பிறப்பு: 1977 இந்து
நட்சத்திரம்: அத்தம்
கி.பா: 40
உயரம்: 5'2"
தகைமை/தொழில்:BA/சொந்த தொழில்
தொ.இ: G/6121

பிறப்பு: 1991 இந்து
நட்சத்திரம்: ரோகினி
கி.பா: 37 செவ் 2 இல்
தகைமை/தொழில்:A/L/ஆசிரியர்
தொ.இ: G/6122

பிறப்பு: 1992 இந்து
நட்சத்திரம்: அவிட்டம்
கி.பா: 45 செவ் 12 இல்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்:O/L
தொ.இ: G/6127

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:-021 720 1005,021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
(ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம்)



முல்லைதீவு ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் தீர்த்தத்திருவிழா நடைபெற்றது. இதன்போது ஒட்டுசுட்டான் சைவப்புலவர் பாலகிருஸ்ணன் திலகானந்தனி னால் தான்தோன்றீஸ்வரர் பாமாலை நூல் இதழ்-4 ஆலய முன்றலில் வெளியிட்டு வைக்கப்பட்டது. தூக்குக்காவடி,பறவைக்காவடி,பாற்செம்பு, தீக்காவடி போன்ற நேர்த்திக் கடன்களில் பெருந்திரளான அடியார்கள் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது.(படம்:-மல்லாவி செய்தியாளர்)

# சிறுமியை வன்புணர்வுக்குட்படுத்திய குற்றச்சாட்டின் பேரில் இளைஞன் கைது

கொடிகாமம் பகுதியைச் சேர்ந்த 16 வயது சிறுமியொருவரை பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தினார் என்ற குற்றச்சாட்டின் பேரில், கிளிநொச்சியைச் சேர்ந்த 20 வயதுடைய இளைஞனை நேற்று முன்தினம் கைது செய்துள்ளதாக கொடிகாமம் பொலிஸார் தெரிவித்தனர்.

அநாமதேய தொலைபேசி அழைப்பின் மூலம் மேற்படி சிறுமியும் இளைஞனும் கதைத்துள்ளனர். இந்நிலையில் கடந்த 19ஆம் திகதியன்று, கொடிகாமம் பகுதிக்குச் சென்றுள்ள மேற்படி இளைஞன், குறித்த சிறுமியை தன்னுடன் அழைத்துக்கொண்டு கிளிநொச்சிக்கு சென்றுள்ளார்.

இது தொடர்பில், சிறுமியின் தாயாரினால், கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்று பதிவு செய்யப்பட்டிருந்தது. இந்நிலையில், குறித்த சிறுமியை, மறுதினமே அழைத்து வந்துள்ள மேற்படி இளைஞன், அவரை கொடிகாமத்தில் விட்டுவிட்டுச் சென்றுள்ளார்.

இது தொடர்பில் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து, விசாரணைகளை மேற்கொண்ட பொலிஸார், சிறுமியை வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்திய போதே, அவர் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் என்பது தெரியவந்துள்ளது.

சிறுமியின் வாக்கு மூலத்தின் பிரகாரம், மேலதிக விசாரணைகளை மேற்கொண்ட கொடிகாமம் பொலிஸார், சந்தேகநபரான இளைஞனை கைது செய்துள்ளனர். விசாரணைகளின் பின்னர் சாவகச்சேரி நீதவான் நீதிமன்றத்தில், அவரை ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (2)

# குருவிச்சனாச்சியார் ஆற்று அணைக்கட்டை புனரமைக்குமாறு விவசாயிகள் கோரிக்கை

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு - ஒட்டுசுட்டான் குருவிச்சனாச்சியார் ஆற்று அணைக்கட்டு மற்றும் அதனை அண்டிய ஒரு கிலோ மீற்றர் வீதியை புனரமைத்து தருமாறு அப்பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக வடக்கு மாகாண சபையின் விவசாய அமைச்சு உள்ளிட்ட அதிகாரிகளிடம் பலதடவைகள் கோரிக்கை விடுத்தும், இது வரை அதற்கான பணிகள் முன்னெடுக்கப்படவில்லையென விவசாயிகள் குற்றம் சாட்டுகின்றனர்.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேசத்திலிருந்து இரண்டு கிலோ மீற்றர் தொலைவில் குருவிச்சனாச்சியார் என்ற கிராமம் அமைந்துள்ளது. இங்கு அமைந்துள்ள குருவிச்சனாச்சியார் ஆறு வன்னியை ஆண்ட தமிழ் மன்னனான பண்டாரவன்னியன் காலத்தில் மிகவும் பிரசித்தி வாய்ந்ததாக காணப்படுகின்றது.

குருவிச்சனாச்சியார் ஆற்றின் நீரை நம்பி அதனை அண்டிய பகுதியிலுள்ள 200 ஏக்கர் வயல்காணிகளில் அப்பகுதி மக்கள் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்கள் குருவிச்சனாச்சியார் ஆற்று அணைக்கட்டினை கடந்து சென்றே தமது வயல் நிலங்களுக்கு செல்ல வேண்டிய நிலை காணப்படுகின்றது. எனினும் குருவிச்சனாச்சியார் ஆற்று அணைக்கட்டு சேதமடைந்துள்ளமையினாலும் அதனை அண்டிய ஒரு கிலோ மீற்றர் வீதி புனரமைக்கப்படாமையினாலும் தாம் பெரும் சிரமங்களை எதிர்நோக்குவதாக விவசாயிகள் கவலை வெளியிடுகின்றனர்.

வேளாண்மை செய்யும் காலங்களில் உள்ளீடுகளை கொண்டு வருவதற்கும் வேளாண்மை செய்து முடிந்த பின்னர நெல்மணிகளை கொணடு செல்வதற்கும் தாம் சிரமங்களை எதிர்நோக்குவதாக மக்கள் குறிப்பிடுகின்றனர். இந்தநிலையில் அப்பகுதி விவசாயிகள் தம்மிடம் முன்வைத்த கோரிக்கைக்கு அமைய குருவிச்சனாச்சியார் ஆற்று அணைக்கட்டு மற்றும்வீதியை புனரமைக்குமாறு தாம் வடக்குமாகாண விவசாய அமைச்சிடம் கோரிக்கை விடுத்துளளதாக வடக்குமாகாண சபையின் முல்லைத்தீவு மாவட்ட உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவிக்கின்றார்.(2-281)

# 3 பாடசாலைகளுக்கு நிழற்பிரதிப்பொறிகள்

(முல்லைத்தீவு)

2016 ஆம் ஆண்டுககான பன்முகப்படுத்தப்பட்ட நிதியொதுக்கீட்டில் இருந்து மூன்று பாடசாலைகளுக்கு நிழற்பிரதிப்பொறிகள் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ள நிலையில் தற்போது இரண்டு பாடசாலைகளுக்கு நிழற்பிரதிபொறிகள் வழங்கப்பட்டுள்ளதாக வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன் தெரிவித்துள்ளார்.

தெரிவு செய்யப்பட்ட மூன்று பாடசாலைகளில் இரு பாடசாலைகளுக்கு முறைப்படி நிழற்பிரதிப்பொறிகளை வழங்கும் நிகழ்வு கடந்த 28 ஆம் திகதி நடைபெற்றது.

துணுக்காய் வலயத்தில் உள்ள வன்னிவிளாங்குளம் அ.த.க.பாடசாலை, ஒட்டுசுட்டான் ஆறுமுகம் வித்தியாலயம் மற்றும் முல்லை. வலயத்தில் உள்ள வேணாவில் சிறி முருகானந்தா வித்தியாலயம் ஆகிய மூன்று பாடசாலைகளுக்கு நிழற்பிரதிப்பொறிகளுக்கான ஒதுக்கீட்டை இவ்வாண்டுக்கான தன்து பன்முகப்படுத்தப்பட்ட நிதி ஒதுக்கீட்டில் ரவிகரன் மேற்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (2)




# இலவச பரீட்சை முன்னாயத்த செயலமர்வு

(பரந்தன்)

கிளிநொச்சி கல்வி வலயத்திற்குட்பட்ட இவ்வருடம் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றவுள்ள 2510 மாணவர்களுக்கான இலவச பரீட்சை முன்னாயத்த செயலமர்வு இடம்பெற்றுள்ளது.

முன்னாயத்த செயலமர்வு கடந்த 20 ஆம் திகதி தர்மபுரம் ஆரம்பப் பாடசாலையிலும், மறுநாள் 21 ஆம் திகதி கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்திலும், 22 ஆம் திகதி ஜெயபுரம் மகா வித்தியாலயத்திலும் இடம்பெற்றுள்ளது.


கிளிநொச்சி மாவட்ட கல்வி அபிவிருத்தி பண்பாட்டு மன்றத் தின் கல்வி அபிவிருத்தி குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்டு வருடந்தோறும் இப்பரீட்சை முன்னாயத்த செயலமர்வு இடம்பெற்று வருகிறது. அந்த வகையில் இவ்வருடம் நான்காவது தடவையாக மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் இச் செயலமர்வு இடம்பெற்றுள்ளது. பிரபல ஆசிரியரால் நடத்தப்பட்டது.

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் முருகேசு சந்திரகுமார் வருடந்தோறும் மாவட்ட கல்வி அபிவிருத்திக் குழுவின் ஊடாக இதற்கான முழுமையான நிதியை வழங்கி நடத்தி வரு கின்றமை குறிப்பிடத்தக்கது

இந்த செயலமர்வில் கிளிநொச்சி கல்வி வலய ஆரம்ப பிரிவு உதவிக் கல்விப் பணிப்பாளர் கணேசலிங்கம், கல்வி அபிவிருத்திக் குழுவின் தலைவர், ஓய்வு பெற்ற பிரதிக் கல்விப் பணிப்பாளர் பத்மநாதன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.(2-312)

# என்னால் முடியுமென்ற நம்பிக்கையிருக்கும் வரையில் சாதிக்கலாம்; வெற்றி பெறலாம்

## சிறிதரன் எம்.பி தெரிவிப்பு




என்னால் முடியும் என்கின்ற நம்பிக்கையும் எண்ணமும் இருக்கும் வரை சாதிக்கலாம், வெற்றி பெறலாம் என பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் கிளிநொச்சி இந்துக் கல்லூரி மாணவர்கள் மத்தியில் தெரிவித்தார்.

கிளிநொச்சி இந்துக் கல்லூரியின் முதலாவது மாணவர் பாராளுமன்ற கன்னி அமர்வுகள் அண்மையில் கலலூரி மண்டபத்தில நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் அங்கு உரையாற்றும் போது மேற்கண்டவாறு கருத்துக் களைத் தெரிவித்தார்.

அவர் தனது உரையில் மேலும் குறிப்பிடுகையில்,

கிளிநொச்சி இந்துக் கல்லூரியானது வரலாற்றில் தடம் பதித்த மகத்துவமான பல மனிதர்களைத் தந்த, சந்தித்த ஒரு சிறந்த கல்லூரியாகத் திகழ்கின்றது. யோகர் சுவாமிகள் இந்தக் கல்லூரிக்குள் கால் பதித்த வரலாற்றினையும் அப்புஜீ இக்கல்லூரிக்கு அதிபராக இருந்த வரலாற்றையும் கொண்டுள்ளது. சர்வதேச விருதைப் பெறற பெருமைக்குரிய வைதிய கலாநிதி சத்தியமூர்த்தி போன்ற சிறந்த மனிதர்கள் கல்வி கற்ற கல்லூரியாகவும் இக்கல்லூரி திகழ்கின்றது.

இக்கல்லூரியில் நான் ஒரு மாணவனாகக் கல்வி கற்றுக்கொண்டிருந்த காலகட்டத்தில், 1985 ஆம் ஆணடு உலகத் தமிழர் பண்பாட்டு இயக்கத்தினுடைய தலைவர் பழநெடுமாறன் இந்தியாவிலிருந்து தமிழீழ விடுதலைப் புலிகளுடைய மூத்த தளபதி லெப்.கேணல் விக்ரரின் வழிநடத்தலில் இக்கல்லூரிக்கு வருகை தந்திருந்தார். அப்போது அவர் எங்களிடம், இக்கல்லூரியும் இக்கல்லூரி மாணவர்களும் தமிழர்களுடைய தேசிய விடுதலைப் போராட்டத்திலே எப்படியான எண்ணங்களைக் கொண்டிருக்கிறார்கள் என்று கேட்டார்கள்.



இன்றைய மாணவர் பாராளுமன்ற உறுப்பினர்களான நீங்கள் நாளை உலகத்தை ஆளக்கூடிய தலைவர்களாக திகழ்வீர்கள். அத்திறமை உங்களிடம் நிறைந்து காணப்படுகின்றது. உங்களது செயற்பாடுகள் வெற்றிபெற உங்களுடன் கூட இருந்து உங்களுக்கான பணிகளை எம்மால் இயன்றவரை செய்வோம் என மேலும் கூறினார். (2-281)




உருத்திரபுரம் காந்தி நிலையத்தில் அண்மையில் ஆடிப்பிறப்பு நிகழ்வு இடம்பெற்ற போது... (படம்:-புதுமுறிப்பு செய்தியாளர்)

# “இராணுவம் ஆக்கிரமித்த காணிகளை உடனடியாக விடுவிக்க வேண்டும்”

# ஜனநாயகத்திற்கான வடக்கு இளைஞர்களால் வவு.இராணுவ முகாமிற்கு முன்பாக போராட்டம்






(குருமன்காடு)

காணிப்பிரச்சினையில் அரசியல் நாடகம் வேண்டாம் என கோரி ஜனநாயகத்திற்கான வடக்கு இளைஞர்களால் வவுனியாவில் அமைந்துள்ள இராணுவ முகாமுக்கு முன்பாக நேற்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வாய்களை கறுப்பு நிற துணிகளால் கட்டியவாறு ஊர்வலமாக சென்ற இளைஞர், யுவதிகள் வவுனியா குடியிருப்பு பகுதியில் அமைந்துள்ள இராணுவ முகாமுக்கு முன்பாக நின்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதேவேளை இராணுவம் மக்களின் காணிகளை அபகரித்துள்ளமையினால் வட பகுதி மக்கள் பல்வேறு துன்பங்களை அனுபவிப்பதுடன் முகாம்களிலும் உறவினர்களின் வீடுகளிலும் வாழ வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

இந் நிலையில் “காணிப் பிரச்சினையில் அரசியல் நாடகம் வேண்டாம், இராணுவம் ஆக்கிரமித்த காணிகளை உடனடியாக விடுதலை செய், நல்லாட்சியே மாற்றத்தை நாம் தந்தோம் மறந்துவிட்டாய் நம் நிலத்தை மைத்திரி அரசே” என்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளையும் தாங்கியிருந்தனர்.

சுமார் 30 நிமிடங்கள் வரை இராணுவ முகாமுக்கு முன்பாக இடம்பெற்ற இப் போராட்டத்தை அடுத்து போராட்டக்காரர்கள் ஓமந்தை நோக்கி பயணித்திருந்தது டன் யாழ்ப்பாணம் வரையிலும் உள்ள இராணுவ முகாம்களுக்கு முன்பாக போராட்டத்திலும் ஈடுபடவும் திட்டமிட்டிருந்தனர்.

சுமார் 30 நிமிடங்கள் வரை இராணுவ முகாமுக்கு முன்பாக இப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (2-250)

## தொழிற்சந்தைக்கான முன்னோடி நிகழ்வு நேற்று முல்லைத்தீவில்

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் தொழில்வாய்ப்பின்றி இருக்கின்ற இளைஞர், யுவதிகளுக்கு வேலைவாய்ப்புக்களை பெற்றுக் கொடுக்கும் நோக்கில் எதிர்வரும் 28 ஆம் திகதி வியாழக்கிழமை முல்லைத்தீவு மகா வித்தியாலயத்தில் தொழில் சந்தைக்கான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந் நிகழ்வில் வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களை வழங்க இரண்டு சர்வதேச நிறுவனங்களும் உள்நாட்டில் வேலைவாய்ப்புக்களை வழங்க தாய்நாட்டு தொழில் கொள்வோர் சிலரும் கலந்து கொள்ளவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

அந்த வகையில் தொழிற் சந்தைக்கான முன்னோடி நிகழ்வு நேற்றைய தினம் கரைதுறைப்பற்று பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதேச வாழ் இளைஞர், யுவதிகள் பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (2-281)




## காணி பிணக்குத் தொடர்பான கலந்துரையாடல்

(விசுவமடு)

கண்டாவளைபிரதேச செயலகத்திற்கு உட்பட்ட புன்னை நீராவி கிராம சேவையாளர் பிரிவினரால் நேற்று முந்தினம் காலை 9 மணியளவில் காணி பிணக்குத் தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நாதன் குடியிருப்பு கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது, காணி பிணக்குகளைத் தீர்த்து வைக்கும் அதிகாரிகளினால் புன்னை நீராவி கிராம சேவையாளர் பிரிவிற்குட்பட்ட நாதன் குடியி ருப்பு குமார சுவாமிபுரம் உழவனூர், கல்லாறு ஆகிய நான்கு கிராமங் களை உள்ளடக்கி காணி பிண க்குகள் தொடர்பாகவும் காணி உறுதிகள் தொடர்பாகவும் காணி கொள்வ னவு மற்றும் விற்றமை தொடர்பாகவும் விழிப்புணர்வு கலந்துரையாடல் இடம்பெற்றது.

சட்டவிரோதமான காணிகள் எடுக்கப் பட்டால் எவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டுமெனவும் ஒரு நபர் காணிகளை எவ்வாறு பெற்றுக் கொள்ள முடியும் எனவும் பொது மக்களுக்கான அறிவுறுத் தல் அதிகாரிகளினால் விடுக்கப்பட்டமை குறிப் பிடத்தக்கது. இக் கலந்துரையாடல் கண்டா வளை பிரதேச செயலாளர் தலைமையில் நடைபெற்றது. (2)

## ஹெரோயின் வைத்திருந்த குற்றச்சாட்டு

# முதலாம் எதிரிக்கு ஆயுட்கால சிறை; இரண்டாம் எதிரி சிறையில் மரணம்

### வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி தீர்ப்பு

வவுனியாவில் 40 கிராம் ஹெரோயினை உடைமையில் வைத்திருந்த மற்றும் வியாபாரம் செய்த குற்றத்திற்காக சட்டமா அதிபரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் குற்றப்பத்திரத்தின் மீது கடந்த 2015 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 25 ஆம் திகதி வழக்கின் விளக்கம் ஆரம்பமாகி நேற்றையதினம் வவுனியா அமர்வின்போது மேல் நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிறேமசங்கரினால் தீர்ப்பு வழங்கப்பட்டது.

குறித்த வழக்கினை நெறிப்படுத்திய வழக்கு தொடுநர் தரப்பு முதலாவது எதிரிக்கு எதிரான இரண்டாவது குற்றச்சாட்டான 40 கிராம் ஹெரோயினை உடைமையில் வைத்திருந்த குற்றத்தினை அரச சட்டவாதி சந்தேகத்திற்கு அப்பாற்பட்ட முறையில் நிரூபித்துள்ளதாக தெரிவித்து குறித்த முதலாம் எதிரியை குற்றவாளியாக இனங்கண்டு அவருக்கு ஆயுட்கால சிறைத் தண் டனை விதித்து தீர்ப்பளி த்தார்.

இதேவேளை, குறித்த முதலாம் எதிரிக்கான முதலாவது குற்றச்சாட்டான 40 கிராம் ஹெரோயினை வியாபாரம் செய்த குற்றச்சாட்டில் இருந்து முதலாம் எதிரியை நீதிபதி விடுதலை செய்தார். இந்நிலையில் இரண்டாம் எதிரிக்கு எதிரான இரண்டு குற்றச்சாட்டுக்களும் சந்தேகத்திற்கு அப்பாற்பட்ட முறையில் வழக்கு தொடுநர் தரப்பினால் விடுவிக்கப்படவில்லை என தெரிவித்து இரண்டாம் எதிரியை வழக் கில் இருந்து விடுதலை செய்தார். குறித்த இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

கடந்த 2010 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 8 ஆம் திகதி குறித்த முதலாம் எதிரியான தேவதாஸ் பிறைநர், இரண்டாம் எதிரியான கந்தப்பு ஜெயபாலன் ஆகிய இருவரும் வவுனியா பேருந்து நிலையப்பகுதியில் 40 கிராம் ஹெரோயின் போதைப் பொருளை வியாபாரத்திற்கு கொண்டு வந்து உடைமையில் வைத்திருந்தார்கள் என்ற குற்றச்சாட்டில் சந்தேகத்தின் பேரில் முந்தல் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு புத்தளம் நீதவான் நீதிமன்றத்தால் விளக்கமறியலில் வைக்கப்பட்டு வவுனியா மேல் நீதிமன்றத்தில் சட்டமா அதிபரால் குற்றப் பகர்வு பத்திரம் தாக்கல் செய்யப்பட்டது. கடந்த ஒரு வருடமாக முதலாம் எதிரி சார்பில் சிரேஷ்ட சட்டத் தரணி என்.சிறிகாந்தா, இரண்டாம் எதிரி சார்பில் சிரேஷ்ட சட்டத்தரணி அன்ரன் புனிதநாயகம் ஆஜராகி இருந்த நிலையில் சட்டமா அதிபர் சார்பில் அரச சட்டவாதி நிஷாந் நாகரட்ணம் ஆஜராகி வழக்கினை நெறிபடுத்தியிருந்தார்.

இந்நிலையில், இரண்டு எதிரிகளினாலும் செய்யப்பட்ட பிணை விண்ணப்பங்கள் அரச சட்டவாதியினால் மேற்கொள்ளப்பட்ட கடுமையான ஆட்சேபனையின் பிரகாரம் பிணை மனுக்கள் நிராகரிக்கப்பட்டு எதிரிகள் இருவரும் கடந்த 5 வருடமாக விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர். இந் நிலையில் குறித்த வழக்கின் தீர்ப்பு மன்றிலே வாசித்து தெரியப்படுத்தப்பட்ட போது இந்த வழக்கில் இருந்து குற்றமற்றவர் என விடுவிக்கப்பட்ட இரண்டாம் எதிரி மன்றில் இருக்கவில்லை. இவர் தீர்ப்பு வழங்குவதற்கு முதல் நாள் இரவு அநுராதபுரம் சிறைச்சாலையில் மாரடைப்பினால் உயிரிழந்து விட்டதாக அவரது சட்டத்தரணியால் மன்றில் தெரியப்படுத்தப்பட்டது. (2-250)

## 74 குடும்பங்களுக்கு காணி அனுமதிப்பத்திரங்கள் வழங்கல்

முல்லைத்தீவு மாவட்டத்தின் ஒட்டுசுட்டான் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட 74 குடும்பங்களுக்கான காணி அனுமதிப் பத்திரங்கள் நேற்றையதினம் வழங்கி வைக்கப்பட்டன.

இதன்போது பனிக்கன்குளம் கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட 43 பேருக்கு தலா ஒரு ஏக்கர் மேட்டுக்காணிக்கான அனுமதிப்பத்திரங்களும் 29 பேருக்கு தலா அரை ஏக்கர் காணிக்கான அனுமதிப்பத்திரங்களும் இரண்டு பேருக்கு தலா ஒரு ஏக்கர் வயல் காணிக்கான அனுமதிப்பத்திரமும் வழங்கி வைக்கப்பட்டது.

இதேவேளை அடுத்த கட்டமாக அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்படவுள்ளவர்களுக்கான காணிக் கச்சேரியும் இடம்பெற்றது.



இந்நிகழ்வில் ஒட்டுசுட்டான் பிரதேச செயலாளர் மற்றும் பனிக்கன்குளம் கிராம அலுவலர், ஒட்டுசுட்டான் பிரதேச செயலக காணி உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுமக்கள் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (2-281)

## ஆப்கானிஸ்தான் குன்தூஸில் தலிபான்கள் முன்னேற்றம்



ஆப்கானிஸ்தானின் வடக்கு மாகாணமான குன்தூஸின் மாவட்டம் ஒன்றை நூற்றுக்கணக்கான தலிபான் போராளிகள் கைப்பற்றி இருப்பதோடு அங்கு ஆப்கான் பாதுகாப்பு படையினருடன் உக்கிர மோதல் இடம்பெற்று வருகிறது.

கடந்த மூன்று தினங்களாக இடம்பெற்ற மோதலுக்கு பின்னர் தலிபான்கள் காலா ஈ சால் மாவட்டத்தின் 65 முதல் 70 வீதமான பகுதியை கைப்பற்றியுள்ளனர். மாவட்டத்தின் ஒரு பகுதி தலிபான் வசமானதை ஒப்புக்கொண்டிருக்கும்இராணுவம்அதனை மீட்க தீவிர தாக்குதலை நடத்துவதாக குறிப்பிட்டுள்ளது.

எனினும் தலிபான்கள் ஊடகங்களுக்கு வெளியிட்டிருக்கும் அறிவிப்பில் குறித்த மாவட்டம் முழுவதையும் கைப்பற்றியதாக குறிப்பிட்டுள்ளது.

கடந்த திங்களன்று மோதல் வெடித்ததை அடுத்து மாவட்டத்தில் இருந்து பல குடும்பங்களும் வெளியேறியுள்ளன.

ஆப்கானின் வடக்கில் அதிக வன்முறை கொண்ட பகுதியாக குன்தூஸ் இருந்து வருகிறது. இந்த மாகாண தலைநகர் கடந்த ஆண்டு சிறிது காலம் தலிபான் கட்டுப்பாட்டில் இருந்தது. இதன் பெரும்பாலான மாவட்டங்களில் தலிபான்கள் தொடர்ந்து ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர். (இ-10)

## சீனாவும்-பாகிஸ்தானும் கூட்டாக கண்காணிப்பு

ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதியில் சீனா - பாகிஸ்தான் இராணுவ வீரர்கள் ஒன்று சேர்ந்து கூட்டாக கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டு வருவதால் அது இந்தியாவிற்கு மேலும் சிக்கலை ஏற்படுத்தியுள்ளது.

நேற்றுமுன்தினம் சீன இராணுவ வீரர்களும் பாகிஸ்தான் இராணுவ வீரர்களும் ஒன்றுசேர்ந்து காஷ்மீர் எல்லைப்பகுதியில் ரோந்துப் பணியில் ஈடுபட்டனர். இதன் மூலம் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதியில் பாகிஸ்தானுக்கு ஆதரவான நிலையைச் சீனா எடுத்திருப்பது உறுதியாகியுள்ளது.

அதை நிரூபிப்பது போல சீனா- பாகிஸ்தான் இராணுவ வீரர்கள் ஒன்றிணைந்திருக்கும் படங்கள் இணையத்தளங்களில் வெளியிடப்பட்டன. பாகிஸ்தான்-சீனா இராணுவத்தின் இந்த நடவடிக்கை இந்தியாவுக்குச் சிக்கலாக மாறியுள்ளது.

சீனாவின் அச்சுறுத்தல் காரணமாக வடக்கு எல்லையை பலப்படுத்த இந்தியா புதிய அணுகுமுறையை மேற்கொள்ளவேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. (இ-5-10)

## குடியேறிகளின் படகில் 22 சடலங்கள் மீட்பு!



மத்தியதரைக் கடலில் குடியேறிகளின் படகொன்றில் இருந்து 22 சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. லிபிய கடற்பகுதியில் படகின் கீழ்ப்பாகத்தில் நீர் மற்றும் எரிபொருள் தேங்கி இருக்கும் பகுதியில் 21 பெண்கள் மற்றும் ஒரு ஆணின் சடலமே கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இவர்கள் குறித்த இறப்பர் படகில் பல மணி நேரம் சிக்கி இருந்திருப்பதாக எல்லைகளற்ற மருத்துவர் அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

எனினும் இந்த படகில் உயிர்தப்பிய 200க்கும் அதிகமானோர் குறித்த தொண்டு அமைப்பினால் செயற்படும் படகொன்றுக்கு மாற்றப்பட்டுள்ளனர். இவர்களில் 50 சிறுவர்கள் அடங்குகின்றனர்.

என்ன நிகழ்ந்தது என்பது உறுதி செய்யப்படாதபோதும் அவர்களது மரணம் பயங்கரமாக இருந்துள்ளது என்று எல்லைகளற்ற மருத்துவ அமைப்பைச் சேர்ந்த ஜேன்ஸ் பகொட்டோ தெரிவித்தார். படகில் இருந்த பெரும்பாலானவர்கள் மேற்கு ஆபிரிக்க நாட்டைச் சேர்ந்தவர்களாவர்.

மத்தியதரைக் கடலில் கடந்த புதனன்று மேற்கொள்ளப்பட்ட மீட்பு நடவடிக்கையின்போது 2,000க்கும் அதிகமான குடியேறிகள் காப்பாற்றப்பட்டுள்ளனர். இவர்கள் சிசிலிக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர்.

இந்த ஆண்டில் மத்திய தரைக் கடலில் ஆயிரக் கணக்கான குடியேறிகள் உயிரிழந்தும், காணாமல்போயும் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5-10)

## பேரழிவை சந்தித்து வரும் அலெப்போ நகர வாசிகள்

### ஐக்கிய நாடுகள் சபை எச்சரிக்கை

போருக்கு தயார் நிலையில் உள்ள சிரியாவின் அலெப்போ நகரில் சுமார் இரண்டரை இலட்சம் மக்கள் மனிதாபிமான பேரழிவை சந்தித்து வருவதாக ஐக்கிய நாடுகள் சபை எச்சரிக்கை விடுத்துள்ளது.தீவிரவாதிகள் வசமிருந்த அலெப்போ நகரின் கிழக்குப் பகுதிக்கு செல்ல மற்றும் வெளியேற இருந்த ஒரே முக்கிய நெடுஞ்சாலையை அரசு படையினர் அண்மையில் துண்டித்தனர். பெரும் நிவாரண முயற்சிகள் தற்போது தேவை என ஐ.நாவின் மூத்த அதிகாரி ஜான் எகிலாந்து தெரிவித்துள்ளார். ஒவ்வொரு வாரமும், 48 மணி நேர போர் இடை நிறுத்தத்திற்கு அவர் அழைப்பு விடுத்துள்ளார். அந்நேரத்தில் நகருக்குள் உதவிகள் சென்றுவர முடியும். குண்டு வீச்களாலும், ஷெல் குண்டு தாக்குதலினாலும் தினம் தினம் பொதுமக்கள் மடிந்து வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. (இ-5-10)

## தீப்பற்றி வீட்டிற்குள் விழுந்த விமானம்



அமெரிக்காவின் சிக்காகோ நகரத்தில் சிறிய ரக விமானமொன்று நேற்றுக் காலை தீப்பற்றி வீட்டிற்குள் விழுந்து வெடித்து சிதறியுள்ளது. குறித்த விமானத்தில் எரிபொருள் முற்றாக நிரப்பப்பட்டமையால் விமானம் தீ பற்றியுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர். இச்சம்பவத்தில் விமானி உயிரிழந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-5-10)

## வடகொரியா விமானத்தில் திடீர் தீ! சீனாவில் அவசரமாக தரையிறக்கம்

(பீஜிங்)

வடகொரியா அரசுக்கு சொந்தமான ஏர் கொரியோ நிறுவனத்துக்கு சொந்தமான 'Tu-204' ரக விமானம் நேற்றுக்காலை நூற்றுக்கும் அதிகமான பயணிகளுடன் பியாங்யாங் நகரில் இருந்து சீன தலைநகரான பீஜிங்கை நோக்கி சென்று கொண்டிருந்தது.

சீன நாட்டின் வான் எல்லையில் பறந்தபோது அந்த விமானத்தின் இயந்திர பகுதியில் திடீரென தீப்பற்றியதால், வடகிழக்கு சீனாவில் உள்ள ஷென்யாங் நகர விமான நிலையத்தில் அவசரமாக தரையிறக்கப்பட்டதாக சீன ஊடகங்கள் தெரிவித்துள்ளன. (இ-5-10)

## பிரான்ஸ் இராணுவ ஹெலிகொப்டரை சுட்டு வீழ்த்திய ஐ.எஸ். தீவிரவாதிகள்

### 3 வீரர்கள் உயிரிழப்பு

லிபியாவில் பிரான்ஸ் இராணுவ ஹெலிகொப்டரை தீவிரவாதிகள் சுட்டு வீழ்த்தியதில் 3 வீரர்கள் பரிதாபமாக உயிரிழந்தனர்.

லிபியா நாட்டில் 2011ஆம் ஆண்டு ஜனாதிபதியாக இருந்த முகமது கடாபி ஆட்சி புரட்சிக்காரர்களால் தூக்கி எறியப்பட்டது. அதன் பிறகு புதிய ஆட்சி ஏற்படுத்தப்பட்டது. இந்த ஆட்சிக்கு உதவியாக நேட்டோ படைகள் அங்கு முகாமிட்டுள்ளன.

இதில் பிரான்ஸ் நாட்டு உளவு படையினரும் இடம் பெற்றுள்ளனர். இந்த படையை சேர்ந்தவர்கள் இராணுவ ஹெலிகொப்டரில் சென்று கொண்டு இருந்தனர். அப்போது தீவிர வாதிகள் ஹெலிகொப்டரை நோக்கி சுட்டனர்.

இதில், ஹெலிகொப்டர் தீப்பற்றி வெடித்து சிதறி கீழே விழுந்தது. அதில் இருந்த 3 வீரர்கள் உயிர் இழந்தனர்.

லிபியா நாட்டில் ஐ.எஸ். ஆதரவு கொண்ட தீவிரவாத அமைப்புகள் செயல்பட்டு வருகின்றன. அவர்கள்தான் இந்த ஹெலிகொப்டரை சுட்டு வீழ்த்தி இருக்க வேண்டும் என்று கருதப்படுகிறது. ஹெலிகொப்டர் சுட்டு வீழ்த்தப்பட்டதையும், வீரர்கள் பலியானதையும் பிரான்ஸ் ஜனாதிபதி பிரான்கொய்ஸ் ஹாலன்டே உறுதிசெய்துள்ளார். (இ-5-10)




## பங்களாதேஷ் எதிர்க்கட்சித்தலைவியின் மகனுக்கு 7ஆண்டுகள் சிறைத்தண்டனை

(டாக்கா)

பங்களாதேஷ் எதிர்க்கட்சித் தலைவி காலிதா சியாவின் மூத்த மகன் தாரிக் ரஹ்மானுக்கு ஏழு ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்து உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

சிறைத் தண்டனையுடன், 2.5 மில்லியன் டொலருக்கு இணையான தொகையையும் அபராதமாக விதித்துள்ளது.

காலிதா சியா, ஆட்சியில் இருந்தபோது, அவரும் அந்த அரசாங்கத்தில் இடம் பெற்றிருந்தார்.

அப்போது அவர் ஊழ லில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டப்பட்டது.




இந்த தீர்ப்பை அடுத்து 51 வயதான ரஹ்மா னுக்கு அரசியலில் ஈடுபட வும் தடை ஏற்பட்டுள்ளது.

பங்களாதேஷில் ஆட்சியில் உள்ள பிரதமர் ஷெய்க் ஹஸீனா அரசு எதிர்க்கட்சிகளை ஒடுக்கும் நடவடிக்கையில் தீவிரம் காட்டுவதாக பரவலாக குற்றச்சாட்டு உள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-5-10)

# சூழலுக்கியைவான பசுமைத் தொழில்நுட்பங்கள்–81

# வரமான கற்பக தருவுக்கென ஒரு வாரம்



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்


வாருங்கள் எம்மினிய உறவுகளே!

பனை எங்கள் சூழல, பனை எங்கள் பண்பாடு, பனை எங்கள் பொருளாதாரம் என்னும் சொற்பதங்களைத் தாங்கி வடமாகாண பனை அபிவிருத்தி வாரம் (22. 06.2016 தொடங்கி 28.07.2016 வரை) பனை அபிவிருத்தி கண்காட்சி திறப்பு நிகழ்ச்சியுடன் நேற் றையதினம் ஆரம்பமாகியிருக்கின்றது. வடமாகாணத்தின் விவ சாய,கமநலசேவைகள், கால் நடை அபிவிருத்தி,கூட்டுறவு அபிவிருத்தி, உணவு வழங்கல், நீர் வழங்கல், நீர்ப்பாசனம மற்றும் சுற்றாடல் அமைச்சு இதனை ஒழுங்கு படுத்தியிருக்கின்றது. வெளிப்படையாகவே மனந்திறந்து பாராட்டுக்கள்!

மறைந்தவள்ளல் கலாநிதி கனகராசாவின் முயற்சியால் பல இடங்களில் பனைகள் ஓங்கி வளர்ந்து கண்கொள்ளாக் காட்சியாக இருக்கின்றது. பாதையெங்கும் பார்த்து பார்த்து நடவு செய்யப்பட்ட பனைகள் இன்று நீண்டு நிமிர்ந்து வளர்ந்து தனக்குரிய இறு மாப்புடன் காணப்படுவது அனைவருக்கும் மகிழ்ச்சியைத் தருகின்றது. சுயநலம் பாராது அன்னார் செய்த நற்காரியம் இன்று பல இடங்களில் கண்ணூடாக காணக் கிடைக்கின்றது. இப்படியான வட மாகா ணத்தின் அடையாளங்களில் முக்கியமானது பனை என் னும் கற்பகதரு. இது எமக் குரிய அடையாளமென்பதில் எந்தவித சந்தேகமுமில்லை. இங்குள்ள மக்கள் பனைசார் பொருளாதாரத்தை அடிப்ப டையாக கொண்டு வாழ்ந்த வர்கள், வாழுகின்றார்கள் என்பதில் மாற்றுக்கருத்தும்

என்பதுடன் வெள்ளத்திலும் கால் பதித்து நிற்கும் தன்மை வாய்ந் தது என்பது இந்த அடைமொ ழிக்கு உரிமையானதாகின்றது. பனைமரத்திற்கு மறுக்கப்படும் அந்தஸ்து இங்குள்ள மனிதருக்கு மறுக்கப்படும் உரிமைக்கானதாகும். ஆனால் என்னவோ தெரியவில்லை வடமாகாணசபையின் மரமாக பனைக்கு அந்த உரிமம் மறுக்கப்பட்டிருக்கின்றது. மருது மரத்திற்கு அந்த உரிமைகொடுக் கப்பட்டதன் சூட்சுமமும் இன்னும் புரியவில்லை. தமிழ்நாட்டின் மரமாக பனை அங்கீகரிக்கப் பட்டிருக்கும் போது எம்மால் ஏன் இந்த மதிப்பைக் கொடுக்க முடியவில்லை. உரியவர்க ளிடமே இதனை பரிசீலிக்க விட்டுவிடுவோம்.

வரண்ட வலயத்துக்குரியதென அடையாளப்படுத்தினாலும் பனையின் மகத்துவம் அளப்ப ரியது. பனை என்பதுவெறும் மரமல்ல. அது ஒரு மனித சமூகத்தின் அடையாளம். பனை என்பது வெறும் ஜடமல்ல. அது



ஒரு சூழலின் தோற்றுவாய். பனைஎன்பது பத்தில் ஒன்றல்ல. அது ஒரு தலவிருட்சத்தின் உருவகம். பனை என்பது ஈரெழுத்து மட்டுமல்ல. அது ஒரு வித்திலையின் உயர்ச்சி. கற்பக தருவாக கொள்ளப்படுகின்ற பனையின் பயன்பாடு மிகவும் உன்னதமானது. வடபகு

பேணப்படுகின்றது எனலாம். எமது வாழ்வியல் பனைசார்ந்த சூழல் தொகுதியினுள்ளேயே உள்வாங்கப்பட்டிருக்கின்றது என் பதே யதார்த்தம். இதனை பலர் உணர்ந்திருந்தாலும் அநேகமா னவர்கள் உணர தவறியிரு ககின்றார்கள். இயற்கையின் சுகத்தை அனுபவிக்காத நகரவாசிகளுக்கு நிச்சயமாக இத னது அருமை தெரியவராது என்றாலும் உண்ண உண வாக, உறையுளாக,உடையாக இன்னும் பலவழிகளில் பனையின் பெறுமதி உள்ளார்ந்திருக்கின்றது.

ஆனால் பல்லாண்டுகாலமாக இருந்த அசாதாரண சூழ்நிலை மாறி இந்த மண் அபிவிருத்தி காண துடிக்கின்ற போது தானாக முளைத்திருக்கும் பனையை குறிப்பாக வடலி களை, இரும்புக்கரங்கள் கொண்டு பிடுங்கியழித்து விட்டு அதே குடும்பத்தைச் சேர்ந்த தென்னையை நடவு செய்கின்றார்கள். அண்ணனை பிடுங்கி வெளியே எறிந்து விட்டு தம்பியை நடவுசெய்வதற்கு ஒப்பானது இது. ஒருகுடும்பத்து (தாவரவகைப்படுத்தலில் பாமேசியே என்னும் குடும்பத்துள் பனையும் தென்னையும் உள்ளடக்கப்படுகின்றன) உற வுகளுக்குள் ஏனிந்த பாகுபாடு. இது பனைக்கான முக்கியத்

கிடைக்கும் பயன்பாடுகளை நாம் அதே இலாபத்துடன் சந்தைப்படுத்த் முடியாதிருப்பதும் இன்னொரு காரணமாகும்.

பனை எமது சொத்து. அதனை நாம் பாதுகாக்கத் தவறினால் இயற்கையின் சீற்றத்திற்கு நாம் உள்ளாக வேண்டி வரும் என்பதனையும் நாம் கவனத்திற்கொள்ள வேண்டும். எமது சூழலை நாம் பாதுகாப்பது போலன்றி வராது. நிஷா புயல் வந்தபோதும் சுனாமி வந்தபோதும் கரையோரத்தில் பல உயிர்களை பனை காத்திருக்கின்றது என்பதனை அந்த அனாத்த த்திற்குள் சிக்கியவர்களைக் கேட்டால் தெரியவரும். எமக்கு நல்லனவற்றைத் தருகின்ற பனையை நாம் தெய்வமாக பாதுகாக்க வேண்டும். வெட்டிச் சரித்து கொண்டாடக்கூடாது. இயற்கையை அனுசரித்து நாம் வாழப் பழகவில்லையாயின் அதன் பின்வரும் அனைத்து துன்பங்களுக்கும் முகங்கொடுக்க தயாராகவும் வேண்டும்.

இயக்கச்சியிலிருந்து பளை நோக்கி ஏ-9 பாதையில் பயணிப்பவர்களுக்கு பாதை யோரத்தில் பனையும் அரச மர மும் அல்லது பனையும் ஆலமர மும் இணைந்திருக்கும் காட்சி நிச்சயம் தட்டுப்படும். தனித்த னியே இருக்கமுடிகின்ற இரு மரங்களும் இணைந்திருக்கின்ற விசித்திரமென்ன? ஒருகுறிப்பிட்ட சிறிய நிலப்பரப்பில் இரு விருட்ச ங்களும் ஒன்றாக இணைந்து எமக்கு இயற்கையின் செய்தியாக சொல்கின்ற செய்தி யென்ன? இரண்டும் இரு வகைகளைச் சார்ந்தன. ஒன்று ஒருவித்திலை (பனை) மற்றையது இருவித்திலை (ஆலமரம் அல்லதுஅரசமரம்) தாவரங்கள். இருப்பினும் தம க்கான அடையாளங்களை உயர்ந்து வெளிப்படுத்தி ஒரு

எமக்கானஅடையாளத்தை தொலைக்காத வரையில் எமக்கான அனைத்தும் கிடைக்கும் என்பதுசெய்தி. எமக்கான படிப்பினையாக கருதலாம். பனை சூழல் தொகுதியில் இனனொரு மரத்தையும் இணைத்து பல்வகைத்தன்மையை இனங்காட்டி அதிலும் தான் உயர்ந்து வளர்ந்து தனது அடையாளத்தைகாட்டி நிற்பதை காணுங்கள்.

இயற்கையின் கொடையாக எமக்கு கிடைத்த பொக்கிஷமே கற்பகதரு. இயற்கையின் வனப்பில் பனை மரங்களின் சலசலப்பில் அதனது சுகந்தத்தை அனுபவிக்க கிடைத்தவர்கள் பேறுபெற்றவர்களாவர். எமக்காக இயற்கை தந்த அருங்கொடையை பாதுகாக்க அமரர் கனகராசா எடுத்த முயற்சிக்கு நாம் கொடுக்கும், கொடுக்கின்ற மதிப்பும் மரியாதையுமே அவரின் ஞாபகமாக இவ் வாரத்தில் பனைக்கான வாரமாக கொண்டாடுவது. இந்த முயற்சிக்கு எம்மாலான

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு... 98

இருக்கமுடியாது. கற்பகதரு என விரும்பியழைக்கப்படும் பனையின் சிறப்புக்கள் பலப்பல. மரம் முழுக்க முழுமையாக மனிதனுக்கு பயன்படக் கூடியது என்பதனாலேயே இதற்கு இவ்வளவு சிறப்பும். ஓங்கிவளர்ந்து, தனித்து நின்று ஓங்கியடிக்கும் காற்றுக்கும் சுழற்றியடிக்கும் சூறாவளிக்கும் தாக்குப்பிடிக்கும் மரம்

தியைப் பொறுத்தவரையில் பனை வளம் மிக்கதாக காணப்படுவதுடன் பாதுகாக் கப்பட வேண்டியதாகவும் இது இருக்கின்றது. மரத்திற்கு அரசியல் தெரியாது. ஆனால் மரத்தை அரசியல் காரணி ஆக்கியிருக்கிறோம். பனை மரங்கள் செழிப்பாக காணப் படுகின்ற இடங்களில் நாம் எதிர்பார்த்த சூழல்

துவத்தை நாம் ஏற்படுத்திக் கொடுக்காததனால் ஏற்பட்ட விளைவாகும். பனையின் பயன்பாடுகளை நாம் தொழில்நுட்பம் சார்ந்து முன் னோக்கி நகர்த்தாததன் எதி ரொலியாகவும் இதனைக் கருத லாம். தென்னையை நடுவ தனால் பிற்காலத்திற்கு அதன் பயன் கிடைக்கும் என்பதற்கு மேலாக பனையிலிருந்து

வருக்கொருவர் விட்டுக்கொடுத்து அவரவர் தனித்துவத்தை வெளிககாட்டி காட்டும் விந்தையை இயற்கை நமக்கு பாடமாக கற்றுக் கொடுக்கின்றது. எமது அடையாளங்களை நாம் பாதுகாப்பதை விடுத்து இன னொருவர் சிரத்தை யெடுத்து பாதுகாப்பார் என நாம் எண்ணக்கூடாது. நாம் நாமாக இருக்கின்ற வரையில்

ஆதரவை கொடுப்பதுடன் வடபுலத்து மக்களின் வாழ் வியலுடன் இரண்டறக் கலந்திருக்கின்ற பனையின் விருத்திக்கு நாம் அனை வரும் தொடர்ந்து பாடுபடு வதுடன் பனை பற்றிய நல்ல செய்திகளை மக்களுக்கு அறியத்தருவதுடன் அதனது பயன்பாட்டையும் நாம் விரிவுபடுத்துவோமாக.

# மீனவர்களையும் படகுகளையும் விடுவிக்கக் கோரி இராமேஸ்வரம் மீனவர்கள் நேற்று வேலைநிறுத்தம்

(இராமேஸ்வரம்)

இலங்கை சிறையில் உள்ள மீனவர்களை விடுவிக்கக்கோரி இராமேஸ்வரம் மீனவர்கள் நேற்று முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர்.

தமிழக மீனவர்கள் கடலில் மீன்பிடிக்கச் செல்லும் போது எல்லை தாண்டி வந்ததாக கூறி இலங்கை கடற்படை சிறைபிடித்து செல்கிறது. அதன்படி தற்போது இராமேஸ்வரம் , நாகை ஆகிய பகுதிகளை சேர்ந்த 73 மீனவர்கள் சிறை பிடிக்கப்பட்டு இலங்கை சிறையில் அடைக்கப்பட்டு உள்ளனர். இதே போல் 113 தமிழக மீனவர்களின் விசைப்படகுகளையும் இலங்கை கடற்படையினர் சிறைபிடித்துள்ளனர்.

இலங்கை சிறையில் உள்ள மீனவர்களையும், படகுகளையும் விடுவிக்க நடவடிக்கை எடுக்கக் கோரி இராமேஸ்வரம் மீனவர்கள் பல்வேறு போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில் கடந்த சில நாட்களுக்கு முன்பு நடந்த மீனவர்கள் சங்கத்தின் ஆலோசனை கூட்டத்தில் மீனவர்களை விடுவிக்க வேண்டும், கச்சதீவு பகுதியில் பாரம்பரிய மீன்பிடி உரிமையைப் பெற்றுத் தர வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி 22 ஆம் திகதி (நேற்று முதல்) காலவரையறையற்ற வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவது என முடிவு எடுக்கப்பட்டது.

அதன்படி நேற்று இராமேஸ்வரத்தில் மீனவர்கள் வேலை நிறுத்தத்தை தொடங்கி உள்ளனர். இதனால் சுமார் 800 இற்கும் மேற்பட்ட விசைப் படகுகள் கடற்கரையில் நிறுத்தப்பட்டுள்ளன.

4 ஆயிரம் மீனவர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர். இராமேஸ்வரத் துறைமுகம் வெறிச்சோடி காணப்பட்டது. வேலை நிறுத்தத்தால் மீனவர்கள், மீன்பிடி தொழிலை சார்ந்தவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இது குறித்து மீனவர்கள் கூறுகையில், இலங்கை கடற்படையினரின் தொல்லை நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

இதனால் நாங்கள் அச்சத்துடனேயே கடலுக்கு சென்று வருகிறோம். தற்போது இலங்கை சிறையிலுள்ள 77 மீனவர்கள் மற்றும் 113 படகுகளையும் விடுவிக்க மத்திய, மாநில அரசுகள் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும். அதுவரை எங்கள் போராட்டம் தொடரும் என மேலும் தெரிவித்தனர். (இ-5-7)

## கறுப்பு நாள் கடைப்பிடிப்பதா?

# எங்கள் விவகாரத்தில் குறுக்கிட வேண்டாம்

## பாகிஸ்தானுக்கு இந்தியா கண்டனம்

(டில்லி)

தீவிரவாதி பர்கான் வானிக்காக கறுப்பு நாள் கடைப்பிடித்த விவகாரத்தில் பாகிஸ்தானுக்கு இந்தியா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. 'எங்கள் உள்நாட்டு விவகாரங்களில் குறுக்கிடாமல் விலகி இருங்கள்' எனவும் கண்டித்துள்ளது.

### கறுப்பு நாள் கடைப்பிடிப்பு

காஷ்மீரில் பாதுகாப்புப் படையினருடன் நடந்த மோதலில், ஹிஸ்புல் முஜாகிதீன் இயக்க தளபதி பர்கான் வானி சுட்டுக்கொல்லப்பட்டதைத் தொடர்ந்து, அங்கு பெரிய அளவில் வன்முறை சம்பவங்கள் அரங்கேறின.

பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப் லாகூரில் கடந்த 15 ஆம் திகதி அம்மைச்சரவையை கூட்டி, சுட்டுக்கொல்லப்பட்ட ஹிஸ்புல் முஜாகிதீன் இயக்க தளபதி பர்கான் வானியை சுதந்திர போராட்ட தியாகி என வர்ணித்தார்.

அவர் கொல்லப்பட்டதை கண்டித்து பாகிஸ்தானில் 20 ஆம் திகதி கறுப்பு தினம் கடைப்பிடிக்கப்போவதாகவும் அமைச்சரவை முடிவு எடுத்து அறிவித்தது. அதன்படி கறுப்புதினம் அனுஷ்டிக்கப்பட்டது.

### இந்தியா கண்டனம்

டில்லியில் மத்திய வெளியுறவுத்துறை செய்தி தொடர்பாளர் விகாஸ் சுவரூப் நேற்று முன் தினம் நிருபர்களை சந்தித்த போது, இது தொடர்பாக நிருபர்கள் கேள்விகள் எழுப்பினர். அப்போது அவர் இந்தியாவின் கடும் கண்டனத்தை பதிவு செய்தார். காஷ்மீர் பிரச்சினையில் பாகிஸ்தானிலும், பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரிலும் கடந்த 2 நாட்களாக நடந்த ஊர்வலங்கள், நிகழ்ச்சிகள் குறித்து தகவல்கள் வெளியாகியுள்ளன.

இது தொடர்பான அறிக்கைகளையும் பார்க்க முடிந்தது. இந்த நிகழ்ச்சிகளையெல்லாம் நடத்தியவர்கள், ஐ.நா. சபையால் பயங்கரவாதிகள் என அறிவிக்கப்பட்டவர்கள் என்பதை கவனத்தில் கொண்டுள்ளோம். இவர்கள்தான் கடந்த காலத்தில், ஒசாமா பின்லேடன், தலிபான் தலைவர் அக்தர் மன்சூர் ஆகியோர் பாகிஸ்தானில் கொல்லப்பட்ட போது எதிர்ப்பு தெரிவித்து போராட்டம் நடத்தியவர்கள்.

### பாகிஸ்தான் அரசு ஆதரவு

பாகிஸ்தான் அரசு, இத்தகைய பயங்கரவாதிகளுக்கும், அவர்களது செயற்பாடுகளுக்கு ஊக்குவிப்பும், ஆதரவும் அளித்து வருவதற்கு இந்தியா கடும் கண்டனம் தெரிவித்தது.

நாட்டின் எந்தவொரு பகுதியிலும் வன்முறையையும், பயங்கரவாதத்தை தூண்டிவிடுவதையும், அவற்றுக்கு ஆதரவு தருவதையும் பாகிஸ்தான் நிறுத்திக்கொள்ள வேண்டும் என்று மீண்டும் கூறிக்கொள்கிறோம். நமது நாட்டின் உள்நாட்டு விவகாரங்களில் வருந்தத்தக்க குறுக்கீடுகள் செய்வதில் இருந்து விலகி இருக்க வேண்டும்.

### 'உறுதி செய்க'

பாகிஸ்தான் காஷ்மீரை அடைவதை கடைப்பிடிப்பது, காஷ்மீர் மாநிலத்தை அடைவதற்கான பாகிஸ்தானின் ஏக்கத்தை காட்டுகிறது. பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில், பாகிஸ்தான் சட்டவிரோத ஆக்கிரமிப்பை கைவிட்டு தனது கடமையை நிறைவேற்ற வேண்டும்.

இஸ்லாமாபாத்தில் உள்ள இந்தியத் தூதரகத்தில் ஊர்வலங்கள், போராட்டங்கள் நடத்தப்போவதாக அச்சுறுத்தல்கள் வருகின்றன. இந்தியத் தூதரகத்தை, அதன் அதிகாரிகளை, அவர்களது குடும்பங்களை பத்திரமாக பாதுகாக்க வேண்டும். இதை பாகிஸ்தான் அரசு உறுதி செய்ய வேண்டும்என மேலும் தெரிவித்தார். (இ-5)

# 'நிலையான வளர்ச்சி' பட்டியலில் இந்தியாவுக்கு 110ஆவது இடம்




உலக அளவில் பொருளாதாரம் மந்தநிலையில் இருப்பதால் அனைத்து நாடுகளும் வளர்ச்சிக்கு பல சவால்களை சந்தித்து வருகின்றன. இந்நிலையில், பொருளாதாரம், சமூக பாதுகாப்பு, சுற்றுச் சூழல் பாதுகாப்பு, நல்ல ஆட்சி உட்பட பலவற்றில் நிலையான வளர்ச்சியை கண்டுவரும் நாடுகளின் தர வரிசைப் பட்டியல் வெளியாகியுள்ளது. மொத்தம்149 நாடுகள் தேர்வு செய்யப்பட்ட இந்த பட்டியலில் இந்தியா வுக்கு 110 ஆவது இடம்கிடைத்துள்ளது.

இந்த பட்டியலில் சுவீடன், டென்மார்க், நோர்வே நாடுகள் முறையே முதல் 3 இடங்களை பிடித்துள்ளன. G7 நாடுகளில் ஜேர்மனி (6), இங்கிலாந்து (10) ஆகிய இரண்டு நாடுகள் மட்டுமே டாப்-10 தரவரிசையில் இடம் பிடித்துள்ளன. அமெரிக்கா 25 ஆவது இடத்திலும், ரஷ்யா 47 ஆவது இடத்திலும், சீனா 76 ஆவது இடத்திலும் உள்ளன. இந்தியாவை தொடர்ந்து பாகிஸ்தான் 115 ஆவது இடத்திலும், மியன்மார் (117), பங்களாதேஷம் (118) மற்றும் ஆப்கானிஸ்தான் 139 ஆவது இடத்தையும் பிடித்துள்ளன. (இ-5)

# வடக்கு சிறுவர் பகல் பராமரிப்பு நியதிச்சட்டம் வடக்கு சபையில் ஏற்பு

## ஒப்புதலுக்காக ஆளுநருக்கு அனுப்பி வைப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண சிறுவர் பகல் பராமரிப்பு நியதிச்சட்டம் வடக்கு மாகாண சபையில் ஏற்றுக்கொள்ளப்பட்டு நிறைவேற்றப்பட்டுள்ளது. வடக்கு மாகாண சபையின் நேற்றைய அமர்வின் போது சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கத்தினால் முன்மொழியப்பட்டு சபையில் நிறைவேற்றப்பட்டு, ஆளுநரின் ஒப்புதலுக்காக அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.


இதன் மீதான விவாதத்தில் உரையாற்றிய வடமாகாண சுகாதார அமைச்சர் பா.சத்தியலிங்கம், வடமாகாணத்தில் 15 சிறுவர் பராமரிப்பு நிலையங்கள் காணப்படுகின்றன. அவற்றினைக் கட்டுப்படுத்த முடியாமல் இருக்கின்றது. குறித்த 15 சிறுவர் பராமரிப்பு நிலையங்கள் பதிவுகளுமின்றி இயங்கி வருகின்றன. இவ்வாறான பராமரிப்பு நிலையங்கள் உரிய வசதிகளுடன் செயற்படுத்தப்பட வேண்டும்.

அதற்கான் உரிய முறையின் படி ஒழுங்குபடுத்த வேண்டிய நிலைமை இருக்கின்றது. குழுவினை நியமித்து ஒழுங்கு விதிமுறைகளை நடைமுறைப்படுத்த வேண்டும். பொதுச்சுகாதார பகல் பராமரிப்பு நிலையம் ஒன்றினை ஊக்குவிக்க வேண்டும். சிலர் வறுமையின் காரணமாக சிறுவர் பராமரிப்பு நிலையங்களில் அர்ப்பணிப்பான சேவையினை செய்கின்றார்கள். எனவே, சட்டத்திற்கு ஏற்றவாறு.

குறித்த பராமரிப்பு நிலையகற்கை நெறிகளை படித்தவர்களுக்குமான விடயங்களை ஆராய்ந்து சிறுவர் பகல் பராமரிப்பு நிலையங்கள் அமைக்கப்பட வேண்டுமென்று சபையில் தெரிவிக்கப்பட்டது.

இந்தநிலையில், குழுநிலை வாதத்தின் நிறைவில், வடமாகாண சுகாதார அமைச்சர் பா.சத்தியலிங்கம் நியதி சட்டத்தை முன்மொழிந்தார், வடமாகாண சபை உறுப்பினர் ச.சர்வேஸ்வரன் வழிமொழிய, அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானம் வடமாகாண சபையின் சிறுவர் பகல் பராமரிப்பு நிலையம் அங்கீகரிக்கப்படுகின்றது என அறிவித்தார். (செ-4)

# விபத்தையடுத்து பேருந்துக்கு தீ வைப்பு



அலவ்வ - வாரியகொட பகுதியில் நேற்று முன்தினம் மாலை 6.30 மணியளவில் இடம்பெற்ற பேருந்து- ஆட்டோ விபத்தில் ஆட்டோ சாரதி உயிரிழந்தமையால் கோபமடைந்த குழுவினர் பேருந்துக்கு தீ வைத்துள்ளனர். (இ-5)

# பாதீட்டில் வரப்பிரசாதம்!

மொத்தத் தேசிய உற்பத்தியை 6 சதவீதமாக அதிகரித்தல், வரவு - செலவுத் திட்டப் பற்றாக்குறையை 4.7 சதவீதத்துக்குக் குறைத்தல், பொதுக் கடனை மொத்தத் தேசிய உற்பத்தியின் 75 சதவீதமாக்குதல் மற்றும் வேலையின்மையை 4.5 சதவீதமாக்குதல் என்ற இலக்குகளை அடையும் வகையில், 2017ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தைத் தயாரிப்பதற்கான அங்கீகாரத்தை, அமைச்சரவை வழங்கியுள்ளது.

அமைச்சரவையின் அங்கீகாரத்துக்காக, 2017ஆம் ஆண்டுக்கான பாதீட்டைத்தயாரிப்பது குறித்தான ஆவணத்தில், பணவீக்கத்தை 4 சதவீதமாகக் குறைக்கவும் பொது முதலீட்டை, மொத்த தேசிய உற்பத்தியின் 5 சதவீதமாகக் குறைப்பதற்குமான யோசனையும் உள்ளடக்கப் பட்டுள்ளது என, ஊடகத்துறை அமைச்சர் கயந்த கருணாதிலக்க, நேற்று முன்தினம் வியாழக் கிழமை தெரி வித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாடு, அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் இடம்பெற்றபோதே, அமைச்சர் இதை அறிவித்தார். (இ-10)

★ வலம்புரி கல்விப்பிரிவு ★

# க.பொ.த.(உ/த) பரீட்சை-2016 மாதிரிவினாத்தாள்

## தமிழ் பகுதி-I

### பகுதி-I

O1. மேல்வரும் செய்யுள்களை வாசித்து அவற்றின் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.

(i) நல்லுரை யிகந்து புல்லுரை தாஅய்ப்
பெயனீர்க் கேற்ற பசுங்கலம் போல
உள்ளந் தாங்கா வெள்ள நீந்தி
அரிதவா வுற்றனை நெஞ்சே நன்றும்
பெரிதா லம்ம நின்பூச லுயர்கோட்டு
மகவுடை மந்தி போல
அகனுறத் தழீஇக் கேட்குநர்ப் பெறினே.

(அ) இச்செய்யுளில் புலவர் சொல்ல விழைவதைக் குறிப்பிடுக.
(ஆ) இச்செய்யுள் மூலம் அறியப்படும் தலைவனின் குணப்பண்புகள் பற்றி விளக்குக.
(இ) இச்செய்யுளில் புலவரின் கவித்திறம் வெளிப்படுமாற்றைத் தெளிவுபடுத்துக.
(ஈ) இப்பாடலில் வெளிப்பட்டுள்ள சங்ககால அகத்திணைப் பண்புகள் யாவை?

(ii) அகமிசை யிருந்து புசித்திடக் கிடையா
தாகுல மிகுத்துளங் கலங்கிச்
செகதல முழுதுந் திரிந்தலைந் தகவர்க
டிரவியக் குவைபல வெதிர
விகலற வெடுத்து மனைமிசை புதைத்தோ
ரிதயபங் கையங்களிப் பென்ன
மகிதல முழுதுந் துதிசெயக் கரிய
மழைமுகிற் கருவுதித் ததுவே

(அ) இச்செய்யுள் இடம்பெற்ற சந்தர்ப்பத்தினை விளக்குக.
(ஆ) இச்செய்யுளின் பொருளை இக்கால உரைநடையில் எழுதுக.
(இ) இப்பாடலில் உள்ள உவமை அணியை எடுத்துக்காட்டி. அதன் சிறப்பினை விளக்குக.
(ஈ) இப்பாடலில் உள்ள உருவக அணிகளை எடுத்துக்காட்டி விளக்குக.

O2) அ பகுதியிலுள்ள கவிதையைப் படித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடைதருக.

அல்லது

ஆ பகுதியிலுள்ள உரைநடைப் பகுதியைப் படித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடைதருக.

ஏன் கடலே இரைகின்றாய்?
இன்று உனக்கும் சம்பளமா?
ஏழை வீட்டில்
தான் நீயும் பிறந்தனையோ?
தமிழா நீ கற்றதுவும்
தகாத வார்த்தை!
தேன் கடலாய் ஓடுமெங்கள்
திருநாட்டில் பிறந்த பயன்
தெரிகின்றாயோ?
வான் தந்த வளமிலையோ
வயல் தந்த நிதியிலையோ
வாடாதே நீ .........

காற்செருப்புக் கழன்றதுவா?
கட்டுதற்கும் இடமிலையா?
கால் நூற்றாண்டாய்
தோற் பொருத்தித் தோற்பொருத்தித் துணையாக
உழைத்த அவை தொழிலில் ஓய்ந்தால்
போற்றுதற்கோர் பொதுக்கூட்டம் போட்டதிலே
பொன்னாடை போர்த்து. மேலும்
பாற்சோறும் பட்சணமும் படைப்பதற்கு
நின்னிடத்தே பணமா இல்லை?

"இபோசா" பஸ்களிலே ஏறுகையில்.
வியர்வையினால். ஏழை தோழன்
யப்பானார் இறக்குகிற புறமார்க்கு
மல்வேட்டி அடடா "டப்டப்"
"சப்" பென்று மூச்சுவிட்டு சல்லடையாய்
மாறிற்றோ? சனத்துக்குள்ளே
இப்படியும் அவமானம் ஏதேனும்
வந்ததுவா? இரைகின்றாய் நீ!

சட்டம்பி ஆனவன்றே சந்தையிலே
வாங்கிவந்து சலியா தின்று
பொட்டுதிப் போனாலும் புழுதி மிகப்
படிந்தாலும் போன மாதம்
கட்டறுந்த குடையினைஎம் கந்தோருக்
கெடுத்துப்போய். கவனமின்றி
பட்டணத்துக் கடையெதிலும் பறிகொடுத்து
விட்டனையோ? பதறுகின்றாய்!

கல்லூரி மாணவிஉன் மகள் கமலா
ஏதேனும் காசா கேட்டாள்?
அல்லாஹ் போல். அனுதினமும் சில்லறைக்குக்
கடன்தந்த அலியார் நானா
பொல்லாத வார்த்தை எதும் புகன்றாரோ?
பொருமுகிறாய்! போன ஆண்டு
நில்வைக்கு வரிசையிலே நின்படலை
மட்டும் அங்கார் நிற்கின்றாரோ?
அந்திபட்டும் இருசாமம் ஆச்சுதினிக்

கடன்காரர் ஆரும் அங்கே
இந்தவரை நில்லார்கள்; என் மனையாள்
மட்டுமங்கே இருப்பாள் ஏங்கி;
நொந்தென்ன கண்டோம்யாம்? இல்லாமை
யாம் கொடிய நோயைப் போக்க
விந்தைமருந்தறியாமல் விதியென்று
பேசுகின்றோம்! வீடு செல்வோம்.

(i) இன்று உனக்கும் சம்பளமா? என்ற தலைப்பு இக்கவிதைக்குப் பொருந்துமாற்றை விளக்குக.
(ii) இக்கவிதையில் ஆசிரியர் ஒருவரின் ஏழ்மைநிலை எவ்வாறு சித்திரிக்கப்படுகின்றது?
(iii) இக்கவிதையில் கையாளப்பட்டுள்ள அணிகளை இனங்கண்டு தெளிவுபடுத்துக?
(iv) "............................... இல்லாமை
யாம் கொடிய நோயைப் போக்க
விந்தைமருந்தறியாமல் விதியென்று
பேசுகின்றோம்! வீடு செல்வோம்."
என்பதன் மூலம் ஆசிரியருடைய மனவுணர்வு எவ்விதம் வெளிப்படுத்தப்படுகிறது?

அல்லது

(ஆ) மனதைச் செம்மைப்படுத்திக் கொள்வது மிக மிகக் குறைவு. விரல் விட்டு எண்ணக் கூடிய ஒரு சிலரே இந்த முயற்சியைச் செய்கிறார்கள். உண்மையாகப் பார்த்தால் இந்தத் துறையில் தான் பலரும் முயல வேண்டும். ஏனென்றால் இங்கு தான் முயற்சிக்கு ஏற்ற கூலி உண்டு. மனதைப் பொறுத்த வரையில் பரந்து உலகத்தின் தாக்குதல் குறைவு. இயற்கையின் தாக்குதல் மிகக்குறைவு. உடம்பின் தாக்குதலும் ஓரளவேயுள்ளது. எந்தச் சூழ்நிலையில் இருந்தாலும் எப்படிப்பட்ட உடம்பினுள் இருந்தாலும் ஒருவர் விடாமல் முயன்றால் விரும்பியபடி மனதை வைத்துக் கொள்ள முடியும். காந்தியடிகள் இளமையில் எவ்வளவு பயங்கொள்ளியாக இருந்தார். பின்னர் அஞ்சாமையின் திருவுருவாக விளங்கினார். தன்னலம் மிகுந்த மனம் தியாகம் நிறைந்த மனமாக ஆகமுடியும். ஒழுக்கத்தில் நம்பிக்கையற்ற மனம் ஒழுக்கத்தில் உறுதி பெறமுடியும். கண்டபடி அலையும் மனம் புத்தர் மனம் போல் அமைதி பெறமுடியும். சோம்பலுக்கு இடம்தரும் மனம் விடாமுயற்சியைப் போற்றும் மனமாக முடியும். எண்ணிய எண்ணியாங்கு எய்து என்பது மனதைப் பொறுத்தவரையில் முழுவதும் நடக்கக் கூடியது. உடம்பைப் பொறுத்தவரையில் பல ஆயிரத்தில் ஒரு சிறுபங்கே நடக்கக் கூடியது. அப்படி இருந்தும் மனதைச் செம்மைப்படுத்திக்கொள்ள முயல்வோர் ஒருசிலரே. இது வருந்தத்தக்கது.

மனம் போல வாழ்வு மனத்தினால் எண்ணித்தானே வந்தது இவ்வுலகமாகும். மனம் இங்கேயே நரகத்தை உண்டுபண்ணிக்கொள்ள முடியும். சுவர்க்கத்தைப் படைத்துக்கொள்ள முடியும். வாழ்வே மனத்தின் தன்மையை ஒட்டியதுதான். இன்பமும் துன்பமும் மனநிலைக்கு ஏற்றாறு அமையும். இவ்வளவெல்லாம் மனம் அடிப்படையாக இருந்தும் மனதைப் பண்படுத்துவதற்கு பலர் முயற்சிப்பதில்லை. அதனாலேயே அறிவுரைகள் பலருக்குப் பயன்படுவதில்லை. மனம் பண்படுவதற்கு வழி என்ன? நமக்கு முன் பண்பட்ட வாழ்க்கை வாழ்ந்தவர்களின் வரலாறுகளைப் படிக்க வேண்டும். அவர்கள் சொன்ன சொற்களை அல்லது எழுதிய எழுத்துக்களை திரும்பத் திரும்பப் படித்து உணரவேண்டும். கெட்ட காற்றிலும் நீரிலும் உள்ள நோய்க்கிருமிகள் நம் உடம்பில் புகாமல் ஊசிபோட்டும், மருந்து உண்டும் காத்துக்கொள்வது போலவே கெட்ட நூல்களிலும் கெட்ட கலைகளிலும் மனத்தின் பண்பாட்டுக்கு ஆகாத நோய்க்கருத்துக்கள் உள்ளன. அவை மனதிற் புகாமல் காத்துக்கொள்ள வேண்டும். அவ்வாறு காப்போமானால் கட்டாயம் குறிக்கோளை அடைய முடியும். உலகத்தையும் உடம்பையும் திருத்துவதை விட இவ்வாறு மனத்தைப் பண்படுத்துவது தான் கருதியபடி கைகூடுவது என்பதை உணர முடியும்.

(i) மனதைச் செம்மைப்படுத்துவதன் முக்கியத்துவம் யாது?
(ii) "மனம் இங்கேயே நரகத்தை உண்டுபண்ணிக் கொள்ள முடியும். சுவர்க்கத்தைப் படைத்துக்கொள்ள முடியும்" என்பதிலிருந்து நீர் விளங்கிக் கொள்வது யாது?
(iii) மனம் பண்படுவதற்குரிய வழிகளாக எவற்றைக் கட்டுரையாசிரியர் குறிப்பிடுகின்றார்?
(iv) கட்டுரை ஆசிரியரின் மொழிநடைச் சிறப்பை விளக்குக.

### பகுதி II

O3. "வினைத்தூய்மை" என்ற அதிகாரத்தில் திருவள்ளுவர் கூறியவற்றை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.
(அ) வினைத்தூய்மையின் சிறப்புப் பற்றி வள்ளுவர் கூறுவது யாது?
(ஆ) பாவமும் பழியும் பயக்கும் வினைகளைச் செய்ய வேண்டாம் என்பதை வள்ளுவர் எவ்வாறு வலியுறுத்துகிறார்?
(இ) வினைத்தூய்மைக்கான காரணங்களாக வள்ளுவர் எவற்றைக் கூறுகின்றார்?
(ஈ) தீய செயல்களால் பொருள் ஈட்டி பாதுகாக்கும் அமைச்சனின் செயலை விளக்க வள்ளுவர் கையாண்ட உவமையை விளக்குக.

O4. கைகேயி சூழ்வினைப் படலத்தில் இரவு கழிதல் முதல் சூரியோதயம் வரையுள்ள வருணனைப் பகுதியை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக
(அ) இராமனது முடிசூட்டு விழாவினைக் காண்பதற்கான மகளிரின் ஆவல் வெளிப்படுமாற்றைத் துலக்குக.
(ஆ) கைகேயி பற்றிய வாசகரது மனப்பதிவினைத் தெளிவுபடுத்துக.
(இ) நகரத்து ஆரவாரம் வர்ணிக்கப்படுமாற்றினை விளக்குக.
(ஈ) கையாளப்பட்ட தற்குறிப்பேற்ற அணிகள் மூன்றினை எடுத்துக்காட்டி விளக்குக.

O5. பைதிரம் நீங்கு படலத்தில் வானதூதன் கட்டளையிட்டது முதல் திவ்வியபாலன் நீங்கியதால் நாடும் நகரமும் துன்பம் அடைதல் வரையான பாடல்களை அடிப்படையாகக் கொண்டு.
(அ) வானதூதன் கூறியதைக் கேட்டு சூசையப்பர் அடைந்த துன்பம்.
(ஆ) திவ்விய பாலனுடைய பெருமைகள்.
(இ) மூவரும் நீங்கிச் சென்றமையால் யூதேயா நாடும் நகரமும் அடைந்த நிலை.
(ஈ) வீரமாமுனிவரின் கவித்துவம் என்பவற்றை விளக்குக.

O6. வ.அ. இராசரத்தினத்தின் "தாய்" என்ற சிறுகதையில்
(அ) தாய் என்ற பாத்திர உருவாக்கம்
(ஆ) மகளின் எண்ணப்போக்கு
(இ) கதைக்களம்
(ஈ) கதை சொல்லப்படும் விதம் ஆகியன பற்றி கருத்துரை வழங்குக.

O7. பேராசிரியர் தெ.பொ.மீனாட்சிசுந்தரனாரின் தமிழ்ச் செல்வாக்கு என்ற கட்டுரையை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.
அ. இலங்கையில் தமிழ்ச் செல்வாக்கு பரவிய விதத்தினைக் கட்டுரை ஆசிரியர் எவ்விதம் வெளிப்படுத்துகிறார்?
ஆ. தாய்லாந்தில் தமிழ்ச் செல்வாக்கு நிலவியமைக்கான சான்றாதாரங்களை எடுத்து விளக்குக.
இ. தூரகிழக்கு நாடுகளில் தமிழ்ப்பண்பாட்டு வளர்ச்சியில் தமிழ் அரசர்கள் பெறும் இடத்தினைத் தெளிவுபடுத்துக.
ஈ. கட்டுரை ஆசிரியரின் உரைநடைச் சிறப்பியல்புகளை எடுத்துக்காட்டுக.

O8. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டினை விபரிக்குக.
அ. "மன்னவனும் நீயோ வளநாடும் உன்னதோ....." என்ற பாடலில் கம்பனின் அஞ்சாமை. துணிவு. கவிப்புலமை
ஆ. சீபர்ப்பதப் பதிகத்தில் சுந்தரர் இறைவன் மீது கொண்ட பக்தி.
இ. "அளிதோ தானே பாரியது பறம்பே" என்ற புறநானூற்றுச் செய்யுளில் பாரி மன்னனின் நாட்டுச் சிறப்பு. கொடைத்திறம். வீரம்
ஈ. நீண்ட பயணம் நாவல் வெளிப்படுத்தும் வாழ்வியல் அம்சங்கள்.

◆ ◆ ◆

## தமிழ் பகுதி II

### பகுதி-I

O1.
(அ) எல்லா வினாக்களுக்கும் விடை தருக.
ஒவ்வொரு கூற்றுக்கும் கீழே ஐந்து விடைகள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் மிகப் பொருத்தமான விடையைத் தெரிந்து. அதன் இலக்கத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுக.

1.1) பின்வருவனவற்றுள் ஈரிதழ் ஒலிகள்
1. ம். ப் 2. க். த் 3. ய். வ் 4. ச். ஞ் 5. ங். ந்

1.2) பின்வருவனவற்றுள் பகரம் வேறுபட்டு ஒலிக்கும் சொல்
1. பட்டு 2. ஆம்பல் 3. பந்து 4. பன்றி 5. அப்பம்

1.3) ங். ஞ். ந். ம் ஆகிய ஒலிகளைக் குறிக்கும் பொருத்தமான ஒலிவகை
1. ஆடொலி 2. மருங்கொலி 3. மூக்கொலி 4. வெடிப்பொலி 5. உரசொலி

1.4) பின்வருவனவற்றுள் மூன்று மெய்கள் அடுத்து மயங்கும் சொல்
1. மயக்கம் 2. அண்ணல் 3. பற்று 4. வாழ்த்து 5. வெட்கம்

1.5) பின்வருவனவற்றுள் அகப்புணர்ச்சி இடம்பெற்ற சொல்
1. மரநுனி 2. கடலலை 3. வாழைக்குட்டி 4. பனைமரம் 5. பேசுகின்றார்

1.6) பின்வருவனவற்றுள் வன்றொடர்க் குற்றியலுகரத்தை அடுத்து வல்லினம் மிகும் புணர்ச்சி
1. பாட்டுப்பாடு 2. வரகுச்சோறு 3. பங்குச்சந்தை
4. உழவுத்தொழில் 5. வீட்டுத்தோட்டம்

1.7) புளியம்பழம் என்ற கூட்டுப்பெயரில் வந்த "அம்" என்ற உறுப்பு
1. இடைநிலை 2. சாரியை 3. சந்தி
4. விகாரம் 5. பெயரிடைநிலை

1.8) "களவெடுத்தாலும் பொய் சொல்லாதே" என்ற தொடரில் இடம்பெறும் உம் இடைச்சொல் உணர்த்தும் பொருள்
1. முற்று 2. ஐயம் 3. எதிர்மறை 4. இழிவு சிறப்பு 5. உயர்வு சிறப்பு

1.9) சிறுகச் சிறுகச் சேமித்துச் செல்வன் ஆனான். இதில் சிறுகச் சிறுக என்பது
1. உவமைத் தொடர் 2. இணைமொழி 3. இரட்டைக்கிளவி
4. அடுக்குத் தொடர் 5. அடுக்கிடுக்குத் தொடர்

1.10) மலர் முகம் என்பது
1. உவமைத்தொகையும் உம்மைத்தொகையும்
2. வினைத்தொகையும் பண்புத்தொகையும்
3. அண்மொழித்தொகையும் வேற்றுமைத்தொகையும்
4. பண்புத்தொகையும் உவ்மைத்தொகையும்
5. உவமைத்தொகையும் வினைத்தொகையும்

14 ஆம் பக்கம் பார்க்க

## கணக்கீடு பகுதி-II தொடர்ச்சி.. கொழும்பு றோயல் கல்லூரி

05)

அ) ஜனஜய கம்பனி 2016 ஜனவரி மாத ஊழியர் வேதனம் தொடர்பான தரவுகள்

i. பணிபுரிந்த மணித்தியாலங்கள்

| | | வார இறுதி நாட்கள் | |
|---|---|---|---|
| ஊழியர் பெயர் | வார நாட்கள் | சனிக்கிழமை | ஞாயிற்றுக்கிழமை |
| றொஷான்- | 170 | 32 | 10 |
| ஹசான் | 160 | 24 | 04 |
| ராஜு | 180 | 16 | - |

ii. கூலி கொடுப்பனவு முறை பின்வருமாறு

- மாதமொன்றுக்கான வேலை நேரம் -சாதாரணம் 160 மணித்தியாலம்
- மணித்தியாலமொன்றுக்கான கூலி -சாதாரணம் ரூ. 100
- மேலதிக நேர கூலி விகிதம் -வாரநாட்களாயின் மணித்தியாலத்திற்கு ரூ. 150 படியும்
  -வார இறுதி நாட்களாயின் மணித்தியாலத்திற்கு ரூ. 200 படியும்.

iii. ஊழியர் சேமலாப நிதியத்திற்கான பங்களிப்பு - ஊழியர் 10 % வீதம்
-நிறுவனம் 15 % வீதம்

ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கான பங்களிப்பு -நிறுவனம் 3% வீதம்

மேலதிக நேரகூலி ஊழியர் சேமலாபநிதி. ஊழியர் நம்பிக்கை நிதி கணிப்பீட்டுக்கு கவனத்திற்கொள்ளப்படமாட்டாது.

iv. றொஷானின் சம்பளத்தில் மாதாந்தம் ரூ. 5000 அவர் பெற்ற வீட்டு கடனுக்காக கழிக்கப்படும். அனைத்து ஊழியர்களும் மாதாந்தம் தமது சம்பளத்தில் ரூ.500 நலன்புரி சங்க கட்டணமாக செலுத்துவர்.

ஹசான் சம்பள முற்பணமாக ரூ. 10 000 இனை எடுத்திருந்தார்.

தேவைப்படுவது:-

i. 2016 ஜனவரி மாதத்திற்கான பொருத்தமான பகுப்பாய்வு நிரல்களுடன் சம்பள பட்டியல்

ii. சம்பள கட்டுப்பாட்டுக் கணக்கு, ஊழியர் சேமலாபநிதி கணக்கு, ஊழியர் நம்பிக்கைநிதி கணக்கு

ஆ) நிக்ஷலா பொதுக்கம்பனி லிமிடெட்டின் 2015 ஏப்ரல் 1 இல் ஆதனம்பொறி உபகரணங்கள் தொடர்பான தரவுகள் வருமாறு

| ஆதனவகை | கிரயம் ரூ (000) | திரண்ட தேய்மானம் ரூ. (000) | மதிப்பிடப்பட்ட ஆயுட்காலம் ஆண்டுகளில் |
|---|---|---|---|
| கட்டடம் | 10 000 | 4 000 | 25 |
| மோட்டார்வான் | 6 000 | 2 400 | 10 |

அனைத்து ஆதனங்களும் நேர்கோட்டு முறையில் தேய்விடப்படுகிறது. (எஞ்சிய பெறுமானத்தினை புறக்கணிக்க)

2016 மார்ச் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான கொடுக்கல்வாங்கல்கள் வருமாறு

| திகதி | கொடுக்கல் வாங்கல்கள் |
|---|---|
| 2015.04.01 | ரூ. 3 மில்லியனில் கட்டடம் திருத்தப்பட்டது. இது கட்டடத்தின் ஆயுட்காலத்தை 30 வருடங்களாக அதிகரிக்கச் செய்யும். |
| 2015.10.01 | மோட்டார் வான் ரூ. 4 மில்லியனுக்கு விற்கப்பட்டது. |
| 2016.01.01 | புதிய இயந்திரமொன்று ரூ. 4 மில்லியனுக்கு வாங்கப்பட்டது. இதன் மதிப்பிடப்பட்ட ஆயுட்காலம் 05 ஆண்டுகளாகும். |

தேவைப்படுவது:-

1) ஆதனம் பொறி உபகரணங்களுக்கான 2015/16 ஆம் ஆண்டுக்கான பெறுமான தேய்வு தொகை தனித்தனியே (கட்டடம், வாகனம், இயந்திரம்)

2) மேற்கூறப்பட்ட கொடுக்கல்வாங்கல்களினால் தேறிய இலாபத்தில் ஏற்படும் தாக்கம்.

06)

அ) சவுத்தேர்ன் ஸ்டார் விளையாட்டு கழகத்தின் 2016 மார்ச் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான பெறுவனவு கொடுப்பனவு கணக்கு

### பெறுவனவு கொடுப்பனவு கணக்கு

| | | | |
|---|---|---|---|
| மீதி கீழ் கொணர்ந்தது | 44 000 | சம்பளம் | 50 000 |
| பெற்ற சந்தாபணம் | 214 000 | இசைவிழா செலவு | 220 000 |
| அனுமதிக் கட்டணம் | 80 000 | கழக செலவுகள் | 60 000 |
| ஆயுள் அங்கத்துவ கட்டணம் | 500 000 | மைதான பராமரிப்பு | 100 000 |
| பொது நன்கொடை | 100 000 | விளையாட்டு உபகரணம் | 300 000 |
| இசைவிழா வருமானம் | 300 000 | அலுவலக உபகரணம் | 200 000 |
| | | மீதி கீழ் சென்றது | 308 000 |
| | 1238 000 | | 1238000 |

மேலதிக தகவல்

i. பெற்ற ஆயுள் அங்கத்துவ கட்டணத்தில் ரூ.50 000 நடப்பாண்டுக்குரிய வருமானமாக இனங்காணப்படல் வேண்டும்.

ii. கழகம் 2015.04.01 இல் வருமதியாய் இருந்த சந்தாப் பணத்தில் ரூ. 10 000 இனை வசூலிக்க முடியாதென பதிவழிக்கவும். இவர்களின் அங்கத்துவத்தை இரத்துச் செய்யவும் தீர்மானிக்கப்பட்டது.

iii. 2015 ஏப்ரல் 01 இல் அங்கத்தவரொருவர் ரூ.250 000 பெறுமதியான மோட்டார் சைக்கிளொன்றை அன்பளிப்பாக வழங்கினார். மோட்டார் சைக்கிளுக்கு ஆண்டிற்கு 20 % படி நேர்கோட்டு முறையில் தேய்விடப்படும். மேலும் இவ் அன்பளிப்பு இவ்வருடம் தொடக்கம் 05 வருடங்களுக்கு சமனான தொகைகளாக வருமானமாக பிரதிபலிக்கப்படும்.

iv. 31 மார்ச் 2015 இலும் 31 மார்ச் 2016 இலும் கழகத்தின் சொத்துக்களும் பொறுப்புக்களும் வருமாறு

| | 31.03.2015 | 31.03.2016 |
|---|---|---|
| அலுவலக உபகரணம் (தேறியது) | ரூ. 150 000 | ரூ. 330 000 |
| விளையாட்டு உபகரணம் (தேறியது) | 250 000 | 500 000 |
| வருமதியாய் இருந்த சந்தாப்பணம் | 34 000 | 28 000 |
| முற்பணமாக இருந்த சந்தாப்பணம் | 10 000 | 24 000 |
| அட்டுறு கழக செலவுகள் | 10 000 | 30 000 |

தேவைப்படுவது:-

i. 01 ஏப்ரல் 2015 இல் உள்ளவாறான திரண்ட நிதி

ii. 31 மார்ச் 2016 இல் முடிவுற்ற ஆண்டிற்கான வருமான செலவுக் கணக்கு

iii. 31 மார்ச் 2016 இல் உள்ளபடியான நிதி நிலைமைக் கூற்று.

(ஆ) சமன்பெரேர கொழும்பில் மிகப்பிரபல்யமான க.பொ.த(உயர்தர) ரியூசன் ஆசிரியராகும். 2016 க.பொ.த(உயர்தர) மாணவர்களுக்கான கருத்தரங்கொன்றை ஒழுங்குபடுத்துமுகமாக பின்வருவனவற்றை மதிப்பிட்டுள்ளார்.

கட்டணம்:-மாணவர் ஒருவருக்கு ரூ 1000 கட்டணமாக அறவிடப்படும்

மதிப்பிட்ட கிரயங்கள்

| | |
|---|---|
| மாணவரொருவருக்கான உதவிகருத்தரங்கு வினாத்தாள்களின் பெறுமதி | ரூ 200 |
| எழுதுகருவி பொதி | 60 |
| குளிர்பானம் வழங்கல் | 40 |
| மண்டபத்திற்கான வாடகை | 80 000 |
| ஒலி,ஒளி அமைப்புக்கட்டணம் | 50 000 |
| ஊழியருக்கான சம்பளம் ஒருவருக்கு ரூ2000 படி 05 ஊழியர்கள் தேவைப்படுவர் | |
| விளம்பர செலவுகள் | 30000 |
| போக்குவரத்து செலவுகள் | 20000 |

மேலதிக தகவல்:-ICBT கெம்பஸ் ரூ 50 000 இனை அனுசரணையாக வழங்குவதற்கு முன்வந்துள்ளது.

தேவைப்படுவது:-

1. உதவிக்கருத்தரங்குக்கான மொத்த நிலையான கிரயம்

ii. மாணவர் ஒருவரின் பங்களிப்பு

iii. மொத்த செலவினை ஈடுசெய்து கொள்வதற்கு கலந்து கொள்ள வேண்டிய மாணவர்களின் எண்ணிக்கை

iv. 1000 மாணவர்கள் கலந்து கொள்வாராயின் எதிர்பார்க்கக்கூடிய இலாபம்?

v. ரூ 420 000 இனை இலாபமாக உழைப்பதற்கு கலந்து கொள்ள வேண்டிய மாணவர் எண்ணிக்கை

07)

(அ) சாதனா கம்பனி தமது உற்பத்தி இயலளவினை அதிகரிக்கும் நோக்கில் புதிய இயந்திரமொன்றை கொள்வனவு செய்வது தொடர்பாக 02 இயந்திரங்கள் தொடர்பான தரவுகளைத் திரட்டியுள்ளது.

| | இயந்திரம் (A) | இயந்திரம் (B) |
|---|---|---|
| கிரயம் ரூ(000) | 1200 | 1000 |
| மதிப்பிட்ட ஆயுட்காலம்-ஆண்டுகளில் | 05 | 05 |
| எஞ்சிய பெறுமதி | 200 | - |

புதிய இயந்திரம் கொள்வனவு செய்யப்படுமாயின் ஏற்கனவேயுள்ள பழைய இயந்திரத்தினை ரூ 20 000இற்கு விற்கமுடியும்.

10% கழிவுக்காரணியில் கழிவிடப்பட்ட வீதங்கள் 05 ஆண்டுகளுக்கு முறையே

| ஆண்டு | 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|---|
| கழிவுக்காரணி வீதம் | 0.9 | 0.8 | 0.7 | 0.6 | 0.5 |

இரு இயந்திரங்களுக்கும் எதிர்பார்க்கின்ற செயற்பாட்டு நடவடிக்கையினால் காசு சேமிப்புகள் முறையே

| ஆண்டு | தேறிய காசுப்பாய்ச்சல் | |
|---|---|---|
| | இயந்திரம்(A) | இயந்திரம்(B) |
| 1 | 600 | 500 |
| 2 | 200 | 300 |
| 3 | 400 | 400 |
| 4 | 300 | 300 |
| 5 | 100 | 100 |

தேவைப்படுவது:-

1. முதலீடு மீளளிப்புக்காலம்(இயந்திரம் A, B)
2. தேறிய நிகழ்காலப்பெறுமதி(இயந்திரம் A, B)
3. மேலே கணிப்பிட்ட நுட்பங்களின் படி முதலீடு தொடர்பான ஆலோசனை யாது?

(ஆ) பின்வரும் கடன்படுநர் கட்டுப்பாட்டு கணக்கு அரவிந் பொதுகம்பனி லிமிடெட்டின் 2016 ஜனவரி மாதத்தில் இடம்பெற்றது.

### கடன்படுநர் கட்டுப்பாட்டு கணக்கு

| | | | |
|---|---|---|---|
| மீதி வந்தது 2016.01.01 | 120 | விற்பனை திரும்பல் | 200 |
| விற்பனை | 1880 | அனுமதித்த கழிவு | 100 |
| | | அறவிடமுடியாகடன் | 50 |
| | | வங்கி | 1070 |
| | | கடன்கொடுநர் பேரேடு | 80 |
| | | 31.01.2016 மீதி சென்றது | 500 |
| | 2000 | | 2000 |

2016 ஜனவரி 31 இல் கடன்படுநர் கட்டுப்பாட்டு கணக்கு மீதியும் கடன்படுநர் பேரேட்டு பட்டியல் மொத்தமும் இத்தினத்தில் இணங்கவில்லை. பின்னைய கணக்காய்வில் வேறுபாட்டிற்கான காரணங்களாக பின்வருவன இனங்காணப்பட்டன.

01. விற்பனை தினசேரியில் ரூ200 000 மிகையாக கூட்டப்பட்டிருந்தது
02. வாடிக்கையாளர் அன்வரிடம் வசூலித்த காசோலை ரூ70 000 அவரது கணக்கில் பதியப்படவில்லை
03. வைப்புச்செய்து மறுக்கப்பட்ட ரூ 100000 பெறுமதியான காசோலை தொடர்பில் கட்டுப்பாட்டுக்கணக்கில் எப்பதிவும் இல்லை.
04. விற்பனை திரும்பல் நாளேடு ரூ 50 000 குறைவாக கூட்டப்பட்டிருந்தது.
05. ஜனவரி மாதம் அறவிட முடியா கடனாக பதிவழித்த தொகை தனிநபர் பேரேட்டுக்கு மாற்றப்படவில்லை.

தேவைப்படுவது:-

1) திருத்திய கடன்படுநர் கட்டுப்பாட்டு கணக்கு

2) வழு (1) (4) என்பவற்றிக்கான திருத்தக் குறிப்பேட்டு பதிவுகள் (விளம்பல் அவசியமில்லை)

3) கடன்படுநர் கட்டுப்பாட்டு கணக்கு மீதியும் கடன்படுநர் பேரேட்டு பட்டியல் மொத்தத்தையும் இணங்க வைக்கும் கூற்று.

◆ ◆ ◆

## தமிழ் பகுதி-II , பகுதி-I தொடர்ச்சி..

1.11) சகாதேவன் கண்ணனின் அன்புக்குக் கட்டுண்டான். இங்கு கட்டுண்டான் என்பது.

1. செயப்பாட்டுவினை 2. தன்வினை 3. பிறவினை
4. ஏவல்வினை 5. துணைவினை

1.12) "பகிர்ந்து உண்" என்பது

1. தனிவினை 2. கூட்டுவினை 3. செயப்பாட்டுவினை
4. துணைவினை 5. செயப்படுபொருள் குன்றியவினை

1.13) பின்வருவனவற்றுள் உடம்படுமெய் தோன்றிப் புணர்ந்த சொல்

1. தோட்டை 2.தவ்வை 3.விழியை
4. கல்லை 5.கொல்லை

1.14) பின்வருவனவற்றுள் இருவேறு எழுவாய் தொக்கு நிற்கும் வாக்கியம்

1. ஆடி விதை தேடி விதை 2. உப்பிட்டவரை உள்ளளவும் நினை
3. இங்கிருந்து போகேன் 4. பயப்படாதே. தவறாமல் வருவேன்
5. பகலில் பக்கம் பார்த்துப் பேசு. இரவில் அதுவும் பேசாதே

1.15) பின்வருவனவற்றுள் கலப்புறு பொருளில் "உடன்" என்னும் சொல்லுருபு வரும் தொடர்

1. தந்தையுடன் மைந்தன் சென்றான் 2. தாயுடன் அறுசுவை போம்
3. விரக்தியுடன் வந்தான் 4. அன்புடன் வரவேற்றார்
5. பாலுடன் சேர்ந்த நீர்

1.16) பின்வருவனவற்றுள் கலப்பு வாக்கியம்

1. "மகளே நலமுடன் வாழ்க" என தந்தை மனதார வாழ்த்தினார்.
2. மகள் நலமுடன் வாழ தந்தை தனது வாழ்த்துக்களை வழங்கினார்,
3. மகள் தனது தந்தையின் வாழ்த்துக்களைப் பெற்றுக்கொண்டாள்.
4. தனது மகள் நலமுடன் வாழ. தந்தை தனது வாழ்த்துக்களை வழங்கினார்.
5. தான் நலமுடன் வாழ மகளே தந்தையிடம் வாழ்த்துக்களைப் பெற்றுக்கொண்டாள்.

1.17) சால்வையை எடுத்து அரையில் கட்டினான். இதில் அரையில் கட்டினான் என்பது எவ்வகை ஆகுபெயர்.

1. சினையாகுபெயர் 2. எண்ணலளவையாகு பெயர்
3. எடுத்தலளவையாகு பெயர் 4. முகத்தலளவையாகுபெயர்
5. நீட்டலளவையாகுபெயர்

1.18) "ஆசாடபூதி" என்ற மரபுத்தொடரின் கருத்தைத் தரும் வேறு இரு மரபுத்தொடர்கள்

(அ) உருத்திராட்சப் பூனை (ஆ) வெள்ளை வேட்டிக்காரன்
(இ) அரை மனிதன் (ஈ) அண்டப்புரட்டன்
(உ) அவசரக்குடுக்கை

1. அ. உ 2. ஆ. ஈ 3. அ. ஆ 4. ஈ. உ 5. இ. ஈ

1.19) இங்குள்ள பூஞ்செடிகளிலுள்ள பூக்களைப் பிடுங்குவதோ

1. கிளைகளை ஒடிப்பதோ தண்டனைக்குரிய குற்றம்
2. கிளைகளை ஒடிப்பதோ தண்டனைக்குரிய குற்றங்கள்
3. அல்லது கிளைகளை ஒடிப்பதோ தண்டனைக்குரிய குற்றம்
4. அத்துடன் கிளைகளை ஒடிப்பதோ தண்டனைக்குரிய குற்றங்கள்
5. அத்துடன் கிளைகளை ஒடிப்பதோ தண்டனைக்குரிய குற்றம்

1.20) பின்வருவனவற்றுள் பொருத்தமில்லாத இணைப்பு

1. தண்டனைகள் வழங்கப்படுகின்றன. இருந்தும் குற்றங்கள் குறைந்தபாடில்லை.
2. தண்டனைகள் வழங்கப்படுகின்றன. எனினும் குற்றங்கள் குறைந்தபாடில்லை.
3. தண்டனைகள் வழங்கப்படுகின்றன. ஆனாலும் குற்றங்கள் குறைந்தபாடில்லை.
4. தண்டனைகள் வழங்கப்படுகின்றன. என்றாலும் குற்றங்கள் குறைந்தபாடில்லை.
5. தண்டனைகள் வழங்கப்படுகின்றன. எனவே குற்றங்கள் குறைந்தபாடில்லை.

ஆ. பின்வரும் ஐந்து வினாக்களுக்கும் சுருக்கமான விடை தருக.

1. முதல் எழுத்துக்கள். முதனிலை எழுத்துக்கள் என்பவற்றுக்கிடையிலான வேறுபாட்டைத் தருக.
2. நான். நாம் என்னும் தன்மைப் பெயர்கள் "ஐ" உருபு ஏற்கும்போது பெறும் மாற்று வடிவங்களுக்கு உதாரணம் தருக.
3. ஒரு மொழி. தொடர்மொழி என்பவற்றை உதாரணத்துடன் விளக்குக.
4. வினையாலணையும் பெயர் என்றால் என்ன? உதாரணம் தந்து விளக்குக.
5. வினையடைத் தொடரை உதாரணம் தந்து விளக்குக.

மிகுதி 16 ஆம் பக்கத்தில்

# கோத்தபாய ராஜபக்ஷவின் குடியுரிமை இரத்தாகும்

## அமைச்சர் மங்கள எச்சரிக்கை



(கொழும்பு)

**முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் குடியுரிமை இரத்து செய்யப்படும் என வெளியுறவு அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.**

2006 ஆம் ஆண்டு மிக் விமானங்கள் நான்கு கொள்வனவு செய்யப்பட்ட சம்பவம் குறித்து சரியான முறையில் விசாரணை நடத்தி, உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டால், கோத்தபாய ராஜபக்ஷவின் குடியுரிமை இரத்துச் செய்யப்படலாம் என அமைச்சர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

அதற்கமைய தற்போது வரையில் மிக் விமான கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, மிக் தாக்குதல் விமான கொள்வனவு தொடர்பான கொடுக்கல் வாங்கல்கள் சம்பந்தப்பட்ட மூல ஆவணம் காணாமல் போயுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் இலங்கை விமானப்படையின் சட்டப் பணிப்பாளரின் விடயங்களை கேட்டு அறிந்த கொழும்பு கோட்டை நீதவான் லங்கா ஜயரத்ன, நாளை மறுதினம் 25 ஆம் திகதி இது சம்பந்தமாக விபரமான அறிக்கையை தாக்கல் செய்யுமாறு உத்தரவிட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-5-7)

# உள்ளூராட்சி மன்றத் தேர்தலை உடனடியாக நடத்துமாறு ஐ.தே.க. அமைச்சர்கள் கோரிக்கை

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை உடனடியாக நடத்துமாறு ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சர்கள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

விகிதாசார முறைமை அல்லது தொகுதிவாரி முறை ஆகிய ஏதாவது ஓர் முறையில் தேர்தலை நடத்துமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற வளாகத்தில் அமைந்துள்ள பிரதமர் காரியாலயத்தில் நேற்று முன்தினம் பிரதமரை சந்தித்த போது இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தேர்தல் நடத்தப்படும் முறைமை பற்றி ஐக்கிய தேசியக் கட்சிக்கு பிரச்சினை கிடையாது என தெரிவித்துள்ளனர்.

இந்த சந்தர்ப்பத்தில் உள்ளூராட்சி மன்றங்கள் மாநகரசபைகள் மற்றும் நகர சபைகளுக்கான தேர்தலை நடத்துவதனால் ஐக்கிய தேசியக் கட்சிக்கு சாதகமான நிலைமை ஏற்படும் என பாராளுமன்ற உறுப்பினர்களும் அமைச்சர்களும் தெரிவித்துள்ளனர். (இ-5-7)

# முன்னாள் ஜனாதிபதி மகிந்தவால் சமாதானத்தை நிலைநாட்ட முடியவில்லை




முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவால் சமாதானத்தை நிலைநாட்ட முடியவில்லை என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் அமைச்சர் துமிந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற வளாகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தேசிய அரசாங்கம் என்ற எண்ணக்கருவினை அரசியல்வாதிகளினாலேயே புரிந்து கொள்ள முடியவில்லை.

மகிந்த போரிலிருந்து நாட்டை மீட்ட போதிலும் சமாதானத்தை நிலைநாட்ட முடியவில்லை.

எமக்கு எதிராக குற்றச்சாட்டுக்கள் இருந்தால் அது குறித்து முறைப்பாடு செய்ய முடியும். அதனை எதிர்நோக்கத் தயார்.

மகிந்த ராஜபக்ஷ அன்று தீர்மானம் ஒன்றை எடுக்காமல் இருந்திருந்தால் இன்றும் அவரே நாட்டின் ஜனாதிபதியாக இருந்திருப்பார்.

இரண்டு ஆண்டுகள் ஆட்சியில் இருக்கக் கூடிய சந்தர்ப்பம் இருந்தும் அவர் முன்கூட்டியே தேர்தலை நடத்தியிருந்தார்.

யாரும் அவருக்கு அழுத்தம் பிரயோகிக்கவில்லை. நாட்டு மக்களுக்கு துன்பங்கள் ஏற்பட்டுள்ளதாக மகிந்த கருதினால் அதற்கும் அவரே பொறுப்பு சொல்ல வேண்டும்.

நல்லாட்சி அரசாங்கம் கட்சி பேதமின்றி செயற்பட்டு வருகின்றது. எதிர்வரும் தேர்தல்களின் போது பிரதான கட்சிகள் தனித்தனியாக போட்டியிடும்.

எனினும் அரசாங்கம் என்ற ரீதியில் ஒன்றாக இணைந்திருப்போம் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-5-7)

# சத்திரசிகிச்சை வைத்தியர்களுக்கு சுகாதார அமைச்சரால் நிபந்தனை!

(கொழும்பு)

தனியார் வைத்தியசாலையில், நோயாளி ஒருவருக்கு சத்திரசிகிச்சை மேற்கொண்டதன் பின்னர் உடனடியாக வைத்தியர்கள் வெளியேற முடியாது என சுகாதார அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

தனியார் வைத்தியசாலையில் நோயாளி ஒருவருக்கு சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டால், நோயாளிகள் அருகாமையில் வைத்தியர் குறைந்தபட்சம் ஒரு மணித்தியாலங்கள் இருக்க வேண்டும் என அவர் தெரிவித்தார்.

இது தொடர்பிலான உத்தரவு தனியார் வைத்தியசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

சத்திரசிகிச்சையின் போது நோயாளிகள் எதிர்நோக்கக்கூடிய ஏனைய பாதிப்புக்களை தவிர்க்கும் நோக்கில் இவ்வாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இந்த உத்தரவினை மீறிச் செயற்படும் வைத்தியசாலைகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என அவர் தெரிவித்தார்.

இதேவேளை, தனியார் வைத்திய Canalin சேவைகளை நடத்தும் வைத்தியர்கள் ஒரு நோயாளிக்கு குறைந்த பட்சம் 10 நிமிடங்கள் ஒதுக்க வேண்டும் என்ற உத்தரவு ஒன்றும் பிறப்பிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் ராஜித கொழும்பு ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார். (இ-5-7)

# இன்று ஒரு தகவல்

## ஆண்களை ஆளும் வழி

ஆள்வது என்றால் ஆட்டிப் படைப்பது அல்ல. கொஞ்சத்திற்கு கொஞ்சமேனும் கட்டுப்பாட்டில் வைத்திருப்பது.

நான்கு விடயங்களைச் சொன்னால் அவற்றுள் ஒன்றையேனும் கேட்டு வைக்கக் கூடிய திறமை பெண்களிடத்தில் இருக்க வேண்டும்.

இல்லாவிட்டால் அந்த ஆணின் கதி அச்சாணியற்ற தேர், கடிவாளம் இல்லாத குதிரை போன்று ஆகிவிடும்.

அத்தகைய ஒரு பெண்–

தாயாக இருக்கட்டும்; தாரமாக இருக்கட்டும்; சகோதரியாக இருக்கட்டும்; அண்ணியாகக் கூட இருக்கட்டும். யாராயிருந்தாலும் அவர்கள் மிகவும் சம்பந்தப்பட்ட ஆண்களை ஓரளவு கட்டுப்பாட்டில் வைத்திருக்க வேண்டும்.

பல பயங்கர குற்றவாளிகள்; மன நிலை சரியில்லாதவர்கள் ஆகியவர்களின் வாழ்க்கையை நான் அறிய நேர்ந்த போது ஓர் உண்மை புலப்பட்டது. அவர்கள் பெரும்பாலும் (சுமார் 60 சதவிகிதம்) அன்புக்காக ஏங்கியவர்களாகவே இருந்திருக்கிறார்கள். அதிலும் பெண்களின் அன்புக்காக, ஏங்கியவர்களாக இருந்திருக்கிறார்கள். அது கிடைக்காததால் அல்லது மறுக்கப்பட்டதால் தான் அவர்கள் கைதிகளாக – மன நோயாளிகளாக மாறியிருக்கிறார்கள்.

அதே நேரத்தில் அவர்கள காட்டிய மிதமிஞ்சிய அன்பு; அவர்களைக் குற்றவாளிகளாக –மன நோயாளிகளாக ஆக்கியிருக்கின்றன என்ற உண்மையையும் இங்கே சொல்லாமல் இருப்பதற்கில்லை.

பெண்களுக்கு இருக்கின்ற வரம்புகள் மிகக் குறைவு. அவர்கள் தங்களுக்கு வகுக்கப்பட்ட வரம்புகளுக்குள் செயற்பட்டும், சிறு சிறு செய்கைகளின் மூலமும் கூட ஆண்களின் பிரியத்தையும் நன் மதிப்பையும் அவர்கள் பெற்றுவிட முடியும்.

மனைவிக்கு மட்டும் ஒரு கூடுதல் வசதியுண்டு . அதை நான் சொல்லித் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதில்லை.

திடீர் என்று சில காரணங்களால் அவர்கள் மீது பிரியம் அதிகமாகிவிட்டது போல் காண்பித்துக் கொள்ளலாம். அதன் மூலம் அவர்கள் பதிலுக்குக் காட்டும் பிரியம் உங்களை வியக்கவைக்கும்.

உங்கள் பிரியம் தற்காலிகமானதாக – செயற்கையாகக் கூட இருக்கலாம். ஆனால், அதை உண்மையென நம்பி அவர்கள் காண்பிக்கும் பிரியத்தில் உங்கள் பிரியமும் உண்மையாவது உறுதி.

ஒவ்வொருவருக்கும் சூழ் நிலைகள் வெவ்வேறு. எனவே, இந்த வழியைப் பின்பற்றலாம் ; அந்த வழியைப் பின்பற்றலாம் என்று கூறுவது பொருந்தாமல் போகலாம். ஆனால் தலையாய விதிகள் இவை. அதாவது அவர்களை நம்பியே நீங்கள் வாழ்வதாகவும் அல்லது ஒரு படி மேலேபோய் உங்கள் உலகமே அவர்கள் தாம் என்பதாகவும், அவர்கள் நலனில் நீங்கள் மிகுந்த அக்கறை உள்ளவர்கள் என்பதாகவும் நீங்கள் காண்பித்துக் கொண்டால் அல்லது நடந்து கொண்டால் அவர்களை ஆள முடிவது என்பது உறுதி.

இறுதியாக ஒரு வரி. பெண்கள் நினைத்தால் முடியாததில்லை.

**லேனா தமிழ்வாணன்**

## தமிழ் பகுதி-II 14 ஆம் பக்க தொடர்ச்சி...

தமிழ் பகுதி-II 14 ஆம் பக்க தொடர்ச்சி...

02.

அ)

பின்வரும் உரைப்பகுதியின் சாராம்சத்தை 50 சொற்களில் சுருக்கி எழுதுக.

ஓலை போட்ட குடிசையிலே இருந்து மாடிவீடு வரை நாகரிகம் வளர்ந்திருக்கிறது. மொழியும் படிப்படியாக எத்தனையோ வளர்ச்சி பெற்று இன்றைய நாகரிமான நிலைக்கு வந்திருக்கிறது. குடிசை கட்டுவது அந்தப் பழங்காலத்தில் முதன் முதலில் ஒரு பெரிய வித்தையாக இருந்திருக்கும். இப்போதும், பத்து அடுக்கு உள்ள மாடிவீடு கட்டுவது பெரிய கலையாக இருக்கிறது. மொழியும் அப்படித்தான். மிகப் பழங்காலத்திலும் அது அருமையான கலையாக இருந்து வளர்ந்தது. இன்றைக்கும் மிக அருமையான கலையாக வளர்ந்து வருகிறது. ஆனால் ஒன்று, நாம் வீடு கட்ட வேண்டுமானல் நினைத்தபடி நம் விருப்பம்போல் கட்டிக் கொள்ளலாம். இன்னொருவரைப் பற்றிக் கவலைப்படாமல் நம் வீட்டை நாம் கட்டிக்கொள்ளலாம். வீடு, தனித்தனியாக அவரவர் விருப்பம்போல் அமையும் கலை. தனிப்பட்டவரின் கலை. ஆனால், மொழி அப்படிப்பட்டது அல்ல. மொழி தனிப்பட்டவரின் கலை அல்ல. எல்லோரும் சேர்ந்து ஒரு மனமாய் வளர்க்கும் கலையே மொழி. அதனால் அதைச் சமூகக்கலை என்று சொல்ல வேண்டும். நாய்க்கு நான்கு கால்கள் இருப்பதைப் பார்த்து நாற்காலி என்று நாம் பெயர் வைக்க முடியுமா? நாம் நாயை நாற்காலி என்றால் மற்றவர்கள் ஒத்துக் கொள்வார்களா? ஒருகாலும் ஒத்துக்கொள்ள மாட்டார்கள். ஆகவே எல்லோரும் ஒத்துக்கொண்டால்தான் ஒரு பெயர் நிற்கும். இப்படி ஒரு மொழியில் உள்ள ஒவ்வொரு சொல்லும் எல்லோரும் ஒத்துக்கொண்டால்தான் மொழியாக வாழ முடியும். இதனால் மொழி என்பது எவ்வளவு பெரிய சமூகக்கலை என்பது தெரிகிறது. இன்றைய அரசாங்கம் எல்லோருக்கும் உரிமையுள்ள குடியரசு என்றும் ஜனநாயகம் என்றும் சொல் கிறோம். குடியரசு முறைீயில் மிக மிகப் பழங்காலம் முதல் ஏற்பட்டு வரும் கலை மொழிதான்.

(ஆ) பன்வரும் உரைப்பகுதியை வாசித்து அதன் கீழ்த் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

உடலோம்பலுடன் அறிவோம்பலும் நிகழ்ந்துவரல் வேண்டும். இல்லையேல் வாழ்வில் அறிவியற் கூறுகள் இடர்பட நேரும். அறிவோம்பலுக்கு கல்வி வேண்டற்பாலது. அறியாமையை நீக்கி அறிவை விளக்குவது கல்வி எனப்படும். அக்கல்விப் பயிற்சிக்குரிய பருவம் இளமை என்பதை விளக்க வேண்டுவதில்லை. இதுபற்றியே "இளமையிற் கல்" என்னும் புதுமொழி பிறந்தது. இந் நாளில் பெரிதும் ஏட்டுக்கல்வியே கல்வி என்னும் ஒரு கொள்கை யாண்டும் நிலவி வருகின்றது. ஏட்டுக் கல்வி மட்டும் கல்வியாகாது. தொழிற்கல்வி முதலியனவும் கல்வியின் பாற்பட்டனவே. கல்வித் துறைகள் பல திறத்தன. அவைகளுள் ஒவ்வொன்று, ஒவ்வோர் இயல்புக்குப் பொருந்தியதாகத் தோன்றும். அப்பொருந்திய ஒன்றிற் சிறப்பு அறிவு பெறவும் பிறவற்றில் பொதுஅறிவு பெறவும் அவரவர் முயல்வது ஒழுங்காகும். இக்காலத்திற் கல்லூரியிற் படிப்போர் தொகை நாளுக்குநாள் பெருகுதல் கண்கூடு. கல்விப் பெருக்குப் போற்றுதற்குரியதே. ஆனால் பெரும்பான்மையோர் அக்கல்வியை எந்நோக்குடன் பயில்கிறார்? உத்தியோக நோக்குடன் என்று சொல்ல வேண்டுவதில்லை. அந்நோக்குடன் கல்வி பயின்றோர நிலை எவ்வாறு இருக்கிறது? அவர் தம் நிலை இரங்கத்தக்கதாயிருக்கின்றது. வேலையின் பொருட்டு இளங்கொழுந்துகள் படுந்துன்பம் அளவிடற்பாலதன்று. இவ்வேளையில் உத்தியோக நோக்குடன் கல்வி பயிலுதல் வேண்டாமென்றும் அறிவு விளக்கத்தின் பொருட்டுக் கல்வி பயிலுதல் வேண்டும் என்றும் இயற்கை அன்னை எச்சரிக்கை செய்தவண்ணமாயிருக்கிறாள். அவ்வெச்சரிக்கைக்கு மாணாக்கர் செவிசாய்த்து நடப்பார்களாக. செவிசாய்த்து அறிவு விளக்கத்துக்கெனக் கல்வி பயின்று அவ்வறிவை நாட்டுத் தொழிற்றுறைகளைப் புதிய முறையில் வளர்க்கப் பயன்படுத்துவார்களாக. உத்தியோகக் கல்வியே நம் நாட்டுக்குரிமையானது. மதிப்பிற்குரியது என்ற எண்ணம் அந்நியராட்சியின் விளைவால் வந்தது. தொழிற்றுறைக் கல்வியே நாட்டை வளப்படுத்துவதும் நம்மை வாழவைப்பதும் என்ற கொள்கையுடையோராக மாணாக்கர் வளராவிடின் கற்கும் கல்வியிற் பயனின்றென்றே கூற வேண்டும்.

(i) ஆசிரியர் இவ்வுரைப் பகுதி மூலம் விளக்க முனையும் கருத்து யாது?
(ii) அந்நியராட்சியின் விளைவால் வந்ததாக இங்கு கூறப்படுவது யாது?
(iii) இவ்வுரைநடைப் பகுதியில் இயற்கை அன்னையின் எச்சரிக்கையாக முன்வைக்கப் பட்டுள்ள இரு விடயங்களும் எவை?
(iv) கல்வி என்பதற்கு இங்கு குறிப்பிடப்படும் விளக்கம் யாது?
(v) கல்வி மூலம்எவற்றைப்பெற்றுக்கொள்ள முயல வேண்டும்எனக்கட்டுரையாசிரியர் விளக்குகின்றார்?

03. பின்வருவனவற்றுள் யாதேனும் ஒரு தலைப்பைத் தெரிந்து 300-350 சொற்கள் கொண்ட கட்டுரை எழுதுக.
(அ) பேராசிரியர் சு. வித்தியானந்தனின் தமிழ்ப் பணிகள்.
(ஆ) நாட்டார் பாடலும் மக்கள் வாழ்க்கையும்.
(இ) மனித வாழ்க்கையும் சூழலும்.
(ஈ) இலத்திரனியல் ஊடகங்களின் சமூகப் பொறுப்பு.
(உ) இளைஞர் சமுதாயம் எதிர்கொள்ளும் சவால்களும் தீர்வுகளும்.

இவ் வினாத்தாளுக்குரிய விடைகளை www.facebook.com/valampurii எனும் முகநூலிலும் www.valampurii.lk என்ற இணையத்தள முகவரியிலும் பார்வையிடலாம்.

பகுதி-II

பகுதி அ

04.
அ. சங்க இலக்கியங்களில் இயற்கை பெறும் முக்கியத்துவத்தினை விளக்குக.
ஆ. சங்கப் புறத்திணை இலக்கியங்களில் மன்னனுக்கு நல்லறிவூட்ட புலவர்கள் முயன்றவாற்றினை விளக்குக.
இ. சங்க இலக்கியங்களை அடிப்படையாகக் கொண்டு பிற்காலத்தில் வளர்ச்சியடைந்த இலக்கிய வடிவங்கள் பற்றிச் சுருக்கமாகக் குறிப்பிடுக?

05.
அ. சோழர்காலத்தில் எழுந்த பெருங்காப்பியம், சிறுகாப்பியம், புராணங்கள் என்பவற்றைக் குறிப்பிடுக.
ஆ. சோழர்காலத்தில் காப்பியங்கள் தோன்றியமைக்கான காரணிகளைத் தெளிவுபடுத்துக.
இ. சோழப் பெருமன்னர்கால இலக்கியப் பண்புகளுக்கும் விஜயநகர நாயக்க மன்னர்கால இலக்கியப் பண்புகளுக்குமிடையே காணப்படும் வேறுபாடுகளை விளக்குக.

6.
(அ) இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கியம் புதுவழியில் சென்றமைக்கான காரணங்கள் எவை?
(ஆ) இருபதாம் நூற்றாண்டுக் கவிதைகளின் பிரதான பண்புகளை விளக்குக.
(இ) தமிழ்க்கவிதையின் உள்ளடக்கத்திலும் வடிவத்திலும் பாரதியார் கொண்டுவந்த மாற்றங்களைக் குறிப்பிடுக.

பகுதி ஆ

.07.
(அ) ஆரியச்சக்கரவர்த்திகள் காலத்தில் தோற்றம் பெற்ற இலக்கியங்களைப் பொருள் மரபு அடிப்படையில் வகுத்துக் காட்டுக.
(ஆ) போர்த்துக்கேயர் ஆட்சிக்காலத்தில் தமிழ் இலக்கிய வளர்ச்சியில் ஏற்பட்ட தேக்க நிலைக்கான காரணங்களைத் தெளிவுபடுத்துக.
(இ) ஒல்லாந்தர் காலத்தில் உள்ளூர்ப் பிரபுத்துவத்தைப் பாடுகின்ற இலக்கியங்கள் தோன்றியமைக்கான காரணிகளை விளக்குக.

08.
(அ) இலங்கையில் தமிழ்ச் சிறுகதையின் தோற்றத்திற்குச் சாதகமாக அமைந்த காரணிகளை விளக்குக.
(ஆ) இலங்கையில் ஆரம்பகால சிறுகதைகளின் பண்புகளைத் தருக.
(இ) இலங்கைத்தமிழ்ச்சிறுகதை வளர்ச்சியில் இலங்கையர்கோன்பெறும்முக்கியத்துவத்தைப் பரிசீலிக்குக.

◆ ◆ ◆

# தமிழ் சினிமா வரலாறு

## கமல்ஹாசனுடன் இணைந்து நடித்த 'தேவர் மகன்' 214

**தந்தை-மகன்**

கிராமிய பின்னணியில் உருவாக்கப்பட்ட கதை. இதில் சிவாஜிகணேசன் தந்தையாகவும் கமல் ஹாசன் மகனாகவும் நடித்தனர். மற்றும் ரேவதி, கெளதமி, நாசர் ஆகியோர் நடித்தனர்.

பாடல்களை வாலி எழுத, இளையராஜா இசை அமைத் தார்.இது 25 வாரங்கள் ஓடி வெள்ளி விழா கொண்டாடியது.

**தாவணிக் கனவுகள்**

14-09-1984இல் வெளி யான தாவணிக்கனவுகள் படத்தில் சிவாஜியும் பாக்கி யராஜும் இணைந்து நடித் தனர். பாக்கியராஜின் சொந் தப்படம். கதாநாயகி ராதிகா.

கதை, வசனம், டைர க்ஷன் பொறுப்புக்களை பாக்கியராஜ் கவனித்தார். இசை இளையராஜா.நூறு நாட்கள் ஓடிய வெற்றிப் படம் இது.

**படங்கள்**

சிவாஜிகணேசன் 1986இல் நடித்த படங்கள்: சாதனை , மருமகள், ஆனந்தக்கண்ணீர், விடுதலை, தாய்க்கு ஒரு தாலாட்டு, லட்சுமி வந்தாச்சு, மண்ணுக்குள் வைரம்.

1987- ராஜமரியாதை, குடும்பம் ஒரு கோயில், முத்துக்கள் மூன்று, வீர பாண்டியன், அன்புள்ள அப்பா, ஜல்லிக்கட்டு, கிருஸ்ணன் வந்தான், தாம்பத்தியம்.

1988- என் தமிழ் என் மக்கள், புதிய வானம்.

1991- ஞானப்பறவை

1992- நாங்கள், சின்ன மருமகள், முதல் குரல், தேவர் மகன்.

1993- பாரம்பரியம்.

1995- பசும்பொன்.

**சினிமா டைரக்டர்**

சாதனை படத்தில் சினிமா டைரக்டராக சிவாஜி நடித்தார். அவருடன் பிரபு,கே.ஆர்.விஜயா, நளினி ஆகியோர் நடித்தனர். ஏ.எஸ். பிரகாசம் டைரக்ட் செய்தார்.

ஏராளமான படங்களில் நடித்திருந்த போதிலும் சிவாஜி எந்தப் படத்தையும் டைரக்ட் செய்யவில்லை. டைரக்டர் வேடத்தில் ஒரு படத்தில் நடித்ததோடு சரி.


இது பற்றி அவர் கூறியிருப்பதாவது,

ஒரு இயக்குநருக்கு எவ்வளவு பெரிய பொறுப்பும் கடமையும் உள்ளது என்பது எனக்கு நன்றாகத் தெரியும். அதனால்தான் நான் படம் இயக்கவில்லை.

நான் ஒரு படத்தை இயக்கினேன் என்றால் அதில் நடிக்கும் எல்லா நடிகர்களுடைய முகத்திலும் என்னுடைய சாயல் இருக்கிறதா என்றுதான் பார்ப்பேன். என்னை மாதிரி நடிக்கிறார்களா என்று எதிர்பார்ப்பேன். இல்லை என்றால் விடமாட்டேன். அவர்களாகவும் நடிக்க அனுமதிக்க மாட்டேன். என்னை மாதிரி நடிக்கின்ற வரைக்கும் பயிற்சி கொடுத்துக் கொண்டே இருப்பேன்.தொடர்ந்து "டேக்" எடுத்துக்கொண்டே இருப்பேன்.

இதனால் என்ன ஆகும்? என்னுடன் நடிக்கும் எல்லோருமே சிவாஜிகணேசன் போல் தான் நடிப்பார்கள்.

ஒரே காட்சியில் எட்டு சிவாஜிகணேசன்கள் இருந்தால், அந்தக் காட்சி நன்றாய் இருக்குமா? ஒரு படம் முழுவதும் எல்லோரும் சிவாஜி



கணேசனாக இருந்தால் ஜனங்கள் ரசிப்பார்களா? ஆகையால் தான் அந்த தவறான காரியத்தை நாம் செய்யக்கூடாது என்று நான் படங்கள் எதையும் இயக்க விரும்புவதில்லை. இது எனக்கு பிடிக்காத வேலை. எனக்கு தெரியாத வேலையில் நான் எப்பொழுதும் தலையிடுவதில்லை.

அப்படியிருந்தும் ஒரு படத்தில் என்னைத் திரைப்பட டைரக்டர் வேடத்தில் நடிக்க வைத்துவிட்டார்கள். அந்தப் படம் தான் சாதனை.

ஒரு திறமையான இயக்குநர் ஒரே சமயத்தில் ஒரு படம்தான் இயக்க விரும்புவார். அப்போது தான் எல்லாப் பொறுப்புக்களையும் சரிவரச் செய்ய முடியும். நடிகனாக இருந்தால் ஒரே சமயத்தில் மூன்று அல்லது நான்கு படங்கள் நடிக்கலாமே. இதையெல்லாம் எண்ணித்தான் நான் இயக்குநராகவில்லை.

இவ்வாறு சிவாஜி கணேசன் குறிப்பிட்டுள்ளார்.

உலகக் கலைஞர்களுக்கு பிரான்ஸ் அரசாங்கம் வழங்கும் மிக உயரிய விருதான "செவாலியே" விருது சிவாஜிகணேசனுக்கு வழங்கப்பட்டது.

**மாவீரன்**

பிரான்ஸ் நாட்டு அரசு கலை, இலக்கியம் ஆகிய துறைகளில் மிகச்சிறந்தவர்களை தேர்ந்தெடுத்து செவாலியே என்ற பட்டத்தை ஆண்டுதோறும் வழங்கிவருகிறது.செவாலியே என்றால் பிரஞ்சு மொழியில் மாவீரன் என்று பொருள். பொதுவாக இந்த விருதை ஆலிவுட் நடிகர்களே பெற்று வந்தார்கள்.

இந்த செவாலியே விருதுக்கு சிவாஜிகணேசனை பிரான்ஸ் அரசு தேர்வு செய்து 1994ஆம் ஆண்டு ஒகஸ்ட் 4ஆம் திகதி அறிவித்தது. இந்த விருதைப் பெற்ற முதல் இந்திய நடிகர் சிவாஜிகணேசன் தான் என்ற பெருமை தமிழ் திரை உலகுக்கு கிடைத்தது.

**சென்னையில் பிரமாண்ட விழா**

சிவாஜிகணேசனுக்கு செவாலியே விருது வழங்கும் விழா சென்னை சேப்பாக்கம் எம்.ஏ. சிதம்பரம் மைதானத்தில் 24.04.1995 அன்று மாலை நடைபெற்றது. விழாவுக்கு முதலமைச்சர் ஜெயலலிதா தலைமை தாங்கினார்.

விசேஷமாக சிவாஜிகணேசன் உருவம் தங்க ஜரிகையில் நெய்யப்பட்ட பொன்னாடையை நடிகர்கள் ரஜனிகாந்தும் கமல்ஹாசனும் சிவாஜிகணேசனுக்கு போர்த்தினர்.பிறகு இருவரும் அவரது காலைத் தொட்டு வணங்கினர்.

(தொடரும்...)

# 2030 இல் அடைய வேண்டிய இலக்கை கொண்ட வரவு-செலவுத்திட்டம் நவம்பர் மாதம் சமர்ப்பிப்பு

(கொழும்பு)

**2030ஆம் ஆண்டில் இலங்கை அடைய வேண்டிய முக்கிய 17 இலக்குகளைக் கொண்ட வரவு - செலவுத் திட்டத்தை எதிர்வரும் நவம்பர் மாதம் சமர்ப்பிக்க அரசு தீர்மானித்துள்ளது.**

2017ஆம் ஆண்டில் நாட்டின் பொருளாதார வீதத்தை 6 வீதத்தால் அதிகரிக்கும் வகையில் ஐக்கிய நாடுகள் சபையின் இலக்குகளை உளளடக்கிய வரவு - செலவுத் திட்டமாகவும் இது அமையவுள்ளது.

பத்து இலட்சம் வேலை வாய்ப்புக்களை உருவாக்குதல், வருமானத்தை அதிகரித்தல், கிராமிய பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்தல், காணி உரிமைகளை உறுதிப்படுத்திக் கொளளுதல் போன்ற இலக்குகளும் இந்த வரவு செலவுத் திட்டத்தின் மூலம் அடைந்து கொள்ள அரசு திட்டமிட்டுள்ளது.

இதற்காக ஐக்கிய நாடுகள் சபையால் வெளியிடப்பட்டுள்ள 2030 ஆம் ஆண்டுக்குள் அடைந்து கொள்ள வேண்டிய நிலையான அபிவிருத்திக்கான 17 இலக்குகள் உள்ளடங்கலான அரச செலவீனங்களின் செயற்றிறனை அடிப்படையாகக் கொண்ட செயற்றிறன் மிகு கலாசாரம் எனும் தொனியின் கீழே இந்த வரவு செலவுத் திட்டம் அமையவுள்ளது.

இதன்மூலம் 2020ஆம் ஆண்டளவில் 3.5 வீதமான மட்டத்தில் மொத்த தேசிய உற்பத்தியையும் அரச கடன் தொகையினை 68 வீதமாகவும் கொண்டுவருவதே அரசின் இலக்காகும்.

அத்தோடு, மேற்படி இலக்கை அடைந்து கொள்ளும் நோக்கில் 2017ஆம் ஆண்டின் பொருளாதார விருத்தி வேகத்தை 6 வீதத்தால் அதிகரிப்பது மொத்த தேசிய உற்பத்தியின் 5 வீதத்தை அரச முதலீடுகள் மூலம் உறுதி செய்தல் போன்ற முன்மொழிவுகளும் 2017 வரவு செலவுத் திட்டத்தில் காணப்படும் என நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்கவால் அமைச்சரவையில் கொண்டு வரப்பட்டுள்ள பத்திரத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (இ-5-7)

# மகிந்தவுக்கு அஞ்சாத அரசு



(கொழும்பு)

குற்றவாளிகளின் பட்டியலில் மகிந்தவின் பெயரும் வந்து விடுமோ என்ற அச்சத்தின் காரணமாகவே காணாமற்போனோர் பணியகத்தை அமைக்க மகிந்த ராஜபக்ஷ எதிர்ப்புத் தெரிவிக்கிறார்.

அத்துடன், மகிந்த ராஜபக்ஷவுக்கு அஞ்சி காணாமற்போனோர் பணியகத்தை அமைக்காது விடமாட்டோம் என அரசாங்கம் திட்டவட்டமாக அறிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

இதில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ வெளியிட்டிருந்த அறிக்கை தொடர்பில் ஊடகவியலாளர்கள் கேள்வியெழுப்பியிருந்தனர்.

இதற்கு பதிலளித்த அமைச்சரவை இணைப் பேச்சாளரும் சுகாதார அமைச்சருமான ராஜித சேனாரத்ன இவ்வாறு தெரிவித்தார்.

காணாமற்போனோர் பணியகம் அமைக்கப்படும் என்பதில் எவ்வித மாற்றுக் கருத்துக்கும் இடமில்லை.

காணாமறபோனோர் தொடர்பான விசாரணைகள் மற்றும் அவர்களுக்கான மரணச் சான்றிதழை வழங்குவதற்காகவே இதனை நாம ஸ்தாபிக்கவுள்ளோம்.

இந்நிலையில், மகிந்த ராஜபக்ஷ கூறுவதைப் பார்த்து நாம் அஞ்சப்போவதுமில்லை. இதுகுறித்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டவுடன் தனது பெயரும் குற்றவாளிகள் பட்டியலில் வந்துவிடுமோ என்ற அச்சத்திலேயே அவர் எதிர்ப்பைத் தெரிவிக்கிறார்.

அத்தோடு, நாம் இதுவரை யாரையும் குற்றம் சுமத்தாத நிலையில், முப்படையினரைக் காட்டிக் கொடுக்கும் செயற்பாட்டையே அரசு மேற்கொள்கின்றது என்றும் அவர் குற்றஞ்சாட்டியுள்ளார்.

அப்படியானால், நாட்டில் இடம்பெற்ற காணாமற்போனோர் விடயத்தில் முப்படையினருக்கும் தொடர்பு உள்ளது என்றே அவர் மறைமுகமாக சுட்டிக்காட்டியுள்ளார்.


இதேவேளை, இப் பணியகத்தின் அதிகாரங்கள் எவ்வாறு அமையும், சட்ட திட்டங்கள் எதுவரை வரையறுக்கப்பட்டிருக்கும் போன்ற விடயங்களையும் அரசு இனனும் தீர்மானிக்கவில்லை என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-5-7)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 787

Search for people, places and things Nagendram Home

**சிந்து**

வாய்க்குள் போகும் உணவுப் பொருளில் அறுசுவையை எதிர்பார்க்கும் நம் நாக்கு...அதே வாய்வழியாக வெளியே போகும் வார்த்தைகளையும் சுவையாகப் பேசினால் பல சங்கடங்கள் தவிர்க்கப்படும்.




**ரஜீவன்**

ஒரு பெண்ணின் திருமணத்தில் அவளுடைய முன்னாள் காதலன் கலந்து கொண்டான்... அவனை பார்த்து பெண்ணின் அப்பா கேட்டார். நீ யார் என்று? அவன் பதில் சொன்னான். நான் செமி பைனலில் வெளியேறிவிட்டேன். பைனல் பார்க்க வந்துள்ளேன்... என்று.

**கொடிகாமம்**

ஒருத்தன் கபாலியை தியேட்டரில பார்க்கனும் என்றான்... ஒருத்தன் நெட்ல பார்ப்போம் என்றான்.



நான் எல்லாம் எந்திரன் படத்தை போன மாதம் தான் டிவியிலயே பார்த்தேன்.

**ரகுதரன்**

நண்பன்1:-மச்சி இதுக்கு மேல நாம O/L பாஸ் ஆவோம் என்று நம்பிக்கை இல்லடா.. நாம இரண்டுபேரும் தற்கொலை பண்ணிக்கலாமா...?
நண்பன்2: அறிவு இருக்காடா உனக்கு..? கிறுக்கு தனமா முடிவு பண்ற... செத்துட்டா திரும்ப மறுபடி ஆரம்பத்திலிருந்து படிக்க சொல்லுவாங்க அதுக்கு இது எவ்வளவோ பரவாயில்ல மச்சி...



**சந்துரு**

வியர்வை வரும் வரை விளையாடுவது அந்த காலம்...
சார்ஜ் தீரும் வரை விளையாடுவது இந்த காலம்....!!



நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# ஜே.வி.பியின் குற்றச்சாட்டுக்கு உயர் கல்வி அமைச்சர் மறுப்பு



உயர்கல்வி அமைச்சர் லக்ஸமன் கிரியெல்லவின் ஊடக செயலாளரின் குடும்ப அங்கத்தவர்களுக்கு அவரது அமைச்சில் 3 முக்கிய பதவிகள் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளதாக மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் நளிந்த ஜயதிஸ்ஸவின் குற்றச்சாட்டை உயர் கல்வி அனிமச்சர் மறுத்துள்ளார்.

இந்த குற்றசாட்டு நளிந்த ஜயதிஸ்ஸவினால் நேற்று முன்தினம் பாராளுமன்றில் முன்வைக்கப்பட்டது.

அத்துடன் குறித்த பதவிகள் வழங்கப்பட்டுள்ளமைக்கான சுற்று நிரூபத்தையும் நளிந்த ஜயதிஸ்ஸ பாராளுமன்றில் காண்பித்து அதனை உறுதிப் படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மேலும் குறித்த ஊடக செயலாளரின் வேதனப்பணத்துக்கு அப்பால் குறித்த மூவருக்கும் 65,000 படி 195,000 பணமானது அமைச்சரால் வழங்கப்பட்டுள்ளதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் சுட்டிக் காட்டியுள்ளார்.

எனினும் குறித்த குற்றச்சாட்டுக்கள் பொய் என்றும், தன்னால் அவ்வாறான பதவிகள் யாருக்கும் பெற்றுக்கொடுக்கப்படவில்லை என அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-10)

## நாணயமாற்று விகிதம்

மத்திய வங்கி வெளியிட்ட அறிக்கை-23.07.2016

| நாடு | நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|---|
| அமெரிக்கா | டொலர் | 144.23 | 147.87 |
| பிரிட்டன் | பவுண்ட் | 190.14 | 196.58 |
| ஐரோப்பிய ஒன்றியம் | ஈரோ | 158.02 | 164.05 |
| சுவிட்சர்லாந்து | பிராங் | 145.38 | 151.23 |
| கனடா | டொலர் | 109.39 | 113.75 |
| அவுஸ்திரேலியா | டொலர் | 106.85 | 111.67 |
| சிங்கப்பூர் | டொலர் | 105.97 | 109.88 |
| இந்தியா | ரூபா | 2.17 | ------- |
| சீனா | யுவான் | 21.8530 | -------- |

மத்திய கிழக்கு நாடு

| நாடு | நாணயம் | பெறுமதி |
|---|---|---|
| பகரெயின் | டினார் | 386.1950 |
| குவைத் | டினார் | 482.0572 |
| ஓமான் | ரியால் | 378.5665 |
| கட்டார் | ரியால் | 40.0247 |
| சவுதி அரேபியா | ரியால் | 38.8641 |
| ஐக்கிய அரபு எமிரேட்ஸ் | டிராம் | 39.6820 |

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 100 | 90 | 110 | 120 | 100 | 120 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 80 | 105 | 100 | 100 | 100 |
| பச்சைமிளகாய் | 600 | 800 | 500 | 600 | 550 | 500 | 600 |
| தக்காளி | 160 | 200 | 120 | 140 | 160 | 140 | 180 |
| மரவள்ளிக்கிழங்கு | 80 | 100 | 80 | 120 | 100 | 80 | 100 |
| கோவா | 160 | 200 | 120 | 160 | 160 | 160 | 150 |
| கரட் | 180 | 300 | 150 | 200 | 200 | 200 | 250 |
| பூசணி | 100 | 150 | 80 | 120 | 120 | 120 | 150 |
| புடோல் | 80 | 100 | 80 | 160 | 80 | 80 | 80 |
| வாழைக்காய் | 80 | 140 | 100 | 100 | 120 | 80 | 100 |
| சின்ன வெங்காயம் | 120 | 150 | 90 | 100 | 120 | 120 | 120 |
| பெரிய வெங்காயம் | 100 | 100 | 70 | 90 | 80 | 100 | 90 |
| பாகற்காய் | 200 | 400 | 150 | 250 | 180 | 200 | 200 |
| வெண்டிக்காய் | 80 | 120 | 50 | 60 | 80 | 100 | 100 |
| கருணைக் கிழங்கு | 160 | 200 | — | 150 | 110 | 160 | 150 |
| பயற்றங்காய் | 140 | 140 | 80 | 120 | 120 | 100 | 120 |
| லீக்ஸ் | 120 | 200 | 120 | 120-150 | 160 | 140 | 120 |
| பீற்றூட் | 140 | 200 | 120 | 140 | 120 | 160 | 150 |
| கறிமிளகாய் | 400 | 600 | 320 | 300 | 200 | 400 | 250 |
| முருங்கைக்காய் | 300 | 300 | 350 | 450 | 400 | 400 | 500 |
| போஞ்சி | 180 | 200 | 130 | 150 | 170 | 200 | 200 |
| கத்தரிதம்புள்ள | 100 | 100 | 100 | 100 | 120 | 100 | 100 |
| கீரை - 1பிடி | 30 | 30 | 20 | 30 | 30 | 30 | 25 |
| தேசிக்காய் | 120 | 200 | 100 | 100 | 140 | 160 | 100 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 50 | 15-25 | 40 | 25 | 20-30 | 40 |
| இராசவள்ளி | 180 | — | 150 | — | 160 | — | 160 |
| [illegible]ப்பூ | 170 | 200 | 130 | 140 | 160 | 200 | 150 |
| முள்ளங்கி | 40 | 200 | 50 | 50 | 80' | 80 | 50 |
| பொன்னாங்காணி | 30 | 50 | 10 | 30 | 40 | 40 | 25 |
| வல்லாரை | 10 | 20 | 10 | 10 | 20 | 20 | 15 |
| ஈரப்பலா | 80 | 120 | 30 | 50 | 60 | 60 | 60 |

# இலங்கைத் தமிழர் வரலாறு

## மன்னார் பகுதியை இராணுவம் கைப்பற்றியது 234

### புலிகளின் தலைமையகம்

நாட்டில் வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டில் இருக்கும் இடங்களை நோக்கி இராணுவம் முன்னேறியது. இந்தச் சூழ்நிலையை மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள விடுதலைப்புலிகளின் தலைமையகங்களின் ஒன்றான தொப்பிகல என்ற இடத்தை இராணுவம் 11-07-2007 அன்று பிற்பகல் கைப்பற்றியது.

இது குறித்து இராணுவ அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில் இராணுவத்தின் தளபதிகளும் வீரர்களும் தொப்பிக்கலவை கைப்பற்றினர். அடர்ந்த காட்டுப் பகுதியான இங்கு விடுதலைப்புலிகளின் கிழக்குப் பிரிவு தலைமையகம் செயற்பட்டு வந்தது. இந்தப் பகுதியில் இதுதான் அவர்களின் கடைசி முகாம் ஆகும். அருகில் உள்ள நரகமுல, தரவிகுலம பகுதிகளையும் இராணுவம் கைப்பற்றியது என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தப் பகுதிகளை கைப்பற்றியதற்காக இராணுவத்திற்கு அப்போதைய ஜனாதிபதி மகிந்தராஜபக்ஷ பாராட்டு தெரிவித்தார்.

### விடுதலைப்புலிகள் ஒப்புதல்

இந்நிலையில் தொப்பிகலவை இழந்ததை விடுதலைப்புலிகள் ஒப்புக்கொண்டனர். இது தொடர்பாக விடுதலைப்புலிகளின் செய்தித் தொடர்பாளர் ராசையா இளந்திரையன் பி.பி.சிக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது,

கிழக்கு மாகாணத்தில் உள்ள தொப்பிகலாவை இராணுவம் கைப்பற்றி விட்டது. ஆனால் இதன் மூலம் கிழக்குப் பகுதியில் சண்டை முடிந்து விட்டதாக அரசு கூறுகின்றது. அது உண்மை அல்ல. ஒரு பகுதியைக் கைப்பற்றுவது ஒரு வகை. கைப்பற்றிய பகுதியை தாக்குதல் வன்முறை எதுவும் இல்லாமல் தக்கவைத்துக் கொள்வது மற்றொரு வகை. இராணுவம் சில பகுதிகளைக் கைப்பற்றினால் வேறு சில பகுதிகளை= இழப்பது வாடிக்கை. எனவே பொறுத்திருந்து பார்ப்போம்.

### கொரில்லாப் போர்

நாங்கள் கொரில்லா போரில் 24 ஆண்டுகள் அனுபவம் வாய்ந்தவர்கள். சில வாரங்களுக்கு முன்பு தொப்பிகல பகுதியில் இராணுவம் முன்னேறி வந்த போது நாங்கள் கொரில்லா போருக்கு மாறி விட்டோம். இனிமேல் இராணுவம் மீது கொரில்லா தாக்குதல் நடத்துவோம். அதே சமயத்தில் மரபுசார்ந்த போரிலும் ஈடுபடுவோம். சூழ்நிலையை பொறுத்து அது அமையும்.

இவ்வாறு இராசையா இளந்திரையன் கூறினார். ஆனால் கிழக்கு மாகாணத்தில் விடுதலைப்புலிகள் ஆங்காங்கே தாக்குதல் நடத்தினால் அதற்கு பதிலடி கொடுக்க இராணுவம் தயாராக இருப்பதாக இராணுவ விவகாரங்களுக்கான செய்தித் தொடர்பாளர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

### மன்னார் மாவட்டம்

இந்த நிலையில் வடமேற்கு பகுதியில் உள்ள மன்னார் மாவட்டத்தில் உள்ள இடங்களில் இரண்டு நாட்களாக இராணுவம் தாக்குதல் நடத்தியது.01-09-2007 அன்று நடந்த சண்டையில் விடுதலைப்புலிகள் 11 பேர் கொல்லப்பட்டன்ர்.

இதைத்தொடர்ந்து மன்னார் மாவட்டத்தின் தெற்கு பகுதியான சிலாவத்துறை என்ற இடத்தை இராணுவம் 02-09-2007 அன்று கைப்பற்றியது. இந்தத் தகவலை அப்போதைய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார். இதுகுறித்து இராணுவ அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில் கைப்பற்றிய இடங்களை தொடர்ந்து தக்கவைத்து கொள்வதற்கான ஒருமித்த நடவடிக்கையில் இராணுவம் தற்போது ஈடுபட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டது.

இந்த தகவலை விடுதலைப்புலிகள் மறைமுகமாக ஒப்புக் கொண்டனர்.அவர்கள் கூற்றுப்படி விடுதலைப்புலிகள் கட்டுப்பாட்டில் இருந்து இராணுவம் வசமுள்ள பகுதிக்கு 6 ஆயிரம் மக்கள் சென்றது தெரிய வந்துள்ளது.



### மறைவிடம்

இரணைமடு என்ற இடத்தில் விடுதலைப்புலிகளின் முக்கியமான மூத்த தலைவர் ஒருவரின் இரகசிய மறைவிடம் உள்ளது. இங்கு விடுதலைப்புலிகளின் தலைவர்கள் அடிக்கடி சந்தித்து தங்களது போர் வியூகங்கள் குறித்து ஆலோசனை நடத்த முடிவு எடுத்து வந்தனர்.

இந்த இடத்தை கண்காணித்து வந்த இராணுவத்தின் உளவுப்பிரிவினர் அவ்வப்போது அங்கு நடக்கும் சம்பவங்கள் குறித்து இராணுவத்துக்கு இரகசியமாக தகவல்கள் கொடுத்து வந்தனர். விமானப்படையும் நீண்டகாலமாக வானில் வட்ட மடித்து பறந்தபடி அந்த இடத்தை கண்காணித்து வந்தது.

### திடீர் தாக்குதல்

02-10-2007 அன்று விமானப்படை விமானங்கள் திடீரென்று அந்த இடத்தின் மீது சரமாரியாக குண்டுகள் வீசி தாக்கின. இதில் இந்த இடம் முற்றிலும் அழிந்து தரமட்டமானது.

விமானங்கள் தாக்குதல் நடத்திய போது விடுதலைப் புலிகளின் தலைவர்கள் யாரும் அங்கு இருந்தார்களா? என்று உடனடியாக தெரியவில்லை. மேலும் இந்த தாக்குதல் குறித்து விடுதலைப்புலிகள் தரப்பில் இருந்து எந்தத் தகவலும் வெளியிடப்படவில்லை.

### மறுப்பு

கடந்த 2005ஆம் ஆண்டு நடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது ஜனாதிபதி பதவிக்கு போட்டியிட்ட மகிந்த ராஜபக்ஷ வெற்றி பெற மறைமுகமாக உதவி செய்ததாகவும் அதற்காக தேர்தலுக்கு முன்பதாகவும் தேர்தல் முடிந்த பின்னரும் கணிசமான தொகையை இலஞ்சமாக பெற்றதாகவும் குற்றச்சாட்டு இருந்து வந்தது. தங்கள் மீதான ஊழல் குற்றச்சாட்டை விடுதலைப்புலிகள் மறுத்துள்ளனர்.

### தமிழ்ச் செல்வன் பேட்டி


இது குறித்து விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவுத் தலைவர் எஸ்.பி. தமிழ்ச் செல்வன் அளித்த பேட்டியில் கூறியதாவது,

கடந்த 2 ஆண்டுகளாக எங்கள் மீது கூறப்பட்டு வரும் இந்த ஊழல் குற்றச்சாட்டில் சிறிதளவும் உண்மை இல்லை. சில அரசியல் கட்சிகள் கூறுவது போல எங்களுக்கும் மகிந்த ராஜபக்ஷவுக்கும் இடையே எந்த இரகசிய உடன்பாடும் கிடையாது. தேர்தலுக்கு முன்னரோ தேர்தலுக்கு பின்னரோ மகிந்த ராஜபக்ஷவிடம் நாங்கள் பணம் பெறவில்லை.

(தொடரும்)

# கனவு ஒருபோதும் பலிக்காது! ஆட்சி ஐந்தாண்டுகள் தொடரும்

## பிரதமர் ரணில் தெரிவிப்பு



தேசிய அரசாங்கம் அடுத்த வரவு - செலவுத் திட்டத்துடன் கவிழ்ந்துவிடும் என சிலர் கனவு காண்கின்றனர். இக்கனவு ஒரு போதும் பலிக்காது. இந்த அரசாங்கத்தின் ஆட்சி ஐந்து வருடங்கள் தொடரும் என பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இந்தியா, சீனா, சிங்கப்பூர், ஜப்பான் ஆகிய நாடுகளுடனும் ஐரோப்பிய ஒன்றியத்துடனும் எதிர்காலத்தில் இருதரப்பு வர்த்தக உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்படவுள்ளதாகவும் பிரதமர் அறிவித்தார்.

சிங்கப்பூருக்கான உத்தியோகபூர்வ விஜயம் தொடர்பில் நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் தெளிவுபடுத்தி விசேட உரை நிகழ்த்திய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு தெரிவித்தார்.

பிரதமர் சபையில் தொடர்ந்து உரையாற்றுகையில், கடந்த 17, 18 ஆம் திகதிகளில் சிங்கப்பூர் பிரதமரின் உத்தியோகபூர்வ அழைப்பிற்கேற்ப அங்கு விஜயத்தை மேற்கொண்டேன். எனது விஜயத்தில் அமைச்சர்களான மங்கள சமரவீர, மலிக் சமரவிக்ரம, பிரதியமைச்சர் மிஹ்ரபால ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இதன்போது தெற்காசிய புலம்பெயர் நாட்டின் ஆரம்ப கூட்டத்தில் பிரதான சொற்பொழிவை நான் நிகழ்த்தினேன்.இலங்கையில் பொருளாதார அபிவிருத்திக்காக புதிய அரசு முன்னெடுக்கும் திட்டங்கள் தொடர்பில் தெளிவுபடுத்தினேன்.

அத்தோடு இலங்கையை பண்டமாற்று, வர்த்தக மற்றும் நிதி மத்திய நிலையமாக மாற்றுவதற்காக அரசு முன்னெடுக்கும் திட்டங்கள் குறித்தும் கடல், வான், நெடுஞ்சாலைகள், எரிசக்தி மற்றும் தகவல் தொழில்நுட்பத்திற்கு தேவையான வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கான எமது பௌதீக அடிப்படை வசதிகளை மேம்படுத்துதல்கள் தொடர்பிலும் தெளிவுபடுத்தல்கள் வழங்கப்பட்டன.

அத்தோடு எம்மால் ஆரம்பிக்கப்பட்ட புதிய அபிவிருத்தி வேலைத்திட்டம் போன்று பத்து இலட்சம் தொழில் வாய்ப்புத் திட்டம் மற்றும் பலமுள்ள மத்திய தர வர்க்கத்தினரை உருவாக்கும் திட்டங்கள் தொடர்பிலும் சிங்கப்பூரில் தெளிவுபடுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டன.

அது மட்டுமல்லாது கண்டி- கொழும்பு- அம்பாந்தோட்டை பொருளாதார வலயங்களை அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டங்கள் தொடர்பிலும், கண்டி நகர அபிவிருத்தி திட்டம், வடமேல் வலய கைத்தொழில் மற்றும் உல்லாசப் பிரயாணத்துறைவேலைத்திட்டம் பொலிஸ் மேல் மாகாண அபிவிருத்தித் திட்டம், காலியை மையப்படுத்திய தென் பகுதி உல்லாசப் பிரயாணத்துறை அபிவிருத்தி வேலைத்திட்டம், அம்பாந்தோட்டை புதிய பொருளாதார வலய வேலைத் திட்டம்போன்ற திட்டங்கள்தொடர்பாகவும் தெளிவுபடுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டன.

மேல்மாகாண அபிவிருத்தித்திட்டத்திற்கு மட்டும் 40 பில்லியன் அமெரிக்க டொலர் தேவைப்படுகிறது.

அம்பாந்தோட்டை பொருளாதார வலய அபிவிருத்திக்கு 10 பில்லியன் அமெரிக்கன்டொலர் தேவைப்படுகிறது.

இவை தொடர்பிலான முதலீடுகள் தொடர்பாக தெளிவுப்படுத்தல்கள் முன்னெடுக்கப்பட்டன. இவ்வேலைத்திட்டம் எமது வலயத்தில் பாரிய பொருளாதார அபிவிருத்தித் திட்டமாகும். இது மும்பை, டில்லி பொருளாதார வலயத்திற்கு இணையானதாகும்.

இதன் மூலம் இந்து சமுத்திரத்தில் பாரிய பொருளாதார மத்திய நிலையமாக நாம் உயர்வதோடு தென் இந்திய பொருளாதாரத்திற்கும் எம்மால் அழுத்தம் கொடுக்கக் கூடிய நிலைமை ஏற்படும்.

சிங்கப்பூர் ஜனாதிபதி, பிரதமர் ஆகியோரையும் சந்தித்தேன்.சிங்கப்பூர் ஜனாதிபதி யுடனான சந்திப்பில் அந்நாட்டு வெளிவிவகார அமைச்சர் விவியன் பாலகிருஷ்ணன் மற்றும் வர்த்தக அமைச்சர் ஈஸ்வரன் ஆகியோரும் கலந்துகொண்டனர். சிங்கப்பூர் பிரதமருடனான சந்திப்பின் போது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் வெற்றி தொடர்பாகவும் தேசிய அரசு அமைக்கப்பட்டது தொடர்பிலும் தனது மகிழ்ச்சியை தெரிவித்தார்.

அத்துடன் இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்கு அனைத்து உதவிகளையும் வழங்குவதாக உறுதியளித்தார். இதன்போது சிங்கப்பூருடன் கையெழுத்திடப்படவுள்ள சுதந்திர வர்த்தக உடன்படிக்கை மற்றும் இந்தியா சீனாவுடன் கையெழுத்திடப்படவுள்ள இருதரப்பு உடன்படிக்கைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

13 ஆவது வயதில் கட்டாயக் கல்வியுடனான தொழிற் பயிற்சிக்கு சந்தர்ப்பம்வழங்கி இளைஞர், யுவதிகளுக்கு தொழில் வாய்ப்புக்கள் ஏற்படுத்தும் திட்டம் தொடர்பாகவும் என்னால் தெளிவுபடுத்தப்பட்டது.

இலங்கையின் அரச சேவையின் செயற்றிறனை உயர்த்துவதற்கு சிங்கப்பூரின் ஒத்துழைப்பை இதன்போது கோரினேன். அதற்கு சிங்கப்பூர் பிரதமர் தனது ஆதரவை வழங்க உறுதியளித்தார்.

இவ் வருடம் நவம்பர் மாதம் இலங்கையில் இடம் பெறவுள்ள தெற்கு மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகளின் பலவித சமூகங்களின் மதம் சார்ந்த பொறுப்புக்கள் தொடர்பான சர்வதேச மாநாடு தொடர்பாகவும் நான் அறிவித்ததோடு அதற்காக ஒத்துழைப்பு வழங்குமாறு கோரிக்கை விடுத்தேன். இதனை சிங்கப்பூர் பிரதமர் ஏற்றுக் கொண்டார். அத்தோடு சிங்கப்பூர் பிரதமருக்கு இலங்கைக்கு விஜயம் செய்யுமாறு அழைப்பு விடுத்தோம்.

அதனையும் அவர் ஏற்றுக் கொண்டார். இவ் விஜயத்தின் போது இலங்கை- சிங்கப்பூருக்கு இடையேயான கலாசார பரிமாற்ற வேலைத்திட்டங்கள், மெகா பொலிஸ் திட்டம், சிங்கப்பூர் சிவில் சேவை, தொழிற் கல்வி அபிவிருத்தி உள்ளிட்ட உடன்படிக்கைகளும் கையெழுத்திடப்பட்டன.

சிங்கப்பூர் சிவில் சேவைகள் கல்லூரியை பார்வையிட்டோம். அத்தோடு சிங்கப்பூர் வர்த்தக சமூகத்தை சந்தித்து கலந்துரையாடினோம்.

சிங்கப்பூர் அமைச்சர், உயரதிகாரிகள், முதலீட்டாளர்கள், வர்த்தகர்களையும் சந்தித்து பேச்சுவார்த்தைகளை நடத்தியதோடு பல சிங்கப்பூர் முதலீட்டாளர்கள் தமது முதலீடுகளை ஆரம்பித்துள்ளனர்.

சிங்கப்பூர் முதலீட்டாளர்களுக்கு வசதிகளை ஏற்படுத்தும் விதத்தில் விசேட பிரிவையும் ஏற்படுத்தவும் இணக்கம் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் சிங்கப்பூர் துறைமுகத்திற்கு விஜயம் செய்து அதில் மேற்கொள்ளப்பட்டுள்ள நவீன அபிவிருத்திகளையும் பார்வையிட்டோம்.

இலங்கையிலும் துறைமுக அபிவிருத்திக்கு உதவி வழங்க இதன்போது இணக்கம் தெரிவிக்கப்பட்டது. எதிர்வரும் நாட்களில் வர்த்தகம் மற்றும் முதலீடுகள் தொடர்பாக பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்காக சீனாவுக்கு விஜயத்தை மேற்கொள்ளவுள்ளேன்.

அதேபோன்று ஜப்பானுடன் வர்த்தக ஒத்துழைப்பு மற்றும் முதலீட்டு ஊக்குவிப்பு தொடர்பாகவும் பேச்சுவார்த்தைகளை நடத்துவதற்காக ஜப்பானுக்கும் விஜயம் செய்யவுள்ளேன்.ஜனாதிபதி மற்றும் அமைச்சர் மலிக் சமரவிக்ரம ஆகி யோர் அண்மையில் இந்தியாவுக்கு விஜயம் செய்து வர்த்தக மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு தொடர்பில் பேச்சுவார்த்தைகளை நடத்தினார்கள்.

ஒக்டோபர் மாத ஆரம்பத்தில் டில்லியில் நடைபெறவுள்ள உலக பொருளாதார மாநாட்டின் போது இந்தியப் பிரதமர் மற்றும் ஏனைய அமைச்சர்களுடன் பேச்சுவார்த்தைகளை நடத்த எதிர்பார்த்துள்ளோம்.

ஜீஎஸ்பி வரிச் சலுகையை பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பத்தை ஐரோப்பிய ஒன்றியத்திடம் கையளித்துள்ளோம்.எமது நாட்டின் எதிர்கால சந்ததியினர் இளைஞர், யுவதிகளுக்கு தொழில் வாய்ப்புகளை பெற்றுக் கொடுக்கும் நோக்கிலேயே நாம் அனைத்தையும் முன்னெடுக்கின்றோம். இதன் மூலம் மகிழ்ச்சியுடன் வாழும் சமூகத்தை உருவாக்குவதே எமது இலக்காகும்.

பத்து இலட்சம் வேலை வாய்ப்புகளை வழங்குவதாக நாம் உறுதிமொழி வழங்கினோம். அதனை நிறைவேற்றுவதற்காகவே அனைத்தையும் முன்னெடுக்கின்றோம்.

சீனா, சிங்கபூர் , ஜப்பான் , ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் இந்தியா போன்ற நாடுகளுடன் வர்த்தக மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்படவுள்ளன.

எமது நாட்டவர்களுக்கு வேலைவாய்ப்புகளை ஆற்றுப்படுத்திக் கொடுக்கும் நோக்கிலேயே இவற்றை முன்னெடுக்கிறோம். அதைவிடுத்து வெளிநாட்டவர்களுக்கு இலங்கையில் வேலைவாய்ப்புக்களைவழங்குவதற்காக அல்ல அரசியல், வர்த்தக இரண்டு பிரிவுகளையும் இணைத்து தொழிற் சமிக்ஞையை ஏற்படுத்தி முதலீடுகளை அதிகரிக்கவே நாம் முயற்சிக்கின்றோம்.

தற்போது அம்பாந்தோட்டையில் சீன முதலீட்டாளர்கள் தமது முதலீடுகளை ஆரம்பித்துள்ளனர். இலங்கையின் தேசிய அரசாங்கத்திற்கு உலகத்தில் வரவேற்பு கிடைத்துள்ளது. வாழ்த்துக்கள்கிடைத்துள்ளன. தேசிய அரசு சித்தாந்தத்தின் ஊடாக எதிர்வரும் 5 வருடத்திற்குள் எமது பிரச்சினைகளுக்கு தீர்வுகளை பெற்றுக் கொள்வதற்கு நாம் எதிர்பார்த்துள்ளோம்.

எதிர்வரும் காலங்களில் இந்தத் திட்ட முறைமையை மேலும் பலப்படுத்தி முன்னோக்கிகொண்டு செல்வோம். இக்காலம் முழுவதும் எமது தேசிய அரசாங்கமே ஆட்சியிலிருக்கும். இது தொடர்பில் எந்தச் சந்தேகமும் கிடையாது. எந்தவிதமான விமர்சனங்களும் குற்றச்சாட்டுக்களும் முன்வைக்கப்பட்டாலும் ஜனாதிபதியினதும் எனதும் எதிர்பார்ப்பு நாட்டின் எதிர்கால சந்ததியினருக்கு ஒளிமயமான எதிர்காலத்தை ஏற்படுத்திக் கொடுப்பதே ஆகும். 2015 ஜனவரி 08 ஆம் திகதி நாட்டு மக்கள் எம்மீது வைத்த நம்பிக்கையை அதே போன்று எந்த விதமான மாற்றமும் இன்றி பாதுகாப் போம் என அவர் மேலும் தெரிவித்தார்.(இ-5-7)

# செய்தித்துளிகள்

## நற்கருணைப் பெருவிழா

இளவாலை திருத்தூதர் புனித யாகப்பர் ஆலயத்திருவிழா கடந்த 16 ஆம் திகதி சனிக்கிழமை ஆரம்பமானது.இதேவேளை நாளை மறுதினம் 25 ஆம் திகதி வரை திருவிழா நடைபெறவுள்ளது. நாளை 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நற்கருணைப் பெருவிழாவும் நாளை மறுதினம் 25 ஆம் திகதி திங்கட்கிழமை எம் பாதுகாவலர் திருவிழாவும் நடைபெறும். (இ-3)

## சகோதரத்துவ இலக்கிய விழா

(யாழ்ப்பாணம்)

சோசலிச இளைஞர் சங்கத்தின் சகோதரத்துவ இலக்கிய விழா இன்று 23 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு யாழ்ப்பாணம் ரிம்மர் மண்டபத்தில் இடம்பெறும். இதன் தொடர்ச்சியாக சகோதரத்துவ ஓவியம் மற்றும் இசை நிகழ்ச்சி எதிர்வரும் 28 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கொழும்பு விஹாரமகாதேவி பூங்காவில் இடம்பெறவுள்ளது. (இ-3)

## ஐரோப்பிய நாடுகளில் 661 இலங்கையர்கள் பலி

கடந்த 5 வருட காலப்பகுதியினுள் ஐரோப்பிய நாடுகளில் பல்வேறு காரணங்களால் 661 இலங்கையர்கள் உயிரிழந்துள்ளதாக வெளிவிவகார பிரதியமைச்சர் ஹர்ச டி சில்வா தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் வாய்மூல கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கும் போதே அவர் இதனை தெரிவித்தார். (இ-10)

## துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் உயிரிழப்பு

கல்கிஸை பிரதேசத்தில் நேற்று முன்தினம் இரவு இடம் பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் ஒருவர் சுட்டுக் கொலை செய்யப்பட்டுள்ளார்.

இத்தாக்குதலை நடத்தியவர்கள் பாதாள குழுவினை சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (இ-10)

## ஓகஸ்ட் முதல் அதிவேக வீதியின் கட்டணம் அதிகரிப்பு

எதிர்வரும் ஓகஸ்ட் முதலாம் திகதி தொடக்கம் அதிவேக வீதியின் கட்டணம் அதிகரிப்படவுள்ளதாக போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது.

அதன் பிரகாரம் மஹரகம தொடக்கம் காலி வரை 390 ரூபாவாகவும், மஹரகம தொடக்கம் மாத்தறை வரை 470 ரூபாவாகவும், கடுவெல தொடக்கம் மாத்தறை வரை 490 ரூபாவாகவும், கடவத்தை தொடக்கம் மாத்தறை வரை 510 ரூபாவாகவும் அறவிடப்படும் என அமைச்சு தெரிவித்துள்ளது. (இ-10)

## 17 பல்கலைக்கழக மாணவர்களுக்கு ஐந்து வாரங்களுக்கு வகுப்புத் தடை

இரண்டு வாரங்களுக்கு முதல் பேரதெனிய பல்கலைக்கழகத்தில் ஏற்பட்ட மோதல் சம்பவத்துடன் தொடர்புடைய 17 மாணவர்களுக்கும் 5 வாரங்களுக்கு வகுப்புத் தடை விதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 7ஆம் திகதி பல்கலைக்கழகத்தில் மேற்கொள்ளப்பட்ட சிரமதானப் பணிகளின் போதே இந்த மோதல் சம்பவம் இடம்பெற்றதுடன்,

இதனுடன் தொடர்புடைய விஞ்ஞானம், பொறியியல், முகாமைத்துவ பீடங்களைச் சேர்ந்த மாணவர்களுக்கே வகுப்புத் தடை விதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.(இ-10)

## வேலைவாய்ப்புக்கான அறிவித்தல்

யாழ். வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகத்தில் சுருக்கெழுத்து தட்டச்சுப் பயிற்சி பெற்று வேலையற்று இருக்கும் பழைய மாணவர்கள் தமக்கு தாம் படித்த துறையில் வேலைவாய்ப்புத் தேவைப்படும் பட்சத்தில் கழக நிர்வாகியுடன் உடன் நேரில் தொடர்பு கொள்ளுமாறு கழகத் தலைவர் வ.சிவச்சந்திரதேவன் அறிவித்துள்ளார். (இ)

## இலக்கங்களை பெற்றுக்கொள்ளவும்

யாழ்.மத்திய கல்லூரியில் 200 ஆவது ஆண்டின் பரிசளிப்பு தின விழாவும் பாடசாலையிலிருந்து கடந்த 10 வருட காலப்பகுதியில் பல்கலைக்கழக அனுமதி பெற்ற மாணவர்கள் கௌரவிக்கப்பட இருப்பதனை முன்னிட்டு அலுவலகத்தில் பெயர்களை பதிவு செய்த மாணவர்கள் தங்களுக்கான ஒழுங்கு இலக்கத்தைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்வதுடன் இதுவரை பதிவு செய்யாதவர்கள் எதிர்வரும் 26.07.2016 ஆம் திகதிக்கு முன் பதிந்து தங்களின் இலக்கத்தைப் பெற்று உறுதிப்படுத்துமாறு கல்லூரி அதிபர் அறிவித்துள்ளார். (இ)

# முஸ்லிம்களுக்கெதிரான உணர்வலைகளை மீளவும் தூண்டிவிடும் ஞானசார தேரர்

பொதுபலசேனா(BBS) அமைப்பின் பொதுச்செயலாளராகிய கலகொட அத்தே ஞானசார தேரர் மற்றுமொரு அளுத்கம நிகழ்வு கண்களுக்குத் தெரிகிறது என்ற எச்சரிக்கையொன்றை விடுத்ததன் மூலம் முஸ்லிம்களின் உணர்வலைகளை மீளவும் தட்டியெழுப்பியுள்ளார். அண்மையில் மகியங்கனையில் அவர் ஆற்றிய உரையொன்றின்போது முஸ்லிம்களுக்கெதிரான வன்முறையை தூண்டும் விதத்தில், தேரர் பேசியதாக ஞானசார தேரர் மீது குற்றஞ்சாட்டி முஸ்லிம் சட்டத்தரணிகள் குழுவொன்று பொலிஸ் தலைமையகத்தில் கடந்த வாரம் முறைப்பாடொன்றினை பதிவு செய்திருந்த அதே நேரத்தில் இலங்கை முஸ்லிம் கவுன்சில் என்ற முஸ்லிம் அமைப்பும் இலங்கை பொலிஸ்மா அதிபர் பூஜித ஜயசுந்தரவுக்கு கடிதமொன்றை எழுதியிருந்தது.

ஞானசார தேரருக்கெதிராக பொலிஸ்தலைமையகத்தில் மூன்று முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளதாக சட்டமா அதிபர் ஷிராஸ் நூர்டீன் கூறுகிறார். இப்போது தீவிரவாத பௌத்த குழுக்கள் சமூக ஊடகங்களூடாக முஸ்லிம் சபைக்கும் முஸ்லிம் சட்டத்தரணிகளுக்கும் எதிரான தாக்குதல்களை நடத்த ஆரம்பித்துள்ளன. இது இப்போது முஸ்லிம் குழுக்களுக்கும் பௌத்த குழுக்களுக்குமிடையிலான சமூக ஊடகப் போராக உருவெடுத்திருப்பதுடன் நாட்டில் இடம்பெற்றுவரும் மீள் இணக்கப்பாட்டு முயற்சிகளுக்கும் இவ்விடயம் ஒரு அச்சுறுத்தலாகி வருகிறது.

பொதுபல சேனாவின் பொதுச்செயலாளராகிய வண.கலகொட அத்தே ஞானசார தேரர் மகியங்கனையில் ஜூன் 23ஆம் திகதியன்று மேற்கொண்ட பகிரங்கப் பேச்சொன்றின் போது முஸ்லிம் சமூகத்திற்கெதிராக அளுத்கம வில் ஏற்கனவே இடம்பெற்ற வன்செயல் போன்றதொரு சம்பவம் மீண்டும் ஏற்படப்போவது போன்று அச்சுறுத்தல் விடுத்ததாக இலங்கை முஸ்லிம் கவுன்சில் கடந்த வாரம் பொலிஸ்மா அதிபருக்கு எழுதிய கடிதத்தில் தெரிவித்துள்ளது. தனது பேச்சின்போது ஞானசார தேரர் பொலிஸாருக்குங்கூட அச்சுறுத்தல் விடுத்ததாக தனது அக்கடிதத்தில் முஸ்லிம் கவுன்சில் தலைவர் என். எம். அமீன் மேலும் தெரிவித்திருந்தார். பொலிஸ்மா அதிபருக்கு அவர் எழுதிய கடிதத்துடன் மகியங்கனையில் ஞானசார தேரர் பேசிய பேச்சைக் கொண்ட DVD பதிவொன்றும் இணைக்கப்பட்டிருந்தது. அவரது அக்கடிதப்படி...

"....இருவருடங்களுக்கு முன்னர் 2014 ஜூன் 15 ஆம் திகதியன்று இடம்பெற்றவை பற்றி தாங்கள் அறிந்தபடியே... அளுத்கம மற்றும் பேருவல வாழ் முஸ்லிம் சமூகங்களுக்கு உயிர்ச்சேதம்-பொருட்சேதம் ஏற்படுத்தும் விதத்தில் வன்முறை நடவடிக்கையில் இறங்கும்படி களுத்துறையில் வாழும் சிங்கள மக்களைத் தூண்டிவிட்டு அங்கு அழிவுகளை ஏற்படுத்தியிருந்த வண ஞானசார தேரரின் நடவடிக்கைகள் பற்றி தங்களுக்கு நன்கு தெரியும். அந்தக் கலவரத்தில் இருவர் உயிரிழந்ததுடன் வீடுகளும் உடைமைகளும் அழிக்கப்பட்டு முஸ்லிம்களின் தொழிற்றுறைக்கு பில்லியன் ரூபா பெறுமதியான சேதங்களும் ஏற்படுத்தப்பட்டன. விசாரணைக்கான ஆணைக்குழுவொன்றினை நியமித்து கலவரத்திற்குக் காரணமானவர்கள் தண்டிக்கப்படவேண்டுமென முஸ்லிம் சமூகங்கள் திரும்பத் திரும்ப விடுத்திருந்த வேண்டுகொள்கள் செவிடன் காதில் விழுந்தது போலாயிற்று. இப்போது இரண்டு வருடங்கள் கடந்து விட்ட நிலையில் அளுத்கமவுக்கு அன்று ஏற்பட்ட நிலையே மகியங்கனைக்கும் ஏற்படப்போவதாக அந்தத் தேரர் பெருமையுடன் மீண்டும் மார் தட்டுகிறார்'' என கடிதத்தில் அமீன் குறிப்பிட்டுள்ளார்.

பொலிஸ் அதிபரை மீண்டும் தொடர்பு கொண்ட முஸ்லிம் கவுன்சில் முஸ்லிம்களுக்கெதிரான மேற்கூறிய அச்சுறுத்தல் மட்டில் உடன் விசாரணையொன்றைமேற்கொண்டு வன்முறைகளைத் தூண்டும் இச்செயற்பாடுகளுக்கெதிராக பொலிஸ் நடவடிக்கை எடுக்கும்படி அறைகூவல் விடுத்துள்ளது. அத்துடன் அளுத்கமவில் ஏற்கனவே இடம்பெற்றிருந்த முஸ்லிம்களுக் கெதிரான கலவரங்களைத் தூண்டி வழிநடத்தியவர்களுக்கெதிராகவும் விசாரணை மேற்கொண்டு பொலிஸ் நடவடிக்கை எடுக்கப்படுவது அவசியமெனவும் அது கேட்டுக்கொண்டது.

எமது சண்டேலீடர் அமீனைத் தொடர்பு கொண்டு இதுபற்றிக் கேட்டபோது தனது கடிதத்திற்கும் முறைப்பாட்டிற்குமான பதிலை தாம் தொடர்ந்தும் எதிர்பார்த்திருப்பதாக அவர் கூறினார்.

### ஞானசார தேரரின் தற்காப்பு நிலை

நாட்டில் முஸ்லிம்களுக்கு விரோதமாக தாம் பேசிய பேச்சுக்கள் எனக் கூறி முன்வைக்கப்படும் அனைத்துக் குற்றச்சாட்டுக்களையும் வண. கலகொட அத்தே ஞானசார தேரர் நிராகரிக்கிறார். தமது பேச்சுக்களுக்கு தவறான அர்த்தம் கற்பித்த முஸ்லிம் கவுன்சில் தனது இம் மனநலக்குறைபாட்டை நிவர்த்தி செய்வதற்கு அங்கொடை மன நோய் வைத்தியசாலைக்குத்தான் போகவேண்டும் என்று கூறியதுடன் முஸ்லிம் கவுன்சில் IGP இற்கு அனுப்பிய கடிதத்தை தூதர் முகம்மது நபிக்கே அனுப்பியிருக்க வேண்டுமென்றும் கூறியதன்மூலம் சமூக ஊடகங்களில் மேலும் கூடுதல் மோசமான இறை-மறை நிந்தனை செய்துள்ளார். மேலும் அக்கடிதம் தூதர் முகம்மது நபிக்கே அனுப்பப்பட்டாலுங்கூட அதையிட்டு நான் அஞ்சப்போவதில்லை என்பதுடன் இலங்கை சிங்கள பௌத்தர்களுக்கே சொந்தமானது என்றே தான் தொடர்ந்தும் வலியுறுத்துவதாகக் கூறும் அவர் எமது நாடு சவுதி அரேபியாவோ, பாகிஸ்தானோ அல்லது ஐக்கிய அரபு இராச்சியமோ அல்ல... இந்த இலங்கை எமது நாடு! எம்போன்ற பௌத்த துறவிகளுக்கு மீள் இணக்கப்பாடு பற்றியும் சேர்ந்தே இணைந்து வாழ்வது பற்றியும் முஸ்லிம்கள் கற்பிக்கமுடியாது. அவர்கள் எம்மை எதிர்த்து மோதுவார்களானால் அவர்களுக்குப் பதிலடி கொடுக்க நாம் தயாராகவே உள்ளோம் என்றும் அவர் கூறியிருந்தார்.

கடந்தவாரம் பொலிஸில் தாம் அளித்திருந்த முறைப்பாட்டிலேயே ஞானசாரதேரரது அச்சுறுத்தல்கள் பற்றியும் பதியப்பட்டுள்ளது என நூர்டீன் கூறுகிறார். பேச்சின்போது பொலிஸாருக்கு தேரரால் விடுக்கப்பட்ட அச்சுறுத்தலுடன் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களை விடுவிக்கும்படி அவரால் விடுக்கப்பட்ட எச்சரிக்கை பற்றியும் எமது முதலாவது முறைப்பாட்டிலும் மற்றுமொரு முறைப்பாட்டில் சமூக ஊடகமொன்றிற்கு வழங்கிய பேட்டியொன்றில் நாம் பொலிஸாருக்கு ஏற்கனவே அனுப்பியிருந்த முறைப்பாட்டுக் கடிதத்தை நாம் தூதர் முகம்மது நபிக்கு அனுப்பியிருக்கவேண்டுமென்ற அவரது கூற்றுப் பற்றிய வெளிப்பாடும் உள்ளடங்குகிறது.

ஞானசார தேரருக்கு எதிராக முன்வைக்கப்பட்ட இக்குற்றச் சாட்டுக்கள் மீது விரிவான விசாரணை மேற்கொள்ளப்பட்டு பொருத்தமான சட்ட நடவடிக்கை பொலிஸ்மா அதிபரால் எடுக்கப்படுமென முஸ்லிம் சபை எதிர்பார்ப்பதாக நூர்டீன் கூறுகிறார். அதேநேரம் ஞானசார தேரருக்கெதிராக நடவடிக்கை எடுக்கத் தவறியமைக்காக முஸ்லிம் உலமாக்கட்சிஅரசாங்கத்தை கண்டிக்கிறது.

இதற்கு முன்னர் அண்மையில் முஸ்லிம்கள் குழுவொன்று பௌத்த கொடியொன்றை தீமூட்டி எரித்திருந்தும் முஸ்லிம் குழுக்கள் அதையிட்டு வாய்மூடி மௌனம் காத்தவர்களாகவேயிருந்ததாக சண்டே லீடர் பத்திரிகைக்கு ஞானசார தேரர் கூறியிருந்தார். ஆனால் இவ்வித நடவடிக்கைகளை கண்டும் காணாதது போல் இருந்துவிடாதவர்களான இலங்கை முஸ்லிம் சமூகத்தினர் இச்சம்பவத்தில் சம்பந்தப்பட்ட இளைஞரைக் கைது செய்யும்படி கேட்டிருந்ததாகவே கூறும் இஸ்லாமிய உலமாக் கட்சியினர் எப்படியும், இவ்விதச் சம்பவங்களில் சம்பந்தப்படாத சாதாரண முஸ்லிம்களே இப்போதெல்லாம் இலக்குவைக்கப்படுவதாக கூறுவதுடன் இந்த நிலைமையை அரசாங்கம் விரைவில் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவர வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டுள்ளது.

இவ்விதமான மற்றுமொரு வன்முறை நடவடிக்கையில் ஈடுபட்டதற்காக ஏற்கனவே கைது செய்யப்பட்டிருந்த ஞானசார தேரர் கடந்த பெப்ரவரியில் பிணையில் விடுவிக்கப்பட்டுமிருந்தார். முன்னரும் படுகொலை செய்யப்பட்ட பத்திரிகையாளர் பிரதீப் எக்னெலிகொடவின் மனைவிக்கு அவ்வழக்கு சம்பந்தமாக அச்சுறுத்தல் விடுத்ததற்காக கைது செய்யப்பட்ட தேரர் கடந்த மாதமே ஹோமாகம நீதிமன்ற நீதிபதியினால் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார். இதற்கு முன்னர் நீதிமன்றத்தை அவமதித்த காரணத்திற்காக கைது செய்யப்பட்ட இவர் அந்தத் தடவை ஆரம்பத்திலேயே பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார். எப்படியும் சந்தியா எக்னெலிகொடவை அச்சுறுத்தியதன் பேரில் கைது செய்யப்பட்ட இவர் பெப்ரவரியிலே விடுவிக்கப்பட்டிருந்தார். வெறுப்பைத் தூண்டும் குரோதப் பேச்சுக்களை குற்றமெனத் தடை செய்வதற்கு குற்றவியல் சட்டவொழுங்கில் (Penal Code) திருத்தம் கொண்டு வருவதற்கான பிரேரணையொன்று கடந்த வருடம் அமைச்சரவையில் அங்கீகரிக்கப்பட்டது.

பல்வேறு சமய இனத்துவ ரீதியில் ஏனையோரை விழித்து உணர்த்திக் குற்றப்படுத்தும் குரோதப் பேச்சுக்கள் மற்றும் சம்பந்தப்பட்ட விதமான வெளியீடுகள், பிரசுரங்கள் போன்ற சமூக அமைதியைக் கெடுக்கும் விடயங்களைச் சமூக ரீதியில் அடிப்படை உணர்வுகளைத் தூண்டுபவை என்பதாகவே கடந்த பல தசாப்தங்களாக அரசாங்கம் கூறிவந்தது.


இவ்விதமான கீழ்த்தர நடத்தைகளைத் தடுப்பதற்கான சட்டங்களைத் தயாரித்து நடைமுறைப்படுத்தி வலுப்படுத்தும் முயற்சிகளை மேற்கொள்ளுமாறு கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் மீள் இணக்கப்பாட்டிற்கான ஆணைக்குழு (LLRC) பரிந்துரை செய்துள்ளது.

இதற்கேற்ப நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவினால் ஏற்பாடு செய்யப்பட்ட பொருத்தமான சட்டதிருத்தங்களே கடந்தவருடம் அமைச்சரவையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. எப்படியும் குரோதப் பேச்சுக்கள் மற்றும் சமூக ரீதியான வன்முறைகளையும்அமைதியின்மையையும் தூண்டுவது போன்ற விடயங்களை குற்றவியல் மயப்படுத்தும் அந்தப் பாராளுமன்ற பிரேரணைகள் இரண்டையும் பற்றி அந்த டிசெம்பர் மாதத்திலேயே உள்ளூர் சிவில் சமூகங்கள் தமது ஆழ்ந்த திருப்தியீனத்தை வெளிப்படுத்தியிருந்தன.

பாராளுமன்றுக்குக் கொண்டு வரப்பட்ட மேற்படி இரண்டு பிரேரணைகளிலும் ஒன்று குற்றவியல் சட்ட திருத்தமொன்று பற்றியது. இத்திருத்தமானது வன்செயல் நடவ டிக்கைகளுக்கு, பகைமை உணர்வுகளுக்கு காரணமாகவோ அல்லது தூண்டுதலாகவோ இருப்பதை புதிய குற்றங்களாக்குவதுடன் அவற் றுக்கு இரண்டு வருடங்கள் வரையிலான சிறைத்தண்டனைகளையும் குற்றவாளிக்கு உரித்தாக்குகிறது.

அடுத்த பிரேரணையானது குற் றத்திற்கான அடிப்படைக் காரண- காரிய சம்பந்தப்பட்ட சட்டவிதி முறை திருத்தம் பற்றியதாகும். இது குற்றத்திற்கான அடிப்படை நோக்கத்தினை வழங்கும் சூழ்நிலை க்காரணிகளை முன்வைத்து வழக்கை முன்னெடுக்க உதவுவதற்கு அவசியமானதாகும். குற்ற வியல் சட்டத்தின் கீழ் உருவாகும் இப்புதிய குற்றமானது பயங்கரவாதத் தடைச்சட்டம் பகுதி 2(I) (h)இல் குறிப்பிடப்படும் பேச்சு வழக்குப் பற்றியதென்பதுடன் புதிய சட்ட திருத்தங்களும் அவற் றையே மீண்டும் பிரதிமைப்படுத் துவதால் குறிப்பாக இது இங்கு பிரச்சினைகளுக்குரிய விடயமாகிறது.

இப்பிரச்சினைகள் மன்றில் முன்வைக்கப்பட்ட சந்தர்ப்ப சூழ்நிலைகளின் போது அதில் குறிப்பிடப்படும் குற்றங்கள் அரசியல் அமைப்பினால் உத்தரவாதமளிக்கப்பட்ட பேச்சுச் சுதந்திரத்துடன் சர்வதேச ஒப்பந்தங்களாலும் உத்தரவாதப்படுத்தப்பட்ட சிவில் மற்றும் அரசியல் உரிமைகளும் சம்பந்தமாக அனுமதிக்கப்படத்தக்க கட்டுப்பாடுகளைக் கொண்டதாயிருக்கவில்லை என்ற விடயம் சிவில் சமூகத்தினரால் இங்கு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.




முஸ்லிம்களுக்கெதிரான உணர்வலைகளை மீளவும் தூண்டிவிடும் ஞானசாரதேரர் எனும் தலைப்பில் சண்டே லீடரில் ஈஸ்வரன் ரட்ணம் எழுதிய அரசியல்கட்டுரையின் தமிழாக்கம் இங்கு பிரசுரமாகின்றது.









தமிழில்: யோகர்

சான்றோர் கெட்டாலும் அவர்தம் உயர்ந்த பண்புகள் அழியா.

- லாங் ஃபெல்லோ

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## சகாதேவனுக்கு தெரிந்திருந்தும் போரைத் தடுக்க முடியாமல் போனதேன்?

ஐந்து ஊர் அல்லது ஐந்து வீடாவது தருமாறு தருமபிரான் துரியோதனனிடம் கேட்கிறார்.

எதுவும் தரமுடியாது என்கிறான் துரியோதனன்.

போருக்கு முன்பான சமாதான தூதுகளும் நடக்கின்றன. எல்லாம் தோல்வியில் முடிகின்றது.

போரைத் தடுக்கவே முடியாதா? என்று பலரும் சீர் தூக்கிப் பார்க்கின்றனர். போரைத் தடுக்க வேண்டிய வீஷ்மர், துரோணர், கர்ணன் உள்ளிட்டோர் வாய்மூடி மௌனமாக இருக்கின்றனர்.

அறத்தை உரக்கச் சொல்ல வேண்டியவர்கள்; மூத்தவர்கள் மௌனமாக இருந்தால், மறம் எழுந்து ஆடும். இதுவே உண்மை.

நமக்கென்ன நாம் பேசாமல் இருந்துவிட்டுப் போவோம் என்று பொறுப்பான பதவியில் இருப்பவர்கள் நினைத்தால் அதுவே மிகப்பெரும் அழிவுக்கு காரணமாகும் என்பதும் நினைவில் கொள்ளத்தக்கது.

பாரதப் போர் நடந்தால் ஏகப்பட்ட மனித உயிர்கள் அழிந்து போகும் என்பதை தருமர் நன்கு உணர்ந்திருந்தார்.

ஆதலால்தான் ஐந்து ஊர் அல்லது ஐந்து வீடு தந்தால் போதும் நாங்கள் எங்கள்பாட்டில் இருந்துவிட்டுப் போவோம் என்பது தருமரின் முடிவு.

இருந்தும் பாரதப்போரை நடத்தியாக வேண்டும் என்பது பார்த்தசாரதியின் முடிவாயிற்று.

பாற்கடல் துயின்றவுன் ஏன்தான் அப்படியொரு முடிவு எடுத்தான் என்றால் அதுதான் விதி என்பதாயிற்று. போரை நடத்த வேண்டும் என்று யார் நினைக்கின்றானோ அவனே போரையும் நிறுத்த வல்லவன். இந்த உண்மை பஞ்ச பாண்டவர்களில் சாஸ்திர நூல்களைக் கற்றறிந்த சகாதேவனுக்குத் தெரிகிறது.

பார்த்தசாரதியைப் பார்த்து நாதா! நடக்க இருக்கும் போரைத் தடுக்க ஒரே ஒரு வழி உண்டு என்கிறான்.

எதுவும் தெரியாதவன் போல் என்ன வழி என்று கேட்கிறான் கண்ணன்.

உன்னைக்கட்டிப்போட்டால் இந்த யுத்தம் நடக்காது என்ற உண்மையைச் சொல்லி விடுகிறான் சகாதேவன். உண்மை உணரப்பட்டதன் காரணத்தால்தான் போர்க்களத்தில் கண்ணபரமாத்மா கீதோபதேசம் செய்ய வேண்டியதாயிற்று.

எது நடக்க வேண்டுமோ அது நடந்தாக வேண்டும் என்பதே கீதோபதேசம்.

இதைவிடுத்து எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது. எது நடக்கின்றதோ அதுவும் நன்றாகவே நடக்கின்றது என்ற கீதாச்சாரத்திற்கு நான் ஒரு போதும் உடன்பாடல்ல. நடந்ததெல்லாம் நன்றாக நடந்தது என்று கூறுவது மகாதவறு.

நடப்பதும் நன்றாகும் என்றால் அதை யார் தான் ஏற்பர்.

ஆக எது நடக்க வேண்டுமோ அது நடந்தாகும் என்பதைத்தான் கீதை உபதேசிக்கிறது. உதாரணத்திற்கு ஈழத்தமிழினத்தின் அரசியல் தலைமை தமிழினத்திற்கு கேடு விளைவிக்கும் படியாகச் செயற்படுகிறது.

தென்பகுதியுடன் சேர்ந்து கொண்டு போரினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களின் நலன் பற்றி இம்மியும் சிந்திக்காமல் சுகபோகமாக வாழ்கின்றனர் என்ற உண்மை நம் அனைவருக்கும் தெரியும்.

அதற்கான சான்றாதாரங்கள் வெளிப்படையானவை. எம் இனம் வாழ வேண்டுமாயின்-தலை நிமிர வேண்டுமாயின் தூய்மையான, புதிய அரசியல் தலைமை வேண்டும் என்பதும் நமக்குத் தெரிகிறது.

இருந்தும் நாம் அதைச்செய்ய முடியவில்லையல்லவா? அது ஏன்? அடுத்த தேர்தலிலும் அவர்களுக்கே எங்கள் வாக்கு என்று இருக்கிறோமல்லவா? அது ஏன்? இதுதான்விதி. தமிழனுக்கு தமிழ் அரசியல் தலைமைதான் பகை என்று தெரிந்தும் தடுக்க முடியவில்லை என்றால் எது நடக்க வேண்டுமோ அது நடந்தாகும் என்ற கீதோபதேசத்தை மட்டுமே நினைக்கத் தோன்றுகிறது.


# 971 நிரந்தர வீடுகளை அமைக்க அமைச்சரவையால் அங்கீகாரம்

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் இடம்பெற்ற உயர்மட்ட கலந்துரையாடலில் யாழ்.மாவட்டத்தில் 31 நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள 971 உள்ளக இடம் பெயர்ந்த குடும்பங்களை உடனடியாக மீள்குடியேற்றம் செய்யப்பட வேண்டியதன் அவசியம் வலியுறுத்தப்பட்டது.

அரசாங்கம் 2016ஆம் ஆண்டில் விரைவாக மீள்குடியேற்றத்தினை மேற்கொண்டு நலன்புரி நிலையங்களை மூடிவிடுவதற்கு எண்ணியுள்ளதனால், தற்போது நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள இடம்பெயர்ந்த குடும்பங்களை மீள்குடியேற்றுவதற்கு முன்னுரிமை வழங்கி வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டங்களை வழங்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது என சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி தெரிவித்தார்.

இதனடிப்படையில் ஜனாதிபதியின் கலந்துரையாடலில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு அமைய, சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சர் சுவாமிநாதனால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்தின் அடிப்படையில் 971 நிரந்தர வீடுகளை நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ள உள்ளக இடம் பெயர்ந்த குடும்பங்களை மீள்குடியேற்றுவதற்கு கடந்த 20ஆம் திகதி அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியதாக அமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்தார்.

இவ் வீட்டுத்திட்டம் ஏற்கெனவே அனுமதிக்கப்பட்ட 10 ஆயிரத்து 30 வீடுகளுக்கு மேலதிகமானது என்பது குறிப்பிடத்தக்கது. இவ் வீடுகள் அலகொன்றிற்கு 8 இலட்சம் ரூபாவிலும் பொது உட்கட்டமைப்பு உட்பட ஒரு மில்லியன் ரூபாயில் பயனாளிகளின் முன்னெடுப்பில் கட்டப்படும் எனவும் இது அரசாங்கத்தின் நல்லிணக்கதிற்கான ஒருவெளிப்பாடாகவும் நிரந்தர தீர்வினை நோக்கிய ஒரு நகர்வாகவும் கொள்ளப்படலாம் என அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி தெரிவித்தார். (இ-5)



## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### நீ வென்றாலும் தோற்றாலும்

ஒரு சத்சங்கத்திற்குப் பின் நூற்று ஐம்பது பக்தர்கள் ஸ்ரீகுருதேவருடன் விளையாட்டாக ( வேடிக்கையாக) வாக்கு வாதம் செய்தனர். அவர் தங்களுடன் நிறைய நேரம் செலவிடுவதில்லை. ஆனாலும் இதயத்தையே கொள்ளைய டித்துவிட்டார் என்றனர்.

அவர்களது வாதங்களைக் கொண்டே அவர்களைத் திருப்பிவிட்டு ஸ்ரீஸ்ரீ வென்று கொண்டேயிருந்தார். எல்லோரும் . பரமானந்தத்தில் ஆழ்ந்து சிரித்து மகிழ்ந்தனர்.

ஸ்ரீஸ்ரீ: என்னோடு வாக்குவாதம் செய்து தோற்றாலும் வென்றாலும் நீங்கள் இப்படிச் சிரிக்கின்றீர்களே, அது ஏன்?

ஏனென்றால் முழுமையாக நாம் அனைவரும் ஒருவரையொருவர் சேர்ந்தவர்கள் என்னும் ஐக்கிய உணர்வு இருப்பதால் உண்மையான விளையாட்டு இங்கு நிகழ்கின்றது. வெல்வதும் தோற்பதும் பொருட்டில்லாமல் போகிறது.

சாதாரணமாக ஒரு வாக்குவாதத்தில் நீ தோற்கும் போது என்ன நேர்கிறது, நீ துக்கமடைந்து மனம் சரியில்லாமல் வேதனையும் கோபமும் அடைகிறாய். ஆனால் என்னிடத்தில் தோற்றாலும் வென்றாலும் நீ ஆனந்தப்படுகிறாய். இது எப்படி?

உனக்கு என்னுடன் ஐக்கிய உணர்வு உள்ளது.

மற்ற எல்லாக் குறைகளை விட உன்னுடைய அன்பே முதன்மையாக மேலோங்கியிருக்கிறது.

நிகழ்ச்சியை விட ஆன்மாவிற்கு முதலிடம் கொடுக்கிறாய்.

இறுதியில் நன்மையே என்று உனக்குப் பெருநம்பிக்கை உள்ளது.

இதைப்போலவே ஒவ்வொருவரிடமும் உன்னுடைய மனநிலை இருக்குமா?

ஸ்ரீகிருஷ்ணரின் வாழ்வு முழுவதும் போராட்டமயமாகவேயிருந்தாலும் அவர் சிரித்துக்கொண்டும் ஆடிக்கொண்டும்தான் இருந்தார்.

நீயும் எல்லாப் போராட்டங்களிலும் ஆனந்த நடனமாடிக்கொண்டு இவ்வுலகிற்கு நன்மை செய்வாயாக.

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



உலகிற்கு நன்மை செய்ய நமக்கு முடியுமா? பரமார்த்திக முறைப்படி இயலாது; வியாவகாரிக முறைப்படி இயலும்.

அனைவரும் அரும்பாடு படுவோம் சகோதரர்களே! உறங்க இது காலமல்ல. அவள் அங்கே தயாராகக் காத்திருக்கிறாள். அவள் உறங்குகிறாள் என்பது மட்டுமே.

சிவபெருமானுக்குப் பணி செய்ய விரும்புபவன் அப்பெருமானின் மக்களுக்குப் பணி செய்ய வேண்டும். முதலில் இவ்வுலகில் உள்ள எல்லா உயிர்களுக்கும் பணி செய்யவேண்டும். இறைவனது தொண்டர்களுக்குத் தொண்டு செய்பவர்கள் அவருக்கு உத்தமத் தொண்டர்கள் ஆவர் என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. தன்னலம் இன்மையே சமய வாழ்க்கைக்கு உரைகல். இந்தத் தன்னலமின்மை நிறைந்தவன் சிவபெருமானை மிக நெருங்குகிறான். ஒருவன் தன்னலம் கருதுபவனாயிருந்தால் அவன் பல கோயில்களைத் தரிசித்திருந்தாலும் புண்ணியத் தலங்கள் பல கண்டவனாயிருந்தாலும் சிறுத்தையின் உருவத்தைத் தன்மீது வரைந்து வைத்திருந்தாலும் இன்னும் சில சிவபெருமானுக்கு வெகு தொலைவில் இருப்பவனே.

# “கபாலி” திருடர்களை கண்டுபிடித்தது செல்பி

(கரணவாய்)

கபாலி திரைப்படத்திற்கு பாதுகாப்பு வழங்கச் சென்ற பொலிஸாரிடமே கைத்தொலைபேசியைத் திருடிய திருடர்கள் செல்பி மூலம் சிக்கிய விசித்திரம் நேற்று வெள்ளிக்கிழமை யாழ் நகரில் உள்ள பிரபல திரையரங்கு ஒன்றில் இடம் பெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

பலராலும் எதிர்பார்க்கப்பட்ட சுப்பர் ஸ்டார் ரஜனிகாந் நடிப்பில் உருவான கபாலி திரைப்படம் நேற்றைய தினம் வெளியிடப்பட்டது. இதில் யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல திரையரங்கில் இத்திரைப்படம் திரையிடப்படவிருந்த நிலையில் திரையரங்கத்திற்கு பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது.

அவ்வாறு பாதுகாப்பிற்கு சென்ற யாழ்ப்பாண பொலிஸார் ஒருவர் கதிரை ஒன்றில் வைத்திருந்த கைத்தொலைபேசி திருடப்பட்டிருந்தது.

இது தொடர்பில் விசாரித்த போது அதனை எடுத்ததாக அங்கிருந்த ஒருவரும் தெரிவிக்கவில்லை இந்நிலையில் பொலிஸ் உத்தியோகத்தர் தொலைபேசி வைத்த கதிரைக்கு பின்புறம் இருந்த சிலர் இடம்மாறி இருந்ததுடன முன்வரிசையில் இருந்தவர்கள் எடுத்த செல்பியில் பின் வரிசையில் இருந்த நபர்கள் அத்தொலைபேசியை கையில் வைத்திருப்பது கண்டு பிடிக்கப்பட்டது.

இதனையடுத்து அங்கிருந்த சந்தேகத்திற்குரிய நபர்களை பிடித்து விசாரித்த போது தொலைபேசி அவர்களிடம் இருந்து மீட்கப்பட்டதுடன் பொலிஸாரினால் அவர்கள் கடும் எச்சரிக்கையும் செயப்பட்டிருந்தனர். (செ-60)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5.30 மணி வரை **யாழ் பிரதேசத்தில்** நீர்வேலி, கரந்தன், பொக்கணை (ஊரெழு), உருப்பிராய் ஒரு பகுதி, செம்பாட்டுப பிள்ளையார் கோவில் பிரதேசம், பொற்பதி, கோண்டாவில் வோட்டர் வேர்க்ஸ், கோண்டாவில் ஒரு பகுதி, இருபாலை நெசவு நிலைய பிரதேசம், இராச வீதி (கோப்பாய்), இராச வீதி லைடன் பாம் பிரதேசம், கிருஸ்ணன் கோவில் சந்தி பிரதேசம், கோண்டாவில் கலைவாணி வீதி, இராணுவ முகாம், கோபபாய் ஆசிரியர் கலாசாலை ஆகிய இடங்களிலும் **கிளிநொச்சி பிரதேசத்தில** டொன்பொஸ்கோ, வன்னி விளாங்குளம், ஒட்டறுத்த குளம், வடகாடு, பாலிநகர், அமபாள்புரம், கொல்ல விளாங்குளம், ஐம்பது வீட்டுத் திட்டம், பாண்டியன்குளம், நட்டாங்கண்டல், கரும்புள்ளியான், தென்னியங்குளம, உயிலங்குளம், பாரதி நகர், மாங்காக்குடியிருப்பு, ஆலங்குளம், கல்விளான், ஆனந்தபுரத்திலிருந்து கொக் காவில் வரைக்கும், மத்திய வங்கி, SFHQ இரணை மடு, MAS Active, யுனிச் செலா, பொறியியல்பீடம், விவசாயபீடம், North Cargill's Agri foods, 7வது படையணி இராணுவ முகாம், கிளிநொச்சி இலங்கை தொலைத் தொடர்பு நிலையம், கிளிநொச்சி வைத்தியசாலை, விக்கிரமரட்ண பிறைவேற லிமிற்றட், கொக்காவில் இராணுவ படை முகாம I, கொக்காவில் இராணுவ படை முகாம் II, கொக்காவில இராணுவ படை முகாம III, றூபவாகினி தொலைத் தொடர்பு கோபுரம், கொக்காவில் இராணுவ முகாம் தொலைத்தொடர்பு கோபுரம், 66ஆம் இராணுவ படைமுகாம், பிள்ளையார் அரிசி ஆலை, துணுக்காய் பல நோக்கு கூட்டுறவுச்சங்க அரிசி ஆலை. கோவிந்தன் கடை சந்தி, பன்னன்கண்டி, வட்டக்கச்சி, கறுப்பிக்குளம், உடச்சகண்டி, மாயவனூர், இராமநாதபுரம், சாந்தபுரம், இரணைமடு, திருவையாறு, இரணைமடு விமானப்படை I மற்றும் II, வட்டக்கச்சி பாம் ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)

# இன்றைய போட்டிகள்

வடமராட்சி உதைபந்தாட்ட லீக் தமிழ் மாநில லீக்குகளுக்கிடையிலான முதன்மை உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி இன்று பிற்பகல் 3 மணிக்கு வல்வெட்டித்துறை நெற்கொழு பொது விளையாட்டு அரங்கில் வடமராட்சி உதைபந்தாட்ட லீக் தலைவர் மு.வேதாபரணம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக இலங்கை உதைபந்தாட்ட சம்மேளன உப தலைவர் எஸ். அன்ரனிப்பிள்ளை கலந்து கொள்ளவுள்ளார்.

பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும் போட்டியில் திருகோணமலை அணியை எதிர்த்து கிளிநொச்சி அணியும் தொடர்ந்து மாலை 4.45 மணிக்கு நடைபெறும் போட்டியில் மடு மாந்தை அணியை எதிர்த்து பருத்தித்துறை அணியும் மாலை 6.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் மன்னார்அணியை எதிர்த்து மூதூர் அணியும் இரவு 8.30 மணிக்கு நடைபெறும் போட்டியில் அம்பாறை அணியை எதிர்த்து வவுனியா அணி மோதவுள்ளது.

❖❖❖❖❖❖❖❖

மெலிஞ்சி முனை இருதயராஜா விளையாட்டுக்கழகம் தீவக உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் யாழ்.மாவட்டத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான 11 பேர் கொண்ட உதைபந்தாட்ட போட்டியில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறும் போட்டியில்பாடும்மீன் விளையாட்டு கழகத்தை எதிர்த்து நயினாதீவு அண்ணா விளையாட்டுக்கழகமும் மாலை 4 மணிக்கு நடைபெறும் போட்டியில் சென்.ஜேம்ஸ் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது.

❖❖❖❖❖❖❖❖

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் புத்தூர் எவறெஸ்ட் விளையாட்டுக்கழகம் நடத்தும் வடமாகாண ரீதியிலான 11 பேர் கொண்ட உதைபந்தாட்ட போட்டியில் இன்று சனிக்கிழமை மாலை 4.15 மணிக்கு நடைபெறும் போட்டியில் மன்னார் கில்லறி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து உருத்திரபுரம் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. (கு)

# கரப்பந்தாட்ட இறுதிப்போட்டியும் புதிய மைதான திறப்பு விழாவும்





யாழ். மாவட்ட கரப்பந்தாட்ட சங்கத்தின் அனுமதியுடன் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக் கழகம் நடத்தும் மின்னொளியிலான கரப்பந்தாட்ட சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டியும் புதிய மைதானத் திறப்பு விழாவும் இன்று சனிக்கிழமை மாலை 5.30 மணிக்கு மத்திய விளையாட்டுக் கழக போசகர் கனகசபை தேவதாஸ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரச அதிபர் நா. வேதநாயகன் கலந்து கொள்ளவுள்ளார்.

கரப்பந்தாட்ட இறுதிப் போட்டியில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து மன்னார் சென்.மேரிஸ் விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. (கு)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

# இந்திய அணியை வீழ்த்தியது வடமாகாண பெண்கள் அணி



இந்தியா அரியானா மாநில அணியை வீழ்த்தியது யாழ். மாவட்டப் பெண்கள் அணி.

இந்தியாவில் இருந்து வருகை தந்த அரியானா மாநில அணிக்கும் யாழ். மாவட்ட பெண்கள் அணிகளுக்கும் இடையிலான சிநேக பூர்வ கபடிப் போட்டி நேற்று முன்தினம் பருத்தித்துறை முனை சென்.தோமஸ் விளையாட்டுக் கழக கபடி மைதானத்தில் நடைபெற்றது.

மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற போட்டியில் யாழ். மாவட்ட பெண்கள் அணி வெற்றி பெற்றது. (கு)



இந்தியாவில் இருந்து வருகை தந்த கபடி அணிக்கும் வடமாகாணத்தில் முதலிடம் பிடித்த வவுனியா மாவட்ட ஆண்கள் அணிக்கும் இடையிலான சிநேக பூர்வ கபடிப் போட்டி நேற்று முன்தினம் நடை பெற்றது. இதில் இந்திய அணி 2 புள்ளிகளால் வெற்றி பெற்றது. 2ம் இடம் பெற்ற வவுனியா மாவட்ட ஆண்கள் அணியை படத்தில் காணலாம்.

# வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான தடகளப்போட்டி முடிவுகள்

15 வயது பெண்கள்
400 மீற்றர்

உடுப்புக்குளம் தமிழ் வித்தியாலயத்தைச் சேர்ந்த எல்.டிலக்ஸன் முதலாமிடத்தையும் சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியாலயத்தைச் சேர்ந்த கே.றிசானிகா இரண்டாமிடத்தையும் அலகல வித்தியாலயத்தைச் சேர்ந்த ஆர்.எம்.பி.சமனலி மூன்றாமிடத்தையும் பெற்றனர்.

17வயது பெண்கள்
400 மீற்றர்

கிளிநொச்சி மத்திய கல்லூரியைச் சேர்ந்த ரி.டென்சிகா முதலாமிடத்தையும் விவேகானந்தா வித்தியாலயத்தைச் சேர்ந்த யு.குயின்சினி இரண்டாமிடத்தையும் மடுகந்த தேசிய பாடசாலையைச் சேர்ந்த டி.பிரேமதாஸ மூன்றாமிடத்தையும் பெற்றனர்.

19 வயது பெண்கள்
400மீற்றர்

முருகானந்தா கல்லூரியை சேர்ந்த பி.தனுஜா முதலாமிடத்தையும் முல்லைத்தீவு மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த எஸ்.சயந்தரூபி இரண்டாமிடத்தையும் தேவிபுரம் அ.த.க.பாடசாலையைச் சேர்ந்த கே.தனுசியா மூன்றாமிடத்தையும் பெற்றனர்.

21 வயது பெண்கள்
400 மீற்றர்

நானாட்டான் மகா வித்தியாலத்தைச் சேர்ந்த பி.தீபா முதலாமிடத்தையும் பாரதி வித்தியாலயத்தைச் சேர்ந்த என்.யாழிசை இரண்டாமிடத்தையும் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியைச் சேர்ந்த எஸ். சபிதா மூன்றாமிடத்தையும் பெற்றனர்.

15 வயது ஆண்கள்
400 மீற்றர்

சென்.பற்றிக்ஸ் கல்லூரியைச் சேர்ந்த ஏ.பி.டிலக்ஸன் முதலாமிடத்தையும் கொக்குத்தொடுவாய் அ.த.க.பாடசாலையைச் சேர்ந்த பி.தனோஜன் இரண்டாமிடத்தையும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியைச் சேர்ந்த ஜி.கோபிநாத் மூன்றாமிடத்தையும் பெற்றனர்.

17 வயது ஆண்கள்
400 மீற்றர்

சென்.ஆன்ஸ் மத்திய மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த ஏ.அபிக்சன் முதலாமிடத்தையும் கொட்டாவத்தை அ.மி.த.க.பாடசாலையைச் சேர்ந்த வி.ரவிவர்மன் இரண்டாமிடத்தையும் தூயஜோசப் வாஸ் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த எஸ்.எஸ். டிலக்சன் மூன்றாமிடத்தையும் பெற்றனர்.

19வயது ஆண்கள்
400 மீற்றர்

பாத்திமா மத்திய மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த ஏ.அபினாஸ் முதலாமிடத்தையும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியைச் சேர்ந்த எஸ்.செந்தூரன் இரண்டாமிடத்தையும் ஹாட்லிக் கல்லூரியைச் சேர்ந்த ஜே.டிலக்சன் மூன்றாமிடத்தையும் பெற்றனர்.

21வயது ஆண்கள்
400 மீற்றர்

சென்.ஜோன்ஸ் கல்லூரியைச் சேர்ந்த எம்.நிலோஜன் முதலாமிடத்தையும் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரியைச் சேர்ந்த எஸ். சாகித்தியன் இரண்டாமிடத்தையும் பரிகாரிகண்டல் அ.த.க. பாடசாலையைச் சேர்ந்த சி.நிதர்ஸன் மூன்றாமிடத்தையும் பெற்றனர்.

19 வயது பெண்கள்
தட்டெறிதல்

வைத்தீஸ்வரா கல்லூரியைச் சேர்ந்த ஆர்.சுஜீபா முதலாமிடத்தையும் பளை றோ.க.த.க.பாடசாலையைச் சேர்ந்த ஜி.லக்ஷனா இரண்டாமிடத்தையும் நானாட்டான் மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த எம்.மனுஜா மூன்றாமிடத்தையும் பெற்றனர்.

19 வயது பெண்கள்
கோலூன்றிப் பாய்தல்

அருணோதயா கல்லூரியைச் சேர்ந்த வி.சாத்விகா முதலாமிடத்தையும் மகாஜனாக்கல்லூரியைச் சேர்ந்த எஸ்.டிலானி இரண்டாமிடத்தையும் சாவகச்சேரி இந்துக்கல்லூரியைச் சேர்ந்த பி.கிரிஜா மூன்றாமிடத்தையும் பெற்றனர்.

15 வயது பெண்கள்
குண்டு போடுதல்

வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலையைச் சேர்ந்த கே.பாரவி முதலாமிடத்தையும் மகாஜனா கல்லூரியைச் சேர்ந்த எஸ்.தேனுசா இரண்டாமிடத்தையும் புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரியைச் சேர்ந்த ஜே.மேரி டெலசியா மூன்றாமிடத்தையும் பெற்றனர்.

15 வயது ஆண்கள்
நீளம் பாய்தல்

கைதடி நாவற்குழி அ.த.க. பாடசாலையைச் சேர்ந்த ஆர்.மகிந்த் முதலாமிடத்தையும் சாவகச்சேரி இந்து கல்லூரியைச் சேர்ந்த எஸ். ஜெனிசாந்த இரண்டாமிடத்தையும் டிறிபேக் கல்லூரியைச் சேர்ந்த என். சதீஸ்கண்ணன் மூன்றாமிடத்தையும் பெற்றனர். (முற்றும்)

# அனைத்து பீட...

எனவும், மாணவர்கள் அனைவரும் அச்சமின்றி பல்கலைக் கழகத்திற்கு வருகை தர முடியும் என பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவும், யாழ்.பல்கலைக்கழக சமூகமும் கூட்டாக கோரிக்கை விடுத்துள்ளன.

மேலும் எதிர்வரும் சில நாட்களுக்குள் அனைத்து பீடங்களும் முழுமையாக இயங்குவதற்கான ஏற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் நாடு முழுவதிலும் இருந்து வரும் மாணவர்கள் அச்சமில்லாமல் கல்வியினை தொடரக்கூடிய நிலை உள்ளது.

எனவே அனைத்து மாணவர்களுடைய பெற்றோரும் தமது பிள்ளைகளை அச்சம் இன்றி பலகலைக்கழகத்திற்க அனுப்பி வையுங்கள் என்றும் பல்கலைக்கழக மானயங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் மொஹான் டி சில்வா கேட்டுக் கொண்டுள்ளார்.

கடந்த 16 ஆம் திகதி சனிக்கிழமை யாழ். பல்கலைக்கழ விஞ்ஞான பீடத்தின் புதுமுக மாணவர்களின் வரவேற்பு நிகழ்வில் ஏற்பட்ட குழப்பம் காரணமாக இரு மாணவர் குழுக்களுக்கு இடையில் மோதல் நடைபெற்றிருந்தது. மோதல் காரணமாக பல்கலைக் கழகத்தின் கற்றல் செயற்பாடுகள் நிறுத்தி வைக்கப்பட்டு தற்போது பகுதி பகுதியாக மீண்டும் கற்றல் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும் முழுமையான கற்றல் செயற்பாடுகள் இன்னும் ஆரம்பிக்கப்படவில்லை. இந்நிலையில் யாழ்.பல்கலைக்கழக மாணவர்களிடையே இடம்பெற்ற மோதல் சம்பவத்தின் பின்னரான நிலைமைகள் தொடர்பாக ஆராய்வதற்காக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் மொஹான் டி சில்வா தலைமையிலான 5 ஆணையாளர்கள் அடங்கிய குழுவினர் நேற்று யாழ்.பல்கலைக்கழகத்திற்கு விஜயம் செய்திருந்தனர்.

இங்கு வந்த அவர்கள் யாழ்.பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர், பீடாதிபதிகள், பேராசிரியர்கள் மற்றும் ஆலோசகர்களை சந்தித்து இது தொடர்பில் கலந்துரையாடல் ஒன்றினை நடத்தியிருந்தனர். இக்கலந்துரையாடல் யாழ்.பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தில் உள்ள மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றிருந்தது. காலை 10 மணியளவில் ஆரம்பிக்கப்பட்ட இக்கலந்துரையாடல் மாலை 3.30 மணிவரைக்கும் நீடித்திருந்தது. குறித்த கலந்துரையாடல் முடிந்த பின்னர் அங்கு ஊடகவியலாளர் சந்திப்பு இடம்பெற்றிருந்தது.

இச் சந்திப்பில் கலந்து கொண்ட ஊடகவியலாளர்களினால் கேட்கப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும் போதே பேராசிரியர் மொஹான் டி சில்வா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.பல்கலைக்கழகமானது இதுவரை காலமும் சிறந்த முறையில் இயங்கி வந்திருந்தது. இருந்த போதும் அண்மையில் இரு மாணவர் குழுக்களுக்கு இடையில் ஒரு மோதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது. இருப்பினும் அது ஒரு சிறு மோதல் சம்பவமாகும். இம் மோதல் சம்பவம் தொடர்பில் பல்கலைக்கழக நிர்வாகத்தினால் சரியான சந்தர்ப்பத்தில் எடுக்கப்பட்ட முடிவால் நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டிருந்தது. தற்போது பல்கலைக்கழகத்தின் நிலைமை சுமுகமாக்கப்பட்டுள்ளது. குறிப்பாக பகுதியளவில் மாணவர்களுடைய கற்கைகள் மீளவும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதன்படி யாழ்.பல்கலைக்கழகத்தின் பொறியியல், மருத்துவம், விவசாயம், சித்த மருத்துவம் மற்றும் வவுனியா வளாகத்தில் நடைபெறும் கற்கைநெறிகள் முழுமையாக ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஆரம்பிக்கப்பட்ட கற்கைநெறிகளின் மாணவர்கள் 100 வீதம் வருகை தந்து தமது கற்றல் செயற்பாடுகளை மீளவும் ஆரம்பித்துள்ளனர்.

மேலும் விஞ்ஞான பீடம், கலைப்பீடம் மற்றும் முகாமைத்துவ பீடம் ஆகியவற்றில் கற்றல் செயற்பாடுகளும் உடனடியாக ஆரம்பிப்பதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. மிக விரைவில் இப் பீடங்கள் ஆரம்பிப்பதற்கான அறிவித்தல்கள் பல்கலைக்கழக நிர்வாகத்தினால் விடுக்கப்படும்.

யாழ்.பல்கலைக்கழகத்தில் தற்போது எந்தப் பிரச்சினைகளும் இல்லை. மாணவர்கள் கல்வி கற்பதற்கான பிரச்சினைகளும் இல்லை. பாதுகாப்புப் பிரச்சினைகளும் இல்லை. ஆரம்பிக்கப்பட்ட பீடங்களில் மாணவர்கள் ஒன்றாக இணைந்து கல்வி கற்கின்றார்கள். அவர்களும் சுதந்திரமாக முன்னர் இருந்தது போல் தமது செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றார்கள் என்றார் அவர். (செ-4)

# பொலிஸ் உட்பட...

மாவத்தகமவை சேர்ந்த பொலிஸ் உத்தியோகத்தர் பீ.சீ.கரம்பொல என்பவருமே இவ்வாறு உயிரிழந்துள்ளனர்.

இந்த விபத்தில் இருவரும் பலத்த காயங்களுக்கு உள்ளாகிய நிலையில் இறந்துள்ளதாக கூறப்படும் நிலையில் உயிரிழந்த பொலிஸாரது சடலம், கிளிநொச்சி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை திருநெல்வேலி மாரியம்மன் வீதியைச் சேர்ந்த 26 வயதுடைய கதிரவேலு கபிராஜ் என்பவரை விபத்து நடைபெற்ற நள்ளிரவு வேளை காணவில்லை என்று தேடியபோது விபத்து இடம்பெற்ற இடத்தில் சங்குபிட்டி கடல் நீரினுள் சடலம் இருப்பதை கண்டு நேற்றுக் காலை கிளிநொச்சி மாவட்ட நீதவான் ஏ.ஏ.ஆனந்தராஜ் பார்வையிட்ட பின்னர் கடலில் இருந்து சடலம் எடுக்கப்பட்டு பிரேத பரிசோதனைக்காக கிளிநொச்சி வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மேலும் இந்தச் சம்பவம் கொலையா? அல்லது விபத்தா? என்பது தொடர்பில் பல கோணங்களில் விசாரணை மேற்கொண்டு வருவதாக பூநகரி பொலிஸார் தெரிவித்துள்ளனர். (செ-15-87-281-312)

# பல்லின கலாசா...

கொழும்பு பண்டாரநாயக்க மாநாட்டு மண்டப குழு அறையில் நடைபெற்ற தொண்டு நிறுவன-ஊடக கூட்டு நிகழ்வில் பிரதம அதியாக கலந்துகொண்ட அமைச்சர் மனோ கணேசன் மேலும் கூறியதாவது,

தெற்கிலே சிங்களம் மட்டும் என்ற கொள்கை முன்னெடுக்கப்பட்டால் அதற்கு பதிலடியாக வடக்கில் தமிழ் மட்டும் என்ற கொள்கை முன்னெடுக்கப்படும். அதேபோல் வடக்கில் தமிழ் மட்டும் என்ற கொள்கை முன்னெடுக்கப்பட்டால் அதற்கு பதிலடியாக தெற்கில் சிங்களம் மட்டும் என்ற கொள்கை முன்னெடுக்கப்படும். யாழ் பல்கலைக்கழக சம்பவத்தை நாம் இப்படித்தான் பார்க்க வேண்டும். அது முழு நாட்டுக்கும் தந்து இருக்கும் செய்தி இதுதான்.

தென்னிலங்கையில் உள்ள பல்கலைக் கழக மாணவர் மற்றும் பேராசிரியர் சமூகத்துக்கு ஒரு யோசனை சொல்ல விரும்புகிறேன். முடியுமானால், இங்கே உங்கள் பீடங்களில் நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்து அதிலே நாதஸ்வரம், மேளதாளம், என்ற தமிழ் கலாசார அடையாளங்களை உள்வாங்கி, நீங்கள் பல்லின, பன்மொழி பன்மைத்தன்மை கலாச்சாரத்துக்கு தயார் என எடுத்து காட்டுங்கள்.

அப்படி செய்தால் மட்டுமே உங்களால், தமிழ் மட்டும் என்ற கொள்கையாளர்களை நாணமடைய செய்ய முடியும்.

சிங்களம், ஈழத்தமிழ், மலையக, முஸ்லிம் என்று இந்த நாட்டில் வாழும் சுமார் இருபதுக்கும் மேற்பட்ட எல்லா இனங்களின் கலாசாரங்களையும் கலந்து ஒரு கலவை தேசிய கலாசாரம் ஏற்பட வேண்டும் என்பதில் எனக்கு உடன்பாடு இல்லை. தமிழ், சிங்கள, முஸ்லிம், மலையக தனித்துவ அடையாளங்கள் பேணி பாதுகாக்கப்பட வேண்டும். அவற்றை ஒரு மாலையாக கோர்த்துத்தான் இலங்கை தேசிய அடையாளம் உருவாக வேண்டும் என்றுதான் நான் விரும்புகிறேன்.

தெற்கில் இன்று, இந்த யாழ் பல்கலைக் கழக பிரச்சினைபற்றி குரல் எழுப்பப்படுகிறது. குரல் எழுப்பும் இவர்கள் உத்தமர்களா? எல்லா இனங்களிலும் இன்று அடிப்படைவாத சிந்தனை இருக்கிறது. அனைத்து இன அடிப்படைவாத சிந்தனையாளர்களும் ஒருவருடன் ஒருவர் ஏச்சும், பேச்சுமாக மோதிக் கொள்வார்கள். ஆனால் இவர்கள் மத்தியில் எழுதப்படாத ஒரு புரிந்துணர்வு உடன்படிக்கை உண்டு.

வடக்கிலும், புலம்பெயர்ந்த சமூகத்திலும் இருக்கின்ற அடிப்படைவாதிகள் வாயை திறந்தால் அது, தென்னிலங்கையில் இருக்கின்ற அடிப்படையாளர்களுக்கு பெரும் வாய்ப்புகளை வழங்குகிறது. இவர்கள் வாய் திறந்தால், அது அவர்களுக்கு வாய்ப்புகளை வழங்குகிறது. கடல் கடந்து போய் சீமான், வைகோ ஆகியோருக்கும் வாய்ப்புகளை வழங்குகிறது. இதுதான் இன்றைய யதார்த்தம்.

இந்நாடு பல இனங்கள், மதங்கள், மொழிகள் கொண்ட ஒரு நாடு என்ற பன்மை தன்மையை, நாம் அனைவரும் ஏற்றுக் கொள்வதில்தான் இந்த நாட்டின் எதிர்காலம், தங்கியுள்ளது. யாழ் பல்கலை சம்பவம், இந்த பன்மை தன்மையின் மீது விழுந்த அடி. அது தான் உண்மை.

அது ஏன் என நாம் யோசிக்க வேண்டும். அடிப்படைவாதத்தை தூக்கி எறிந்துவிட்டு மத்தியஸ்த பன்மைவாதத்தை முன்னெடுக்க நாம் முன்வர வேண்டும் என மனோ கணேசன் தெரிவித்தார். (செ-11)

# தீயில் எரிந்து பெண் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

தீயில் எரிந்து படுகாயங்களுக்குள்ளான நிலையில் இளம் குடும்பப் பெண் ஒருவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் அவசர சிகிச்சை பிரிவில் சிகிச்சைக்காக அனுமதிககப்படுள்ளார். இச் சம்பவம் நேற்று அல்வாய் வடக்கு பகுதியில் இடம் பெற்றுள்ளது.

இதில் அதே இடத்தைச் சேர்ந்த பால சரவணன் மதுரங்கா (வயது-22) என்ற இளம் குடும்ப பெண்னே படுகாயமடைந்தவராவார்.

இது தொடர்பில் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. குடும்பத்தில் ஏற்பட்ட பிணைக்கே மேற்படி தீ விபத்துக்கு காரணம் என ஆரம்ப கட்ட விசாரணை மூலம் தெரிய வந்துள்ளது (செ-30)

# மஹோற்சவ விஞ்ஞாபனம்

(கோப்பாய்)

திருநெல்வேலி ஸ்ரீ நீலாயதாக்ஷி சமேத ஸ்ரீ காயாரோகணஸ்வாமி தேவஸ்தான அம்பிகை மஹோற்சவம் எதிர்வரும் புதன்கிழமை ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து அடுத்த மாதம் 4-ம் திகதி வியாழக்கிழமை இரதோற்ஸவமும், மறுநாள் 5-ம் திகதி வெள்ளிக்கிழமை தீர்த்தோற்ஸவமும் இடம்பெறும்.

மகோற்ஸவ காலத்தில் அம்பிகைக்கு காலை 10 மணிக்கும், மாலை 6 மணிக்கும் வசந்தமண்டபப் பூஜை நடைபெறும் என்பது குறிப்பிடத்தக்கது. (செ-11-87)

## மாணவியின் கோரிக்கையை ஏற்று

# வவுனியா மடுகந்தை பாடசாலை மாணவர்களுடன் ஜனாதிபதி சந்திப்பு



(வவுனியா)

வவுனியா மடுகந்தை தேசிய பாடசாலை மாணவ மாணவியர் நேற்று பிற்பகல் ஜனாதிபதி மாளிகையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை சந்தித்தனர்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடமிருந்து கிடைக்கப்பெற்ற ஒரு அழைப்பின் பேரிலேயே இச்சந்திப்பு இடம்பெற்றது.

அண்மையில் ஜனாதிபதி வவுனியா போகஸ்வெவ பிரதேசத்திற்கு மேற்கொண்ட ஒரு விஜயத்தின்போது வவுனியா மடுகந்தை தேசிய பாடசாலையின் தாரிக்கா மிஹிராங்கி என்ற மாணவி ஜனாதிபதியிடம் விசேட கோரிக்கையையொன்றை முன்வைத்தார்.

அது தமது பாடசாலையில் நிலவும் குறைபாடுகள் தொடர்பாக ஜனாதிபதிக்கு தெரியப்படுத்துவதற்கான ஒரு சந்தர்ப்பத்தை தமக்கு பெற்றுத் தர வேண்டுமென்பதாகும்.

பல்வேறு வேலைப் பழுவிற்கு மத்தியிலும அம்மாணவியின் கோரிக்கைக்கு ஜனாதிபதி செவிமடுத்திருந்ததோடு, அவ்விஜயத்திற்கு இரண்டு நாட்களுக்குப் பின்னர் ஜனாதிபதி மாளிகையை பார்வையிடுவதற்காக ஜனாதிபதி அலுவலகத்தில் இருந்து மடுகந்தை தேசிய பாடசாலை மாணவர்களுக்கு தொலைபேசி மூலம் அழைப்புவிடுக்கப்பட்டது.

அந்த வகையில் நேற்று பிற்பகல் ஜனாதிபதி மாளிகைக்கு வருகை தந்த மாணவர்களை ஜனாதிபதி அன்புடன் வரவேற்றார். ஜனாதிபதி மாளிகையை பார்வையிட்டதன் பின்னர் ஜனாதிபதியுடன் ஒரு சுமுகமான கலந்துரையாடலில் ஈடுபட்ட மாணவர்கள், தமது பாடசாலையில் நிலவும் பல்வேறு குறைபாடுகள் தொடர்பில் ஜனாதிபதிக்கு தெரியப்படுத்தினர்.

குடிநீர் வசதியை ஏற்படுத்துதல், புதிய விஞ்ஞான ஆய்வுகூட வசதிகள் உட்பட பல்வேறு கோரிக்கைகளை அவர்கள் முன்வைத்தனர்.

அக்கோரிக்கைகள் தொடர்பில் உடனடி கவனம் செலுத்திய ஜனாதிபதி, அது தொடர்பாக உரிய தரப்பினருக்கு தெரியப்படுத்தியது மட்டுமன்றி, அடுத்த மாதம் மடுக்கந்தை தேசிய பாடசாலைக்கு ஒரு கண்காணிப்பு விஜயத்தை மேற்கொள்வதாகவும் உறுதியளித்தார்.

பாடசாலை மாணவர்களுக்காக மதிய போசனமும் ஜனாதிபதி அலுவலகத்தில் தயார்படுத்தப்பட்டிருந்ததோடு, ஜனாதிபதியும் அம்மாணவர்களுடன் மதிய போசனத்தில் இணைந்துகொண்டார். (செ-11)

# 55 மில்லியன் டொலர்களை...

முற்பகல் பதினொரு மணியளவில் சந்தித்து கலந்துரையாடியிருந்தனர். இதன் போதே மேற்படி உதவித்திட்டம் தொடர்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த உதவித்திட்டத்தின் மூலம் யாழ்.நகரினை மிகவும் திட்டமிட்ட முறையில், மேற்குலக நாடுகளின் நகரங்களைப் போல் மாற்றியமைகக முடியும் எனவும், இந்த நிதியுதவியை நடைமுறைப் படுத்தும் வகையில் இதற்கான திட்டம் ஏற்கெனவே தயாரிக்கப்பட்டு விட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பிலிருந்து ஏ9 பிரதான பாதை வழியாக வரும் அனைத்து வாகனங்களும், சாவகச்சேரியில் இருந்து யாழ்.நகருக்குள் வந்து குவிவை ஏற்படுத்தாது, மாற்று சுற்று வட்ட பாதை ஒன்றினை ஏற்படுத்தி புதிய நகர் திட்டமிடல் ஒன்று மேற்கொள்ளப்படவுள்ளது. இதன் மூலம் தனியார் பஸ் நிலையம் உட்பட பெரும்பாலானவை மாற்று இடத்திற்கு செல்லவுள்ளன.

நகருக்குள் வாகன நெரிசல்களை தடுக்கும் வகையில் இரு சுற்றுவட்ட வீதிகள், நிலக்கீழ் வீதிகள் என்பனவும் இந்த திட்டத்தின் கீழ் வரவுள்ளன.

இந்த திட்டம் இந்த வருட இறுதிப்பகுதியிலிருந்து நடைமுறைப் படுத்தப்படவுள்ளது.

நேற்றையதினம யாழ். வருகை தந்த உலக வங்கி பிரதிநிதிகளான பீற்றர் டி எலிஸ், சீனித்தம்பி மனோகரன், ரெசிக்கா சமல்மித், சென், ஆகியோருடன் நடைபெற்ற சந்திப்பு தொடர்பில் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி விக்னேஸ்வரன் தெரிவிக்கையில்,

உலக வங்கி சார்பில் இன்றைய (நேறறைய) தினம் பல அலுவலர்கள் வந்து சதித்திருந்தார்கள்.

ஒரு தரப்பினர் யாழ் அபிவிருத்தி தொடர்பில்கலநதுரையாடி 55 மில்லியன் அமெரிக்க டொலர் எமக்காக உலக வங்கியால் ஒதுக்கப்பட்டுள்ளது என்ற நற்செய்தியை கூறி சென்றுள்ளனர்.

இது சம்பந்தமான நடவடிக்கைகள் எதிர்வரும் ஒக்டோபர், செப்ரம்பர் மாதங்களில் நடைபெறும் எனவும்,

இதில் நகர அபிவிருத்தி சம்பந்த மான சகல நடவடிக்கைகளையும் எடுப்பார்கள் எனவும் கூறியுள்ளனர். (செ-4)


பல்கலைக்கழகம் செல்ல முன்னரே வேலைவாய்ப்பு
(வேலை செய்து கொண்டே பட்டக்கல்வியினை பூர்த்தி செய்யலாம்)
பல்கலைக்கழக அனுமதி கிடைக்காதவர்களுக்கு
வேலைவாய்ப்புடன் பட்டக்கல்வி
O/L உடன் Business & Hotel Management UK Certified
CERTIFICATE ▶ DIPLOMA ▶ DEGREE
With FREE >>> English Course
2016 A/L மாணவர்கள் JULY 30 ற்குள் பதிவினை மேற்கொண்டு 50% கட்டணக் கழிவினை வெல்லுங்கள்!
3 மாத கால தொழில்துறைப் பயிற்சி
(பயிற்சி காலத்தில் கொடுப்பனவுகளும் வழங்கப்படும்)
கற்கைநெறி நிறைவில் வேலைவாய்ப்பு ஏற்பாடு
வெளிநாடு செல்ல விரும்புவோருக்கு விசா ஏற்பாடு.
புதிய பிரிவு ஆரம்பம் Week & Weekend Batch
அனுமதிகளுக்கு: 077 3616 798
(C-5276)
SIKARAM ACADEMY Business · Hospitality · English SCHOOL of HOSPITALITY
www.sikaram.lk
Sikaram Academy
021 222 0011
275-2/1, மணிக்கூட்டுக்கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
(வைத்தியசாலை பின்புறம் - பஸ் நிலையத்திலிருந்து 100m)



காணி விற்பனைக்கு
சுன்னாகம் சந்திக்கும் மல்லாகம் சந்திக்கும் இடையில் காங்கேசன்துறை பிரதான வீதியில் கடைத்தொகுதியுடன் கூடிய 12 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு:-0769690597
(5272)



A/L வரலாறு-2016
மாபெரும் கருத்தரங்கு
இடம்: DMI யாழ்ப்பாணம்
காலம்:23.07.2016 (சனிக்கிழமை)
24.07.2016 (ஞாயிற்றுக்கிழமை)
நேரம்:காலை 8 தொடக்கம்
மாலை 3 மணிவரை
ஆசிரியர்கள்:-M.பத்மன் M.A
S.சுஜிகரன் B.A, S.தாஸ் B.A
(C-5267)



ALLIANCE FRANCAISE DE JAFFNA
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக் கொள்ளுங்கள்
FRENCH பிரெஞ்சு மொழி
உடன் பதிவு செய்யுங்கள், அல்லது இந்த நம்பரை
உங்கள் மொபைலில் சேமியுங்கள் !!
021 222 8093
61, கச்சேரி - நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
(5265)



புகழின்
தரம் - 5 புலமைப்பரிசில் மாணவர்களுக்கான
மாபெரும் வழிகாட்டற் கருத்தரங்கு
வளவாளர்கள் :
திரு.லோ.விஜேந்திரன் (புகழ் வெளியீட்டு ஆசிரியர்)
திரு.பூ.குகதாசன் (ஓய்வுபெற்ற உதவிக்கல்விப்பணிப்பாளர் - ஆரம்பக்கல்வி, யாழ் வலயம்)
திரு.ஜெ.ஜெயகணேஸ் (ஆசிரியர், யா/புனித பத்திரிசியார் கல்லூரி)
இடம் : College of Physics, பழம் றோட் சந்தி. (கந்தர்மடம் சந்திக்கு அருகாமையில்)
காலம் : 24/07/2016 (ஞாயிற்றுக்கிழமை) (9.00a.m - 1.30 p.m)
நுழைவுச்சீட்டுக்களைப் பெற்றுக்கொள்ளும் இடங்கள்
1) அன்னை புத்தகசாலை - யாழ்நகர்
2) Sarankan Trade Center - யாழ் இந்துக்கல்லூரி முன்பாக
3) மகுடம் புத்தகசாலை - இணுவில்.
கருத்தரங்கு மண்டப நுழைவுக் கட்டணம் - 250/-
மேலதிக விபரங்களுக்கு :-
T.P : 077 411 8950, 077 494 0814
புகழ்
நுழைவுச் சீட்டுக்களை கருத்தரங்கு நடைபெறும் தினத்தன்று மண்டபத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.
(5409)


# வெறுமனே மத்...

தலத்தில் கலந்துரையாடியிருந்தனர்.

இந்த சந்திப்பின் போதே முதலமைச்சரினால் மேற்கண்டவாறு கூறப்பட்டுள்ளது. சந்திப்பு தொடர்பில் முதலமைச்சர் மேலும் கூறுகையில்,

உலக வங்கி சார்பில் இன்றைய (நேற்றைய) தினம் பல அலுவலர்கள் வந்து சதித்திருந்தார்கள். ஒரு தரப்பினர் யாழ் அபிவிருத்தி தொடரபில் கலந்துரையாடி 55 மில்லியன் அமெரிக்க டொலர் எமக்காக உலக வங்கியால் ஒதுக்கப்பட்டுள்ளது என்ற நற்செய்தியை கூறி சென்றுள்ளனர்.

மத்திய அரசோடு மாகாண அரசாங்கமும், மாகாண அரசின் கீழுள்ள பிரதேச சபைகளும், எவ்வாறு அபிவிருத்தி தொடர்பில் நடவடிக்கைகளை ஒன்றாக எடுக்க முடியும் என்பது தொடர்பில் கலந்துரையாடியிருந்தோம். இதன் போது மத்தி - மாகாணத்தை பொருட்படுத்துவதாக இல்லை. தன்னிச்சையாகவே நடவடிக்கை எடுத்து வருகின்றனர் என்ற கருத்தை நாங்கள் அவருக்கு முன்வைத்திருந்தோம்.

மேலும் மத்தி - மாகாணத்தோடு இணைந்து செயற்படும் மனோபாவத்தில் இல்லை எனவும் அவ்வாறு இருந்தால் இவ்வாறன நட வடிக்கைகளை முன்னெடுக்க சிரம மாக உள்ளது எனவுக் கூறினேன்.

நாங்கள் அதிகார பகிர்வு சம்பந்தமாக எதிர்பார்ப்பதனையும், வெறுமனே நாங்கள் மத்தியின் கையாட்களாக வேலை செய்ய முடியாது எனவும் கூறினேன். இதன் போது அவர்கள் இந்தோனேசியாவில் தாங்கள் கண்ட அதிகார பரவலாக்கம் மிகவும் முக்கியமானது. உள்ளூராட்சி மன்றங்கள் கூடிய வலுவோடு செயற்பட வேண்டுமானால் அதிகார பரவலாக்கம் அவசியம் என அவர்கள் கூறினார்கள்.

அதிகார பரவலாக்கம் தொடர்பில் என்னை சந்தித்த உலக வங்கி அலுவலர்களுக்கும் எமக்கும் நல்ல புரிந்துணர்வு உள்ளது. இதனை மத்திய அரசிற்கு தெரிவிப்பதில் தான் பிரச்சினை உள்ளது. இது அவர்களுடைய வேலை. நானும் மத்திய அரசிற்கு பல தடவை கூறியிருந்தேன். எங்களை எங்கள் பிரச்சினைகளை தீர்த்து கொள்வதற்கு உதவியளியுங்கள். எங்களை கட்டுப்படுத்தாதீர்கள் என. இதனை உலக வங்கியினரும் ஏற்றுக்கொண்டார்கள் என முதலமைச்சர் தெரிவித்தார். (செ-4)

# "முகாம்களை...

தினால ஊடகங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை அரசும் மீள்குடியேற்ற அமைச்சும் இணைந்து எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 15 ஆம் திகதிக்குள் 32 நலன்புரி நிலையங்களையும் மூடுவதற்கு முடிவெடுத்துள்ளது.

அந்த வகையில் முகாம்களில் வசிக்கும் 971 குடும்பங்கள் இனம் காணபட்டு அதில் காணி அற்ற 641 குடும்பங்களுக்கும் காணி உள்ள 330 குடும்பங்களுக்கும் வீடுகள் அமைப்பதற்கு நிதியும் ஒதுக்கியுள்ளார்கள்.

ஆனால் இதுவரை விடுவிக்கப்படாத இடத்தில் காணி உள்ள 330 குடும்பங்களும் குடியமரமுடியாத நிலை உருவாகியுள்ளது.

எனவே இதுவரை விடுவிக்கப்படாத மயிலிட்டி, பலாலி, தையிட்டி, ஊரணி உட்பட இன்னும் சில பிரதேசங்கள் விடுவிக்கப்பட்டாலே மிகுதிக்குடும்பங்கள் குடியமருவது சாத்தியமாகும். அத்துடன் காணி அற்ற 641 குடும்பங்களும் எங்கே அமரப்போகிறார்கள் என்பதும் தெளிவில்லாமல் இருக்கிறது. அரசின் கால எல்லைக்கு இன்னும் 25 தினங்களே உள்ள நிலையில் இது சாத்தியப்படுமா என்பது கேள்விக் குறியாகவுள்ளது.

முகாம்களை மூடி விட்டால் மீள்குடியேற்றம் நிறைவடைந்து விடாது வலி. வடக்கில் இருந்து இடம்பெயர்ந்து முகாம்களுக்கு வெளியே நண்பர்கள், உறவினர்கள் வாடகை வீடுகளிலும், இந்தியா, ஐரோப்பிய நாடுகளிலும் மற்றும் இலங்கை தவிர்ந்த பல பாகங்களிலும் பல்லாயிரக்கணக்கில் 8 ஆயிரம் குடும்பங்களுக்கு மேல் வசிக்கின்றார்கள்.

நலன்புரி நிலையங்களை மூடி விட்டு மீள்குடியேற்றி விட்டோம் என்று உலகுக்கு காட்டவா இந்த அவசரம்? நலன்புரி நிலையங்களில் இருப்பவர்களுக்கு பலவகையிலும் உதவிகள் கிடைக்கின்றது, ஆனால் வெளியில் இருப்பவர்களுக்கு எந்த உதவியும் கிடைக்காமல் மிகவும் துன்பத்தில் உளன்று சாவின் விளிம்பில் இருக்கிறார்கள். வெளியில் இருக்கும் மக்களையும் அவரவர் காணியில் இதே காலதத்தில் குடியேற்ற வேண்டும். அல்லது மக்கள் குழம்பிவிடுவார்கள்.

நலன்புரி நிலைய மக்களை மட்டும் குடியமர்த்தினால் அதன் பின்னர் புதிதாக வெளியில் இருக்கும் மக்கள் புதிதாக நலன்புரி நிலையங்களை உருவாக்குவார்கள். இந்த நிலை ஏற்படாமல் சகலரையும் சமகாலத்தில் குடியமர்த்தி நல்லாட்சி அரசாங்கம் நல்லாட்சியை நிலை நாட்டவேண்டுமென கேட்டுக் கொள்கிறோம் என் அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-9)

# மக்களது காணிகளை விடு...

இந்த ஆர்ப்பாட்டகாரர்கள் உயர் பாதுகாப்பு வலயமாகவிருந்து அண்மையில் விடுவிக்கப்பட்ட பகுதிக்குள் நுழைய முயன்றதனால அங்கு பெரும் பதற்றம் ஏற்பட்டிருந்தது.

எனினும் சம்பவ இடத்திற்கு வந்த இராணுவமும், பொலிசாரும் ஆர்ப்பாட்டகாரர்களை விடுவிக்கப்பட்ட பகுதிகளுக்குள் நுழைய விடாது திருப்பியனுப்பியிருந்தனர். இதனால் காங்கேசன்துறை வீதியில உள்ள மாவிட்டபுரம் ஆலயத்திற்கு முன்பாக மேற்படி போராட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது. ஜனநாயகத்திற்கான வடக்கு இளைஞர்களின் ஏற்பாட்டில் நேற்று மாலை ஐந்து மணியளவில் குறித்த போராட்டம் இடம்பெற்றுள்ளது.

இவர்கள் நேற்று காலை வவுனியாவில் அமைந்துள்ள இராணுவ முகாமுக்கு முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டபின்னர், ஓமந்தையிலும், பளையிலும் அமைந்துள்ள இராணுவ முகாம்கள் முன்பாகவும் தொடர்ச்சியாக காங்கேசன்துறையில் அமைந்துள்ள இராணுவ முகாம் முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டனர்.

வாய்களை கறுப்பு நிற துணிகளால் கட்டியவாறு ஊர்வலமாக வந்த இளைஞர் யுவதிகள் இராணுவ முகாம்களுக்கு முன்னால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இராணுவம் மக்களின் காணிகளை அபகரித்துள்ளமையினால் வட பகுதி மக்கள் பல்வேறு துன்பங்களை அனுபவிப்பதுடன், முகாம்களிலும் உறவினர்களின் வீடுகளிலும் வாழ வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

இந்நிலையில் காணிப்பிரச்சினையில் அரசியல் நாடகம் வேண்டாம், இராணுவம் ஆக்கிரமித்த காணிகளை உடனடியாக விடுதலை செய், நல்லாட்சியே மாற்றத்தை நாம் தந்தோம்; மறந்துவிட்டாய் நம் நிலத்தை மைத்திரி அரசே என்ற வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளையும் ஏந்தியவாறு இவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

சுமார் 30 நிமிடங்கள் வரை ஒவ்வொரு இராணுவ முகாம்களுக்கு முன்பாகவும் இப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

காங்கேசன்துறையில் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தின் போது இராணுவம் அண்மையில் விடுவிதத தாக அறிவித்த பகுதிக்குள் ஆர்ப்பாட்டகாரர்கள் சென்ற போதிலும், முன்னர் இராணுவ நுழைவாயில் இருந்த இடத்திற்கு முன்பாக வழி மறிக்கப்பட்ட ஆர்ப்பாட்டகாரர்களை அங் கிருந்து திரும்ப செல்லுமாறு பொலிசாரால் அறிவுறுத்தப்பட்டனர்.

எனினும் இதற்கு ஆர்ப்பாட்டகாரர்கள் மறுப்பு தெரிவித்து உள்ளே நுழைய முயன்ற போது, ஒன்றுகூடுவதற்கான அனுமதி எடுக்கப்படவில்லை ஆகையால் அத்துமீறி உள்ளே சென்றால் கைது செய்வோம் என பொலிசாரால் கூறப்பட்டதை தொடர்ந்து உள்ளே செல்வதனை தவிர்த்து மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் முன்பாக போராட்டம் தொடரப்பட்டது.

மேலும் நல்லாட்சி அரசு என வேஷம் போட்டுக்கொண்டு ஆட்சியில் உள்ள அரசாங்கம் ஒன்றுகூடி ஜனநாயக வழியிலான போராட்டத்தை கூட நடத்த அனுமதிக்கவில்லை.

மாறாக இராணுவமும், பொலிசாரும் எம்மை அச்சுறுத்தும் வகையில் நடந்து கொள்கின்றனர். விடுவித்த காணிகளுக்குள் ஏன் எம்மை செல்ல விடவில்லை? இராணுவத்தின் ஆதிக்கத்தில் தான் இப் போதும் அந்த காணிகள் உள்ளனவா? என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்கள விசனம் வெளியிட்டனர். (செ-4,60)


கார்கள் வாடகைக்கு உண்டு
Axio,Premio,
N16,N15,DAEWOO
தொடர்புகளுக்கு
077 996 1250
(5412)



பணிநிலை வேண்டுகை
யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள இலத்திரனியல், தளபாட காட்சி அறைக்கு,
1. Electrician
2. Showroom Marketing Sales & Executives. (Girls)
3. Data Entry Operators (MS Office, MS Excel, Quick Book)
4. Designer (Corel Draw, Photoshop)
விரும்பத்தக்கது. ஆர்வமுள்ளவர்கள் சுயவிபரக்கோவையுடன் அலுவலகத்திற்கு சமுகமளிக்கவும். மேலதிக விபரங்களுக்கு தொடர்புகொள்ளவும்.
KINGS ELECTRONICS PVT (LTD)
NO 12, POINT PETRO ROAD, JAFFNA. 021 - 454 6699
(C-5271)



பணியாளர் தேவை
சிறிராம் ஜுவல்லர்ஸுக்கு பணியாளர்கள் தேவை. உடன் தொடர்புகொள்ளவும்.
(C-5275)
தொடர்பு :- 0772349933


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.07.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.